
# பாதசாரம்



வல்வை ந. அனந்தராஜ்

# பாதசரம்

(சிறுகதைத் தொகுதி)

வல்வை ந. அனந்தராஜ்

N.Anantharaj
B.A (Hons),M.A.
Dip-In-Edu, Dip-In Journ
SLPS, SLEAS

வெளியீடு :

நந்தி பதிப்பகம்
வல்வெட்டித்துறை

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாதசரம் |
| வகை | : | சிறுகதை |
| ஆசிரியர் | : | வல்வை. ந. அனந்தராஜ்<br>தெணியம்பைத் தெரு,<br>வல்வெட்டித்துறை. |
| பதிப்புரிமை | : | திருமதி அ. வனிதா<br>36, புதிய சோனகத் தெரு,<br>திருகோணமலை. |
| பக்கங்கள் | : | 112 (x + 102) |
| அளவு | : | 1/8 டிமை, 21cm x 14cm |
| அட்டைப்படம் | : | ஓவியர் ரமணி |
| அச்சுப் பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட்.<br>48 பீ, புளூமெண்டால் வீதி,<br>கொழும்பு - 13.<br>தொலைபேசி : 011 - 2330195, 011 - 2478133 |
| வெளியீடு | : | நந்தி பதிப்பகம்,<br>வல்வெட்டித்துறை. |
| விலை | : | ரூபா 160.00 |
| ISBN | : | 955 - 96845 - 4 - X |

# காணிக்கை

சமூகத்தின் விடிவுக்கும், ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்து வரும் அவலங்களுக்கும் விடை காணும் வகையில் சமூக விழிப்புணர்ச்சியை இலக்கிய முயற்சிகளினூடாக ஏற்படுத்த வேண்டுமென்று நான் முயற்சி எடுத்தபோது, என்னை எழுத்துலகில் தடம் பதிக்க வைத்து இலக்கிய உலகுக்கு அறிமுகப் படுத்திய பிரபல பத்திரிகையாளர், சட்டத்தரணி, இதழியல் விரிவுரையாளர் என் மதிப்பார்ந்த அமரர் இ. சிவகுருநாதன் அவர்களுக்கு 'பாதசரம்' என்ற இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

*நெஞ்சம் நிறைந்த*
*நினைவுடன்*
வல்வை. ந. அனந்தராஜ்

N.Anantharaj
B.A (Hons),M.A.
Dip-In-Edu, Dip-In Journ
SLPS, SLEAS

## உள்ளே ..........


| | | பக்கம் |
|---|---|---|
| ✳ | அணிந்துரை | vi |
| ✳ | முன்னுரை | ix |
| 1. | கௌரவ மனிதர்கள் | 01 |
| 2. | கூலிகள் மிரண்டால் | 06 |
| 3. | விக்ரோறியா அரசி | 14 |
| 4. | அந்தச் சுவடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன | 20 |
| 5. | அன்னதானம் | 26 |
| 6. | ஊருக்குப் போவோம் | 34 |
| 7. | பிறந்த நாள் பரிசு | 40 |
| 8. | அடைக்கலம் தந்த வீடுகள் | 46 |
| 9. | பாதசரம் | 52 |
| 10. | ஒரு பிடி அரிசி | 59 |
| 11. | கானல் நீர் | 72 |
| 12. | விலை போகாத மனிதம் | 83 |
| 13. | இரண்டாவது ஆசை | 94 |

# அணிந்துரை

சிறுகதைகள் தொகுதி உருவெடுக்கின்றபோது அச் சிறுகதை களிலொன்றின் பெயரினை அத்தொகுதிக்குத் தலைப்பாக இடுவதும், அச்சிறுகதை சிறந்ததாகவிருப்பதும் இலக்கிய உலகில் நிகழ்ந்து வருகின்றதொன்று. அச்சிறுகதையை முதலில் வாசிப்பது எனது வழக்கத்திலொன்று : இத்தொகுதியிலுங்கூட, தலைப்பாக வுள்ள 'பாதசரம்' சிறுகதையையே முதலில் வாசித்தேன். இத்தொகுதி யிலுள்ள சிறந்த சிறுகதைகளுள் ஒன்றான அப்படைப்பிற்கு வாசகரது மனத்தைத் தொடுகின்ற வல்லமையுண்டு. ஆசிரியரது எழுத்தாற்றலுக்கும் அதுவே சிறந்த சான்றாகவுள்ளது.

'பாதசரம்' தவிர, இத்தொகுதியிலுள்ள எட்டுச் சிறுகதைகள் போர்க்கால வாழ்க்கையின் கொடுமைகளை கோடுகளாகவோ கோலங்களாகவே வெளிப்படுத்துகின்றன. இவற்றுள் நான்கு தொண்ணூறுகளின் பின் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள வன்னிப் பிரதேசஞ் சார்ந்தவை. இவ்விதத்தில் வன்னிப் பிரதேசம் சாராத ஒருவரால் அப்பிரதேசம் பற்றிய அதிக கதைகள் எழுதியிருக்கின்றதான பெருமையை இத்தொகுதியே பெற்றுள்ள தென்று குறிப்பிடலாம். இவ்வன்னிப்பிரதேசக் கதைகளுள், பொருளாதாரத் தடை காரணமாக அப்பிரதேச மக்கள் அனுபவித்து வந்த சொல்லொணாத வறுமையின் கொடுமையை தத்ரூபமாகச் சித்திரிக்கும் 'ஒரு பிடி அரிசி', போராளிகள் மீதான குழந்தையொன்றின் பாசத்தையும் இராணுவம் மீதான போராளிகளின் மனிதாபிமானத்தையும் வெளிக்காட்டும் 'அடைக்கலம் தந்த வீடுகள்', இடம்பெயர்ந்து வன்னிவந்த ஒரு குடும்பம் அம் மண்ணுடன் இசைந்து வாழ முடியாது யாழ்ப்பாணம் திரும்பிச் செல்ல முயற்சித்து அது இயலாமற் போகவே மறுபடி வன்னிக்குத் திரும்புவதைப் படம் பிடிக்கும் 'ஊருக்குப் போவோம்', வீட்டு வேலை செய்வதற்காக ஒரு பிள்ளையை நாகரிகமாக' அழைத்துச் செல்லும் நோக்குடன் 'அறிவுப் பூங்கா மகளிரில்லம்' வந்து, ஷெல்லடிகள்போல் சொல்லடிகளைப் பெற்றுச் செல்லும் ஊடகவியலாளரொருவர் பற்றிய 'விலை போகாத மனிதம்' ஆகிய நான்கு சிறுகதைகளும் இத்தொகுதியிலுள்ள கதைகளுள் முதலிடம் பெறக்கூடியன.

போர்க்காலக் கதைகளுள் இரண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்துடன் தொடர்புபட்டவை. இவற்றுளொன்று முற்குறிப்பிட்ட 'பாதசரம்' மற்றொன்று, 'பிறந்த நாள் பரிசு'. இது மாவீரர் தினச் சூழலில் ஒரு தந்தையாரினதும் மகனதும் முரண்பட்ட செயற்பாடுகளை - முரண்பட்ட இயல்புகளை - யதார்த்த ரீதியாகச் சித்திரிக்க முற்பட்டு ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.

'கானல் நீர்' இத் தொகுதிக்குச் சிறப்புத் தருகின்ற இன்னொரு படைப்பாகும்; முற்றிலும் வேறுபட்ட கருவினைக் கொண்டதாகும். அதாவது, சிங்கள இராணுவ வீரனொருவனின் மனப் போராட்டங்களை வெகுநுட்பமாகவும் அநாயசமாகவும் பதிவு செய்திருக்கிறது இது. இவ்விதத்தில் ஏறத்தாழ இப்பொருள் பற்றிச் சிறப்பாகப் பேசியுள்ள முத்துக்கிருஷ்ணனின் 'தர்மசக்கரம்', புலோலியூர் சதாசிவத்தின் 'மகே அம்மே' என்பவற்றின் வரிசையில் இச்சிறுகதையையும் தயக்கமின்றிச் சேர்த்துக் கொள்ள முடிகிறது.

மேலும், வரலாற்றுக் கதைகள் இரண்டையும் இத்தொகுப்புக் கொண்டுள்ளது. 2ம் உலகயுத்த வேளையிலே யப்பான் இராணுவ வீரனொருவனது தற்கொலை முயற்சி பற்றிக்கூறும் 'விக்டோரியா அரசி', அநுராதபுரகால - விகாரமகாதேவியின் வாழ்க்கைச் சம்பவமொன்று பற்றிய 'இரண்டாவதுஆசை' ஆகிய அவ்விரு கதைகளும் சமகாலத்தின் தேவையோ பத்திரிகைகளின் தேவையையோ ஒட்டி எழுதப்பட்டவை என்றளவில் முக்கியம் பெறுகின்றன!

எழுபதுகளில் எழுதப்பட்ட நான்கு சிறுகதைகளுள் இரண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்துடன் தொடர்புபட்டவை. யாழ்ப்பாணச் சமூகத்தின் நீண்ட கால நோயான சாதிமை காலத்தோடு எய்திய மாற்றத்தைக் காட்டுவது இவற்றுளொன்றாயுள்ள 'அந்தச் சுவடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன' என்பது. மற்றொன்றான 'அன்னதானம்', பயிற்சி பெறுகின்ற ஆசிரியரொருவரின் அழுக்கு மனத்தை அழகான விதத்தில் வெளிப்படுத்துகின்றது. ஏனைய ஒரு சிறுகதையான கூலிகள் மிரண்டால்' மலை நாட்டில் நிகழ்ந்துவரும் பாலியற் சுரண்டல் பற்றியது. விடயம் பழையதேயாயினும் அதற்கெதிராகப் பெண் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுவது புதிதாகவும் புதுமையானதாகவும் காணப்படுகின்றது என்பதில் தவறில்லை.

சுருங்கக் கூறின், மேற்கூறியவாறு உள்ளடக்க ரீதியில் இச்சிறுகதைகள் அனைத்தும் ஆசிரியரது சமூகப் பற்று, சமூகப் பார்வை என்பனவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பது குறிப்பிடத்தக்கது; பாராட்டிற்குரியது.

எனினும், மேற்கூறிய விடயத்தை மட்டும் கவனத்தில் எடுப்பதுடன் நாம் நின்றுவிட முடியாது; திருப்தி எய்தவியலாது. இச்சிறுகதைகளின் வடிவம், உத்திமுறை, மொழி நடை முதலியன பற்றியும் நாம் கவனிக்க வேண்டுமல்லவா?

இவ்வேளை, 'பாதசரம்' சிறுகதை மீண்டும் எனது நினைவிற்குள் புகுந்து கொள்கின்றது. நாற்பதுகளளவிலே (வெள்ளிப்) பாதசரம் என்ற உன்னதமான சிறுகதையொன்றை இலங்கையர்கோன் எழுதியிருந்ததை நாமறிவோம். அது வடமராட்சியில் நிகழ்ந்தது. இப்போது எழுந்த இதுவும் அம் மண்ணிலேதான் நிகழ்ந்தது. யதேச்சையான ஒற்றுமை ஒரு புறமிருக்க, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகால இடைவெளியின் இவ்விரு படைப்புகளும் இருவேறு கால மாற்றங்களின் யதார்த்த வெளிப் பாடுகளாகவுள்ளமை கவனத்திற்குரியது.

அது மட்டுமன்று. இந்நீண்ட காலஇடைவெளியில் சிறு கதையின் இயல்புகள்கூட பல்வேறு மாற்றங்களைக் கண்டு விட்டமை மனங்கொள்ளப்பட வேண்டியதாகிறது. அனைத் தையும்விட, நவீன இலக்கிய வடிவமான சிறுகதை (நாவலும்) உலகப் பொதுவான வடிவமாகும். எனவே, உலகச் சிறுகதையின் மாற்றங்களை நாம் அறிந்து கொள்வது அவசியமாகின்றது. இவற்றை அறிவோமாயின், இவ்விதங்களில், இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் மாற்றங்களை அவாவி நிற்பது தெரியவரும்.

எனினும், எமது பிரபலமான மூத்த தலைமுறை எழுத் தாளர்களே அவை பற்றி விசனப்படாதபோது இவ் ஆசிரியர் அந்நிலைக்குட்படத் தேவையில்லை. ஆயினும், எழுத்தாற்றலும் ஆளுமையும், கடின முயற்சியும், தாகமும் கொண்ட இவரிடமிருந்து இனிவருங் காலத்தில் அத்தகைய ஆரோக்கியமான மாற்றங்களை நாம் எதிர்பார்ப்பதில் தவறெதுவும் இல்லையே!

*வாழ்த்துக்களுடன்,*
**கலாநிதி செ. யோகராசா**
தலைவர், மொழித்துறை.

கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.
*01.05.2004*

# முன்னுரை

ஐரோப்பியர்களின் வருகையுடன் ஈழத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய இலக்கிய வடிவமான 'சிறுகதை' சாதாரண மக்களையும் தொட்டுச் செல்லும் அளவுக்கு வளர்ச்சி பெற்ற ஒரு இலக்கியப் பரப்பாக விளங்குகின்றது.

சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளையும், அவலங்களையும், கொடுமைகளையும் இலாவகமாக எடுத்துக் காட்டக்கூடிய ஒரு வடிவமாக விளங்கும் சிறுகதைகள், பிரச்சினையைத் தொட்டுக்காட்டுவதாக மட்டும் இருக்கக் கூடாது. அவற்றுக்கான தீர்வுகளையும் துல்லியமாக எடுத்துக் கூறும் வகையில் படைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் அந்தச் சிறுகதை காலத்தால் அழியாது நிற்கும்.

அந்த வகையில் யதார்த்தமான உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சிறுகதைகளுக்கு முன்னோடியாக விளங்கும் ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்க்ள் பலரின் படைப்புக்கள் இன்றும் கூட காலத்தையும் வென்று நிற்பதைக் காணும் பொழுது "ஈழத்தவர்" என்று சொல்வதில் எங்கள் ஒவ்வொருவருக்கும் பெருமைதான்.

சமூகத்தின் அவலங்களை எடுத்துக் காட்டி அவற்றினூடாக எமது மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென நான் நினைத்தபோது எனது ஆரம்ப இலக்கிய முயற்சிகளுக்கு 1970களில் களம் அமைத்துத் தந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர் அமரர் இ. சிவகுருநாதன் அவர்கள் எனது வாழ்வில் மறக்கப்பட முடியாத ஒரு மனிதர்! என்னை ஒரு சிறுகதை ஆசிரியராகவும், நாவலாசிரியராகவும் வளர்த் தெடுப்பதற்குக் கலங்கரை விளக்கமாக விளங்கிய அந்த மூத்த பத்திரிகையாளர் தினகரனூடாக ஒரு புதிய எழுத்துப் பரம் பரையையே தோற்றுவித்தவர் என்றால் மிகையாகாது.

"சுமையின் விளிம்பில்' என்ற எனது முதலாவது சிறுகதை 1971இலும் 'மண்ணும் மனிதனும்' என்ற தொடர்நாவல் 1976இலும் தினகரனில் பிரசுரமாகியது தொடக்கம் இன்று வரை சுமார்

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் இலங்கையில் உள்ள பல்வேறு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியாயுள்ளன. இவற்றுள் பல சிறுகதைகள் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பரிசுகளும் விருதுகளும் பெற்றுப் பல வாசகர்களின் நெஞ்சைத் தொட்டவை யாகவும் விளங்குகின்றன.

"அன்னபூரணியின் அமெரிக்கப் பயணம்" தொடங்கி, "ஈழத்தமிழிலக்கியத்தில் அறிவியல் நூல்கள்" வரை பல்வேறு பரிமாணங்களில் எனது இலக்கிய வெளியீடுகள் இருந்தபோதும். 'பாதசரம்' என்ற இந்நூலே எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும். இவற்றை எழுதுவதற்குக் களம் அமைத்துத் தந்த இலங்கையின் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலங்கை வானொலியின் நிர்வாகிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

எனது சிறுகதைகளைத் தொகுப்பாக வெளியிட வேண்டும் என்பதில் முனைப்போடு நின்று என்னை ஊக்குவித்து, அதற்கான ஒரு சிறந்த அணிந்துரையையும் எழுதி இந்நூலுக்கு அணிசெய்த நண்பர் கலாநிதி செ. யோகராஜா (தலைவர், மொழித்துறை, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும், இந்நூலுக்கான உணர்வு பூர்வமான முகப்பு ஓவியத்தை வரைந்து தந்த திரு. ரமணி அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றி என்றும் இருக்கும்!

இந்நூலை அழகுற அமைத்துத் தந்த யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிர்வாகி, மற்றும் அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, எனது 'பாதசரம்' என்ற இச் சிறுகதைத் தொகுப்பினை, எனது இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளித்து ஊக்குவிக்கும், எனது அன்பான வாசகப் பெருமக்களின் கைகளில் தவழவிடுகின்றேன்.

*அன்பன்*

வல்வை. ந. அனந்தராஜ்

தெணியம்பைத் தெரு,
வல்வெட்டித்துறை.
*01.03.2004*

# கௌரவ மனிதர்கள்

வீரகேசரி, தினகரன், ஈழநாடு பத்திரிகை விற்கும் ஒரு பையன் வலது கையில் பெரிய பத்திரிகைக் கட்டு ஒன்றைச் சுமந்தபடி முக்கி முனகிக் கொண்டிருந்தான். அந்த 'பஸ் கியூவில்' என்னைப் போல் பலர் தவமிருந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் 751ம் இலக்க 'பஸ்' வண்டிக்காகக் காத்துக்கொண்டு நின்றேன். கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலங்களாகக் காத்துக் கொண்டிருந்த எனக்கு பதினாறு மைல் தூரத்தையும் நடந்தே போய்ச் சேர்ந்துவிடலாம் போலத் தோன்றியது. அந்த அளவுக்கு எனக்குச் சினம், சினமாக வந்தது. எத்தனையோ பஸ்வண்டிகள் அந்த பஸ் நிலையத்தில் வருவதும், போவதுமாக இருந்தன.

"தோப்பூர் அழகி சுட்டுக் கொலை!... இளம் வாலிபர் தலை மறைவு!... விபரத்தை அறிய இன்றைய மித்திரனை வாசியுங்கள். சுடச் சுடச் செய்தி தரும் மித்திரனை வாசியுங்கள்."

இது இன்னுமொருவனுடைய கம்பீரமான குரல். அவன் கையில் ஒரு பத்திரிகையை விரித்துப் பிடித்தபடி, விற்பனை செய்து கொண்டிருந்தான்.

'பஸ்' வரும்வரைக்கும் உள்ள பொழுதைப் போக்குவதற்காக அங்கு பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த சிறுவனிடம் இருந்து அன்றைய தினசரிப் பத்திரிகை ஒன்றை முப்பத்தைந்து சதம் கொடுத்து வாங்கிக் கொண்டே, பத்திரிகைத் தலைப்புக்களை மேல்வாரியாகப் பார்த்துக் கொண்டு நின்றேன். பத்திரிகையைச் சிறிது நேரம் தான் பார்த்திருப்பேன், அந்தக் கியூவில் எனக்கு

அடுத்ததாக நின்ற மனிதர் கழுத்தை நீட்டிக் கொண்டே என் கையில் இருந்த பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய செய்கை எனக்கு எரிச்சலை ஊட்டியது. அவரிடம் பத்திரிகையைக் கொடுத்து விட்டு, தெருவீதியைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

“எக்ஸ்கியூஸ் மீ... பிறதர்!” நான் நின்று கொண்டிருந்த இடத்திற்குப் பின்புறத்தில், கியூவுக்கு வெளியே இருந்து இப்படியொரு கனிவான குரல் கேட்டது. சடுதியாக என் கவனத்தைக் குரல் வந்த திக்கில் திருப்பினேன். அழகாக ஒட்டத்தைத்திருந்த நீளக்காற்சட்டையும், அதற்கேற்ற வர்ணத்தில் போடப்பட்டிருந்த மடிப்புக் கலையாத ‘ரெற்றோன் கொட்டன்’ சேட்டும், சுருட்டையான தலைமயிரும் அவருடைய கோலத்தை ஒரு உயர்ந்த மனிதனாகக் காட்டிக் கொண்டிருந்தது. என்னுடைய மதிப்பின்படி அவருக்கு முப்பது தொடக்கம் முப்பத்தைந்து வயதுக்குள் இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டேன். அவரைக் கண்டதும் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துக்கொண்டே, அவருடைய முகத்தை நோக்கினேன்.

“நீங்கள் பருத்தித்துறைக்கா போறீங்கள்?” அவரும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டே எனக்கு மிக அருகில் நெருங்கி வந்து கொண்டே கேட்டார்.

“இல்லை நான் வல்வெட்டித்துறைக்குப் போகவேணும்... அது தான் இவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டு நிற்கிறேன்... சேச்...! இந்தப் பஸ் வண்டிக்காக மணித்தியாலக் கணக்காகக் காத்துக்கொண்டு நிற்கிறதிலையே மனுசனுக்கு அரைவாசி உயிர் போய்விடும். அதுவும் எழுநூற்றைம்பத்தி யொன்று பஸ்சுக்கு நிற்கிறதைவிட நடந்தே போய்ச் சேர்ந்து விடலாம் போல் கிடக்குது.... ஆ...! அது சரி... நீங்கள் யார்... எங்கை போறியள்...?”

முன் பின் தெரியாத ஒருவரிடம் சிறிது கூடுதலாகக் கதைத்து விட்டது போன்ற ஒரு உணர்வில் என்னை நானே மனதுக்குள் திட்டிக் கொண்டேன்.

அந்த மனிதர் கேட்ட ஒரு சிறிய வினாவுக்கு, என் நீண்ட நேர அவலத்தின் விளைவாக, ஏற்பட்ட சலிப்பினாலோ என்னவோ, இப்படியொரு பெரிய பதிலை அளித்துவிட்டு, அவரிடமும் சம்பிரதாயத்திற்காக இந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

“நான் யாழ்ப்பாணம் மக்கள் வங்கியிலை வேர்க் பண்ணுறன்... என்னுடைய சொந்த ஊர் கிளிநொச்சி... இண்டைக்கு வெள்ளிக்கிழமையான படியால் ஊருக்குப் போறதுக்காக நிற்கிறன்... பாங்கிலை இருந்து அரை நாள் லீவைப் போட்டு விட்டு வந்து உதிலை கடைக்குப் போயிற்று வாற வழியிலை என்னுடைய பேர்சை எங்கோ தொலைத்துவிட்டேன்...”

அவர் தன்னுடைய சுய சரிதையைச் சுருக்கமாகக் கூறி இப்போதுள்ள தன்னுடைய நிலையையும் பரிதாபமாகக் கூறிவிட்டு என்னுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார்.

அந்தப் பார்வை என்னைக் கதி கலங்க வைத்துவிட்டது... அவருடைய முகத்தைப் பார்க்கவே பாவமாகத்தான் இருந்தது.

பின்னேரம் நான்கு மணியாகியும் கூட, அனல் காற்று வீசிக் கொண்டிருந்தது.... அந்தப் பேருந்து நிலையத்தில் பொருட்களையும், பண்டங்களையும் கூவி விற்கின்ற நடை பாதை வியாபாரிகளின் கூச்சல் ஒரு புறம் எனக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"சே...! சே...! இப்ப காலம் நல்லாக் கெட்டுப் போச்சுது பாருங்கோ... உழைச்சுச் சாப்பிடுறதுக்கு நல்லாப் பஞ்சிப்படுறாங்கள்... அதிலை சில களவாணிப் பயலுகள் 'பிக் பொக்கற்' அடிக்க வெளிக்கிட்டிட்டாங்க... நீங்கள் உங்கடை பேர்சிலை மிச்சங் கவனமாக இருந்திருக்க வேணும் பாருங்கோ... ம்... உங்களுக்கும் இதுகளிலை அனுபவமில்லைப் போல, அதுக்கை எவ்வளவு காசு வைத்திருந்தனிங்கள்?"

"நொற் மச்... ஒன்லி திறீ ஹன்றெட் மட்டும் தான்... சே...! ஜவ்ப்னா, இப்ப ரொம்பக் கெட்டுப் போச்சுது பிறதர்... எல்லாரும் ஆளுக்கொரு பக்கமாக கொள்ளை அடிக்க வெளிக்கிட்டுட்டாங்கள்... டேட்டி ராஸ்கல்ஸ்..."

"முன்னூறு ரூபாவா...?" எனக்கு வியப்பாகத் தான் இருந்தது. முன்னூறு ரூபா என்பதை எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டார்.

அவர் பணத்தைப் பறிகொடுத்த நிலையில், தன்னுடைய கோபம், வேதனை எல்லாவற்றையும் என்னிடமே கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம், நான் அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

அவரைப் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது! அவர் மீதுள்ள அனுதாபம் இரக்கமாக மாறிக்கொண்டு வந்தது.

அவர் எங்கோ பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் போல் என் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

"சே... எதற்கும் அவர் கேட்டால் உதவி செய்வம்..." என்னுடைய மனித மனம் மீண்டும் விழித்துக் கொண்டது.

எங்களிடையே நிலவிய சொற்ப நேர மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அவரே பேசத் தொடங்கினார்.

"பிறதர்...! நான் கேட்கிறேனே என்று தப்பாக நினைக்காதீங்க... இப்ப எனக்கு பஸ்சுக்குப் போறதுக்கு ஒரு இருபது ரூபா தந்து, 'ஹெல்ப்' பண்ணினீங்களெண்டால், மிச்சம் உதவியாக இருக்கும். பிறகு உங்கடை விலாசத்திற்கு 'மணி ஓடரில்' அதை அனுப்பி வைத்து விடுகிறேன்..."

என்னையறியாமலேயே அவர் மீது ஒரு நம்பிக்கையும், இரக்க உணர்வும் அதிகரித்தது. எனது 'பேர்சை' எடுத்துப் பார்த்தேன். அதற்குள் இருந்த தாள் காசுகளையும், சில்லறைக் காசுகளையும் எண்ணிப் பார்த்தேன். அதற்குள் மொத்தமாக நாற்பது ரூபாய் மட்டுமே இருந்தது. அதில் இருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவரிடம் நீட்டிக் கொண்டே என்னுடைய அலுவலக முகவரியையும் கொடுத்தேன்.

நான் கொடுத்த இருபது ரூபாவை அவர் நன்றியுடன் பெற்றுக் கொண்டு அப்பால் சென்று விட்டார். அங்கிருந்து அவர், விலகிச் சென்றதும், யாழ்ப்பாணத்தில் இப்போதெல்லாம் மலிந்து போய்விட்ட 'பிக்பொக்கற்' காரக் கும்பலை நினைத்து மனதுக்குள் சபித்துக் கொண்டேன்.

அவர் போற அவசரத்தில், அவருடைய முகவரியை வாங்காது விட்டு விட்டேனே என்று பின்னர் தான் வருந்தினேன்.

"சே...! அவர் ஒரு கௌரவமான உத்தியோகத்தர்... எப்படியும் அந்தப் பணத்தை அனுப்புவார் தானே...!"

எனக்கு நானே சமாதானத்தைக் கூறிக் கொண்டிருக்கவும், நான் ஏறுவதற்காகக் காத்து நின்ற பஸ் வண்டியும் மெல்ல மெல்ல ஆடியபடி வந்து சேர்ந்தது.

அந்தப் பேருந்து வண்டியைக் கண்டதும் அந்த நினைவே காற்றில் பறந்து போய் விட்டது.

சனத்தோடு சனமாக நானும் முண்டியடித்துக் கொண்டு, ஒரு மாதிரி ஏறி இடத்தைப் பிடித்துக் கொண்டேன்.

இது நடந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது.... அந்தச் சம்பவத்தையே நான் அடியோடு மறந்து விட்டேன்.

ஒரு நாள் இரவு ஏழு மணி இருக்கும்... அதே யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில், எனது நண்பர் ஒருவருடன் வட்டுக்கோட்டைக்குப் போவதற்காக 784ம் இலக்க பஸ் வண்டிக்காகக் காத்துக் கொண்டு நின்றேன்.

"எக்ஸ்கியூஸ் மீ... பிறதர்......!"

நாங்கள் நின்று கொண்டிருந்த கியூவுக்கு எதிர்ப்புறமாக உள்ள கியூவில் இருந்து கணீரென்று ஒலித்த அந்தக் கனிவான குரல் என் சிந்தனையைத் திசை திருப்பியது.

ஆம்...! அன்று 751 ஆம் இலக்க பஸ் வண்டிக்கான கியூவில் நின்ற பொழுது என்னிடம் இருந்து இருபது ரூபாவை வாங்கிச் சென்ற அதே மனிதர் தான், இன்று இன்னொருவருடன், கதைத்துக் கொண்டு நின்றார்.

அதே நீளக் காற்சட்டை.... மடிப்புக் கலையாத 'மாட்டின் சேட்'..., வாரி இழுத்திருந்த சுருண்ட தலை முடி...

அதே கனிவான கதை...! அவருடைய பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு வியப்பாக இருந்தது. அவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்று அந்த மனிதரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டு நின்றார்.

"சே...! இப்படியும் மனிதர்கள் இருக்கின்றார்களா...?"

அந்த இருவரின் சிறிது நேர உரையாடலின் பின்னர், மற்றவர் தன்னுடைய 'சேட் பொக்கற்றில்' இருந்து பணத்தாளை எடுத்துக் கொடுத்தார்.

அந்தச் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு நின்றதும், என் இரத்தம் கொதித்துக் கொண்டு வந்தது! அந்த மெல்லிய இருள் கவிந்த நேரத்திலும் கூட உடல் வியர்த்துக் கொண்டு வந்தது.

"ஐயா...! சாமி...! தர்மம் போடுங்க... ஒரு கண்ணு தெரியாத ஏழைங்க துரை..." எனக்கு மிக அருகில் ஒலித்த அந்த ஈனக்குரல் என் கவனத்தை ஈர்த்தது.

என் முன்னால் நின்ற அந்தப் பிச்சைக்காரன் அவனைவிட உயர்ந்த மனிதனாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தான். பேசாமல், எனது சட்டைப் பையில் இருந்து ஐந்து ரூபாத் தாளை எடுத்து அந்தப் பிச்சைக்காரனின் பேணியில் போட்டுவிட்டு, வியர்த்திருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

*(1974)*

# சுவலிகள் மிரண்டால்...!

“ஏண்டீ...? தங்கம்மா அவேன் இன்னிக்கும் வருவானா?”

“எவண்டீ?”

“நம்ப தோட்டத்துக் கங்காணி தாண்டீ!”

“ஓ... அவனா?... உம், வரட்டும், வரட்டும். இன்னிக்கு அவனுக்குச் சரியான பாடம் படிச்சுக் கொடுக்கணும்.”

அந்த இரு பெண்களும் ஏதோ ஒரு பெரிய செயலைச் செய்யப் போகின்றவர்கள் போல் விரைவாக நடந்து கொண்டிருந்தனர்.

கருமுகில் மலைமுகட்டைத் தழுவிச் சென்று கொண்டிருந்தது. பொழுது, புலர்ந்து வெகு நேரமாகியும், இன்னும் தான் கதிரவனின் ஒளிக்கதிர்கள் அந்தத் தேயிலைத் தோட்டத்தில் பரவவில்லை. பனிமூட்டம் பசிய இலைகளை மூடிக்கொண்டிருந்ததால் தெருவோரங்களில் ஓங்கி வளர்ந்து நின்ற சைப்பிரஸ் மரங்களில் இருந்து நீர்த்துளிகள் விழுந்து கொண்டிருந்தன.

ஏற்றமும், இறக்கமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கும் அந்த றோட்டின் இரு மருங்கிலும் தேயிலைச் செடிகள் பச்சைப் பசேலென்று செழித்துப் பரந்திருந்தன. கடுங்குளிருடன் காற்றும் சேர்ந்து வீசியதாலோ என்னவோ அந்த றோட்டில் சன நடமாட்டமே இல்லாது வெறிச்சோடிப் போய்க் காணப்பட்டது.

அந்தப் பாதை வழியே வேகமாக நடந்து கொண்டிருந்த மீனாட்சிக்கும், தங்கம்மாவுக்கும் முன்னின்ற ஒரே பிரச்சினை, இன்று எப்படியும் கங்காணியைச் சந்தித்து அவனை அவமானப்படுத்த வேண்டுமென்பது தான். ஒரு பெரிய முழுவெற்றிலையை மடித்துப் பாக்குத் துண்டையும் பற்களுக் கிடையில் வைத்துக் கடித்த தங்கம்மாவின் உதடுகள் வேகமாக மூடித் திறந்து கொண்டிருந்தன. அவர்கள் வீடுகளில் பாக்கு வெட்டிகளைக் காண்பது அரிது. அதனால் பெரிய பாக்குகளைப் பலகைக் குத்தியினால் நெரித்துச் சிறுதுண்டு களாக்கி மடியில் வைத்துக் கொள்வார்கள். வாயில் போட்ட பாக்குத் துண்டுகள் ஓரளவு அரைபட்டதும், தன் சுண்டு விரலால் சுண்ணாம்பை அள்ளிக் கடைவாயினுள் வைத்து மென்று கொண்டே சென்றாள்.

"இந்தா மீனாட்சி!... நீயும் ஒரு வாய் போட்டுக்கோ..." கையில் இருந்த வெற்றிலைப் பையை மீனாட்சியிடம் கொடுத்துக் கொண்டே, தன் நடையில் வேகத்தைக் கூட்டினாள்.

"மீனாட்சி!... இன்னிக்கு நாம ஒரு முடிவைச் செய்துட வேணும். எத்தினனாளுக்குத் தான் நாம அவனுகளுக்குப் பணிஞ்சு, பணிஞ்சு வாழணும்? தோட்டத்து ஆளுவளுன்னா அவனுக கேக்கிற எல்லாத்துக்கும் ஒத்துப் போவணுமா?" ஆக்கிரோஷத்துடன் சொல்லிக் கொண்டே சென்ற தங்கம்மா, தன் உதடுகளின் ஓரத்தில் நிரம்பி வழிந்த வெற்றிலைச் சாறைத் தலையைச் சரித்துப் பாதை ஓரத்தில் 'சளார்' என்று துப்பினாள்.

"அய்த்தானே!... நம்பளுக்கும் ரோஷம், மானம் இருக்குத்தானே!... நாம என்ன மலிஞ்ச சரக்குன்னு நெனச்சுட்டு இருக்கானுகள் போலக்கிடக்கு. உம்... கண்ணாலம் கட்டி நாலுக்குத் தேப்பனாயிருக்கான். அதுக்குள்ளாற அவனுக்கு இந்த வயசிலும் இம்புட்டு ஆசையா? அந்தக் கிழட்டுப் பயலுக்கு, அதுவும் குமரியள் தான் வேணுமாக்கும்." மீனாட்சி மோவாய்க் கட்டையை இடித்துக் கொண்டே அருவெறுப்புடன் இப்படி வேடிக்கையாகச் சொன்னதும் தங்கம்மா 'கொல்லென்று' விழுந்து சிரித்தாள்.

மீனாட்சியும், தங்கம்மாவும் வெற்றிலையை வாயில் வைத்துக் குதப்பிக் கொண்டே மலையில் இறங்கிக் கணக்கப்பிள்ளையிடம் பெயர் கொடுத்து விட்டுக் கொழுந்தெடுக்க ஆரம்பித்தனர். அவர்களைப் போன்று கூடைகளை முதுகில் சுமந்தபடி வேறும் பல பெண்கள் கொழுந்தெடுத்துக் கொண்டிருந்தனர்.

இதுவரை காலமும் மலையகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் அடங்கி ஒடுங்கி வாழ்ந்த பெண்களால் எவ்வளவு காலம் தான் இந்த அவல நிலையைத் தாங்கிக் கொள்ள முடியும்? தோட்டத்தில் கொழுந்தெடுக்கும்

இளம் பெண்கள், அதுவும் ஓரளவு அழகிய பெண்கள் என்றால் மேல் மட்டத்தில் உள்ளவர்களின் பெட்டிப் பாம்பாக ஆடவேண்டும். ஆம்!... திருமணமாகி, நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாகி ஓரளவு முதுமை தட்டிய கங்காணி செல்லப்பன் கூட இப்படி மிரட்டித் தன் காரியங்களைச் சாதிக்க முனைந்தால் எப்படித்தான் அவர்களால் அடங்கி இருக்க முடியும்? பொங்கிப் பிரவாகிக்கும் காட்டாற்று வெள்ளத்தை யாரால் தான் அணை போட்டுத் தடுக்க முடியும்?

இப்படித்தான் தங்கம்மாவும், மீனாட்சியும் எத்தனையோ நாட்கள் குமுறிக் கொந்தளித்தபின் இன்று ஒரு தீர்க்கமான முடிவுடன் மலைக்கு வந்திருக்கின்றனர்.

கருமேகங்களுக்கிடையில் சூரியன் மறைந்து நின்று கண்சிமிட்டுவது போல், இடையிடையே தோன்றி மறைந்து கொண்டிருந்தது. பொழுது நண்பகலைத் தாண்டிய பின்னும் கூடத் தங்கம்மாவும், மீனாட்சியும் இன்னும் வேறுசில பெண்களுடன் கொழுந்தெடுத்துக் கொண்டு நின்றனர். மற்றவர்கள் லயன்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

“தங்கம்!... கங்காணி இங்கிட்டுத்தான் வாறாரு போலிருக்கு. ஆ... இப்ப யாரு தான் நமக்குள்ள அவருகூடப் போறது?”

“நீங்க ஒண்ணும் யோசிக்காதிங்கடி... நானே போறன். அப்புறமா நீங்க எல்லாரும் அங்கிட்டு வந்திடுங்க. நா சொன்னதை மறந்திடாதீங்க... என்ன!”

தங்கம்மா இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, அவளுக்குப் பின்புறமாக வந்து நின்ற கங்காணியைக் கண்ட மீனாட்சி, அவளுடைய காலைச் சுரண்டினாள். கங்காணி வந்து நிற்பதைத் தங்கம்மாவுக்குத் தெரிவிக்கவே இப்படிச் செய்தாள். அவள் காலைச் சுரண்டிக் கொண்டே தன் கருவிழிகள் இரண்டையும் சுழற்றினாள்.

“என்னா பொண்ணுகளா? இன்னும் ஊட்டுக்குப் போவாமே என்னா பண்றீங்க?”

“ஹி... ஹி... ஒண்ணுமில்லீங்க, சும்மாத்தான் நின்னுக்கிட்டிருக்கோம். அங்கிட்டுப் போயும் என்னத்தைங்க பண்ணப்போறம்?”

தங்கம்மா பவ்வியமாகச் சொல்லிக்கொண்டே கங்காணியை மேலோட்டமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"என்ன பொண்ணு அப்பிடிப் பார்த்துட்டே நிக்கிறே?" ஒரு அடி முன்னுக்கு வந்த கங்காணியின் குளிர்ந்த வார்த்தை.

"ஒண்ணுமில்லீங்க! நீங்க இன்னும் போகலீங்களேன்னு தான் பார்க்கிறன்."

தங்கம்மா வேண்டா வெறுப்புடன் சிரித்துக் கொண்டே, சேலை முந்தானையால் இடையை இறுக்கமாகச் சுற்றிக் கொண்டு, வலது சுட்டிவிரல் நகத்தைப் பற்களால் கடித்தபடி அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு நின்றாள்.

ஒரு பெண் நாணத்தோடு அழகை மறைக்கும் பொழுதுதான் அவளுடைய பூரண அழகும் வெளிப்படுகின்றது. இது நெடுங்காலம் தவமிருந்து பற்றறுத்த முனிவர்கள் கூடக் கண்ட உண்மை. அவளுடைய நெளிவில் கங்காணி, மகுடிக்கு ஆடும் பாம்பு போல மயங்கினான்.

"ஹி... ஹி... நீ சாப்பாட்டுக்குப் போகலையா? நானும் தான் இன்னிக்கு ஊட்டுக்குப் போகலை. அந்திக்குத் தான் போவேன்." கங்காணி குழைந்து, குழைந்து பேசினான். தள்ளி நின்று இரசித்துக் கொண்டிருந்த மீனாட்சிக்கும், மற்றவர்களுக்கும் சிரிப்புத் தாங்கமுடியாது, தமக்குள் கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்தனர்.

முன்வரிசையில் ஒழுங்கற்று இருந்த பற்களில் ஒன்று வெளிநீட்டிக் கொண்டிருந்தது. வெற்றிலை போட்டே காவிபடிந்து தடித்து, அவை பற்களா என்ற சந்தேகத்தை எழுப்பிக்கொண்டிருந்தது. இடையிடையே கன்னத்தில் விழுந்த சுருக்கங்கள் அவனது முகத்தையே விகாரமாகக் காட்டியது. அகலமான மண்நிறக் கண்கள் சிரிக்கும் பொழுது மூடித்திறந்து அவனுடைய அலங்கோலத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. இழுத்துச் செருகிக் கட்டிய வேட்டியும் அதன்மேல் பாதியை மூடிக்கொண்டிருக்கும் சாம்பல் நிறக் கோட்டும், தலைப்பாகையும் கங்காணியின் உருவத்தைச் சோளக்கொல்லைப் பொம்மையாகக் காட்டிக்கொண்டிருந்தது.

கங்காணியின் இந்தக் கோலம் தங்கம்மாவுக்கும், மீனாட்சிக்கும் ஏன், அவரைப் பார்ப்பவர்கள் எல்லோருக்குமே எந்தளவுக்கு அருவெறுப்பைத் தந்து கொண்டிருந்தது என்பது கங்காணி செல்லப்பனுக்குத் தெரிய நியாயமில்லைத்தானே! ஏதோ அவர்களுக்குத் தானே சக்கரவர்த்தி என்று எண்ணிக்கொண்டிருக்கும் கங்காணியினால் எப்படித் தன் சுயரூபத்தின் சௌந்தரியத்தை உணரமுடியும்?

தங்கம்மா அவர்களுக்குச் சைகை காட்டிக்கொண்டே, அவர்களிடமிருந்து மெல்ல, மெல்ல விலகியபடி, தேயிலைச் செடிகளுக்கப்பால் சென்றாள். கங்காணியின் உள்ளம் குதூகலத்தால் துள்ளியது.

"தங்கம்மா...! நீ ஏன் இப்படிக் குளிர்லேயும், வெயில்லேயும் கஷ்டப்படணும்? நீ தோட்டத்துப் பக்கம் வராமலே ஒன் பேரைப் போட்டுடறேன்... ஹி... ஹி...."

காவி படிந்த பல்லைக் காட்டிக் கொண்டே, குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டே சொன்ன கங்காணியில் உடல் எல்லாம் குலுங்கியது.

"நா மட்டுமில்லீங்களே இப்படிக் காயுறது... நம்பளைப் போலத் தானுங்களே மத்தவங்களும்! எல்லாருக்கும் அப்படிச் செய்துட்டீங்கன்னா எவ்வளவு நல்லமுங்க."

"என்னா பொண்ணு நீ? ஒண்ணும் வெளங்காத கொழந்தையாட்டமா இருக்கிறியே... ஹி... ஹி..." கங்காணி நமட்டுச் சிரிப்புடன், நெளிந்து வளைந்து தன் காவி படிந்த பற்களைக் காட்டியபடி, அவளுடைய கையை மெதுவாகப் பிடித்து வருடினான்.

அவனுடைய அந்தச் செய்கை, தங்கம்மாவின் வெந்த உள்ளத்தைப் பற்றியெரியச் செய்தது.

"யோவ்!... என்னையா கங்காணித் தொரை? கையை எடுய்யா! நம்பகிட்டேயுமா வாலாட்ட வந்திருக்கிறாய்?"

திடீரென இப்படியொரு வார்த்தையைக் கேட்ட கங்காணிக்கு, ஒரு கணம் உலகமே சுழன்று வருவது போல் இருந்தது. தங்கம்மா கண்களில் பொறி பறக்க, அக்கினிப் பிழம்பாகக் கொதித்துக் கொண்டு நின்றாள். அவளைச் சுற்றி மீனாட்சியும், மற்றவர்களும் ஆளுக்கு ஒரு தடியுடன் நின்றனர்.

"அட சோமாறிக் கயிதை!... நீ எத்தினனாளுக்குத் தான் எங்களுவளையே ஏய்ச்சுப் பிளைக்கப் போறே?... நம்பளை யாருன்னுதா நெனச்சுட்டு இருக்கே? இன்னிக்கோட நம்ப பொண்ணுகளோடை சேட்டை விடுறதை உட்டுடு. இல்லேன்னா...! ஒன்ட தோலை உரிச்சு லயத்திலை தொங்கப் போட்டிடுவோம்..... ஆங்..."

ஆத்திரத்துடன் சொல்லிக்கொண்டே சென்ற தங்கம்மா மாறி, மாறி முதுகிலும், தலையிலுமாகக் கையில் வைத்திருந்த எல்லைத் தடியால் ஓங்கி, ஓங்கி அடித்தாள்... அவளைத் தொடர்ந்து மற்றவர்களும் மாறி மாறிப் போட்டார்கள். கங்காணி களைத்து விழும் வரைக்கும் போட்டுக் கொண்டே இருந்தார்கள்.

கங்காணி செல்லப்பன் என்றாலே அந்தத் தோட்டத்தில் உள்ள இளம் பெண்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருக்கும். அவனுடைய உணர்ச்சிகளுக்கும், எண்ணத்திற்கும் அசைந்தால் அவள் மகாராணி தான், கங்காணியைப் பொறுத்தவரையில்! அப்படி இணங்க மறுத்தால் அவர்கள் பாடு அதோ கதிதான். அவர்கள் பெயரில், கொழுந்துகளின் நிறை குறையும். இது மட்டுமல்ல, தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அற்ப, சொற்ப சலுகைகளைக் கூடத் தோட்டத்துரையிடம் இல்லாத, பொல்லாத கதைகளைக் கூறிக் குறைத்து விடுவான்.

தேயிலைச் செடியின் வேர்களுக்கிடையில், களைத்துப் போய்க் கண்டல் காயங்களுடன் மல்லாந்து கிடந்த கங்காணியின் நிலையோ பரிதாபமாக இருந்தது.

"அடியே!... இவனைச் சும்மா விடக்கூடாதுடீ. அந்தப் பெரிய கூடையைக் கொண்டு வாடீ... இதாலை இவனை மூடி, மேலை கல்லைத்தூக்கி வைச்சுட்டுப் போயிடுவம்".

இன்று மலையகத்தில் உடலை வாட்டி, உழைக்கும் பெண்கள்தான் இருக்கின்றார்கள். அதைவிட்டு உடலைவிற்றுப் பிழைக்கும் பெண்கள் மலையகத்தில் இல்லை என்பதைக் கங்காணி உணரத்தவறியது அவன் குற்றமே!

ஆக்கிரோஷத்துடன் ஆர்ப்பரித்து எழுந்த, அந்தப் பெண்கள் கூட்டம், தாம் நினைத்ததைச் சாதித்துவிட்ட மிடுக்கோடு கங்காணிக்கு எதிராகக் கோஷமிட்டபடியே. அந்த மலையில் இருந்தும் இறங்கிக் கொண்டிருந்தது.

மறுநாள்.... அந்தத் தோட்டமெங்கும் இதே கதைதான்! ஒவ்வொரு லயத்தின் மூலைமுடுக்கெங்கும், நகரத்துக் கடைகள், பாடசாலைகள் எங்கும் இதே கதைதான் பரவிக்கொண்டிருந்தது.

வருவது வரட்டும் என்று எதையுமே இலட்சியம் செய்யாதவர்களாய் அன்றும் வழமைபோல், கூடைகளுடன் கொழுந்தெடுக்கப் புறப்பட்டுவந்த தங்கம்மாவையும், மீனாட்சியையும் நோக்கிக் கணக்கப்பிள்ளை ஓடி வந்தார்.

அவர் சற்று வயதானவராக இருந்தாலும், அவருடைய உடலில் இன்னும் தளர்ச்சி ஏற்படவில்லை. வயதின் முதிர்ச்சி அவருடைய வார்த்தைகளில் தொனிப்பதை அவருடன் பழகுபவர்கள் புரிந்துகொள்வார்கள்.

"அம்மா!... அவசரத்தில் என்ன காரியம் செய்துட்டீங்க? சே... சே!... உம்... ஒங்களை வந்தால், அங்கிட்டுத் தொரை வரச்சொல்லி ஆள் அனுப்பிச் சாரம்மா... போங்கம்மா, போயி என்னான்னு கேட்டுட்டு வந்துடுங்க. சே.ச் சே... என்ன பொண்ணுங்களம்மா....."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, தங்கம்மா இதை எதிர் பார்த்தவள் போல் முறுவலித்துக் கொண்டு திரும்பிச் சென்றாள்.

தங்கம்மாவும், மீனாட்சியும் துரையின் பங்களாவில் நுழையும் பொழுது, முன் ஹாலில் உள்ள சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி சுங்கான் பற்ற வைத்துக் கொண்டு துரை இருந்தார். அவருக்கு அருகில் கங்காணி செல்லப்பன் காயங்களுக்குக் கட்டுப்போட்ட நிலையில் நின்று கொண்டிருந்தான். தங்கம்மாவும், மீனாட்சியும் வெற்றுத்தேயிலைக் கூடைகளைச் சுமந்தபடியே முன்னால் வந்து பணிவோடு நின்றனர்.

"ஏய்!... ஒங்களுக்குப் பெரிய திமிரு புடிச்சிட்டுது இல்லையா? பிளடி நொன்ஸ்சென்ஸ்! தோட்டக்காட்டு நாய்கள்!... கூலிக்கு உழைக்கிறது... அதுக்குள்ளே வேலையைத் திருத்த வாறவங்களுக்கு இப்பிடியா செய்யிறது? ஸ்ருப்பிட்ஸ்!"

சுங்கான் புகையை ஊதித் தள்ளிக்கொண்டே, தன் ஆத்திரம் முழுவதையும் அரைகுறைத் தமிழில் கொட்டித் தீர்த்தார். கங்காணி நடந்த சம்பவத்தைச் சோடித்துக் கூறியிருக்கின்றான் என்பதைத் துரையின் பேச்சில் இருந்து புரிந்து கொள்ள இருவருக்கும் நேரம் பிடிக்கவில்லை.

"இல்லை தொரை!.... நேத்திக்கு நாம தோட்டத்திலே கொழுந் தெடுத்துக்கிட்டு நின்னப்போது இவருதானுங்க வந்து..."

தங்கம்மா சொல்ல வாய் எடுத்ததும், துரை தன் சப்பாத்துக் காலால் நிலத்தை உதைத்துக் கொண்டே எழுந்தார்.

"நொன்சென்ஸ்!... கெற்அவுட்!... உம்... போங்க வெளியே. செய்யிறதையும் செய்துட்டுக் காரணம் வேற சொல்ல வந்துட்டீங்களா...? ம்... போங்க ஒங்களுக்கு இங்கிட்டு வேலை கிடையாது." தோட்டத்துரை

சொல்லிக் கொண்டே உள்ளே சென்று விட்டார். திகைத்துப் போய் நின்ற தங்கம்மாவும், மீனாட்சியும் என்ன செய்வதென்றே தெரியாமல் நின்றனர். அந்த மாளிகையே அவர்கள் தலையில் இடிந்து விழுவது போல், கதிகலங்கி நின்றார்கள். தங்கம்மா ஏதோ நினைத்துக் கொண்டவள் போல், திடீரெனக் கங்காணியின் பக்கம் திரும்பினாள்.

"ஏய்!... கங்காணி!... நீ ஏதோ பெரிசாச் சாதிச்சுட்டதாச் சிரிச்சுட்டு நிக்காதே. நம்பளுக்கும் என்ன செய்யிறதுன்னு தெரியும். இன்னிக்கு நாம தோட்டக்காடுகள் தான். ஆனால் என்னிக்குமே மத்தவங்க காலை நக்கி வாழ மாட்டோம். இதை மனசிலை வைச்சுக்கோ. நாம மறுவ இங்கிட்டு வேலைக்கு வாறமா, இல்லையா என்று பார்... ம்... வாடி மீனாட்சி." கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் அவளுடைய குரல் கணீரென்று ஒலித்தது. ஒவ்வொரு வார்த்தையும் அவளுடைய உறுதிநிலையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

மீனாட்சியையும் இழுத்துக் கொண்டு விரைந்து சென்ற தங்கம்மாவைப் பார்த்து அதிர்ந்து போய் நின்ற கங்காணியின் உடல் எல்லாம் பயத்தால் நடுங்கியது. எங்கே துரைக்கு உண்மை தெரிந்து விடுமோ என்று ஏங்கி நின்றான்.

மறுநாள் தோட்டமெங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது. அன்று எவருமே வேலைக்குப் போகவில்லை. மாபெரும் ஊர்வலம் ஒன்று துரையின் பங்களாவை நோக்கிப் பலத்த கோஷமிட்டவாறே வந்து கொண்டிருந்தது.

தேன்கூட்டில் இருந்து கலைக்கப்பட்ட தேனீக்கள் போன்று பாய்ந்து வரும் தொழிலாளர் படையைக் கண்டு கல்லாகச் சமைந்து நின்ற துரைக்கு ஒன்றுமே புரியவில்லை.... திகைத்துப் போன துரை, திரும்பி கங்காணி செல்லப்பனைப் பார்த்தார்!

கங்காணியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது !

*(7.10.1973)*

**N.Anantharaj**
**B.A (Hons),M.A.**
**Dip-In-Edu, Dip-In Journ**
**SLPS, SLEAS**

# விக்ரோறியா அரசி

**1942** ஆம் ஆண்டு...!

அது மனித குலம் மறக்க முடியாத அந்த ஆண்டு.... அதிகார வெறியும், வல்லரசுப் போட்டியும், மண் ஆசையும் நிலைக்களனாகக் கொண்டு, நாடுகளிடையே ஏற்பட்ட முரண்பாடுகளினால் விளைந்த இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்து கொண்டிருந்த அந்தக் காலப்பகுதி...!

மக்கள் அமைதியின்றித் தவித்தனர்...!

பசியும், பட்டினியும் தலைவிரித்தாடியது...!

சாலைகளிலும், சந்துகளிலும் பஞ்சத்தால் சரிந்து மடியும் மக்கள்...!

பீரங்கிகளும், துப்பாக்கி வேட்டுகளும் தேசமெங்கும் அதிர்ந்து கொண்டிருந்தன...!

ஜேர்மனி, இத்தாலி, பிரித்தானியா, யப்பான், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் ஒவ்வொன்றும் தமக்குள்ளே சபதம் எடுத்துக் கொள்கின்றன.

“யார் மிகப்பெரிய வல்லரசாக இந்த உலகத்திலே வலம் வருவது...? யார் கூடுதலான நாடுகளையும், மக்களையும் ஆக்கிரமிப்பது...?”

இது அந்த நாடுகளின் தலைவர்களாக விளங்கிய ஹிட்லர், முசோலினி, சேர்ச்சில் போன்றவர்களிடையே பூதாகரமாக உருவெடுத்த ஆசை... அதுவே பெரும் உலக யுத்தமாக வெடித்துக் கொண்டிருந்தது.

பிரித்தானிய சாம்ராஜ்யம், கீழைத்தேச நாடுகளைத் தன் குடையின் கீழ் கொண்டு வருவதற்கும், தன் அதிகார வரம்பினுள் அடக்கி ஆள்வதற்கும் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்தது.

உலகமெங்கும் போர் வெறி கோர தாண்டவ மாடியது! அதிகார வெறியும், பதவி மோகமும் கொண்ட அரசியல் வாதிகளின் சூழ்ச்சியில் உலக மக்கள் பகடைக் காய்களாகித் தமக்குள் தாமே சண்டையிட்டு அழிந்து கொண்டிருந்தனர்.

கைத்தொழில் புரட்சியின் மூலம், பொருளாதார தொழில்நுட்ப வளர்ச்சியில், தலை நிமிர்ந்து நின்ற பிரித்தானியா, உலகின் முதல்தரமான வல்லரசாகத் திகழவேண்டுமென்ற இலக்கில், தன் முழுப்பலத்தையும் அந்தப் போரிலே காட்டிக் கொண்டிருந்தது.

"ஹ... ஹ... ஹ... ஹா.... இந்தப் பிரித்தானிய சாம்ராஜ்யம், ஐரோப்பாவில் மட்டுமல்ல தென்கிழக்காசியா எங்கும், தன் கொடியை நாட்ட வேண்டும்.... எங்கள் நாட்டின் கப்பற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் சக்தியை, இந்தப் போரின்மூலம், சர்வதேச அரங்குக்கு எடுத்துக் காட்ட வேண்டும்."

தன், நீண்ட குழல் போன்ற சுருட்டை, வாயில் வைத்தபடியே, பிரித்தானியாவின் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், படைத்தளபதிகளுடனான ஆலோசனை மகா நாட்டில் முழங்கிக் கொண்டிருந்தார்.

அவரது, அந்தப் போர் முரசம், பிரித்தானியாவின் மூலை முடக்கெங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

தரை, வான், கடல் வழியாகத் தன் பலத்தைப் பிரயோகித்து முன்னேறிக் கொண்டிருந்த பிரித்தானியாவின் படைப்பிரிவுகளில் சக்திவாய்ந்த ஒரு பிரிவாக விளங்கியது பிரித்தானியாவின் கப்பற்படைப் பிரிவு.

'விக்ரோறியா அரசி' (QUEEN VICTORIA) என்ற. அந்தப் பாரிய ஆயுதம் தாங்கிய போர்க் கப்பல், தென் கிழக்காசிய நாடுகளைத் தன் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவருவது போல், வட அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாகக் கம்பீரமாக வலம் வந்து கொண்டிருந்தது!

அப்பொழுது தான், பொருளாதார வளர்ச்சியில் சிறிது, சிறிதாக முன்னேறிக் கொண்டிருந்த யப்பான், அந்தப் போருக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

ஜேர்மனியும், இத்தாலியும் ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்த காலத்தில் ஆசியாவில் ஒரு பேரரசைக் கட்டி எழுப்புவதற்காக யப்பான் முனைப்போடு நின்றது. கீழைத்தேய குடியேற்ற நாடுகள்

பிரித்தானியா, பிரான்ஸ் அமெரிக்கா ஆகியவற்றின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையினால், பேரரசைப் பெருப்பிக்கும் ஆவலில், யப்பான் இந்த வல்லரசுகளுடனும் போரிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப் பட்டிருந்தது.

யப்பானும், அதன் போர்ப் பலத்தினால் சிங்கப்பூர், ஹொங் கொங், பர்மா, மலேசியா போன்ற பிரித்தானியக் குடியேற்றங்களைக் கைப்பற்றியது.

யப்பானியப் படைகளுக்கெதிராகத் தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து யப்பானியரின் பேரரசுக் கொள்கையை நிர்மூலமாக்கிவிடும் நோக்கத்துடன், நாவன்மை, இராஜதந்திரம், வல்லமை படைத்த வின்ஸ்டன் சேர்ச்சில் நாசிசத்திற்கு எதிரான போரிலே ஒத்துழைக்குமாறு நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

வின்ஸ்டன் சேர்ச்சிலுக்குப் பதிலடி கொடுப்பது போல யப்பானிய தேசமும் போருக்கு முகம் கொடுப்பதற்குத் தயாரானது.

பிரித்தானியப் படைகளின் தொகையுடன் ஒப்பிடுகையில், யப்பானியப் படைகளின் தொகை குறைவாகவே இருந்தாலும் யப்பானிய வீரர்களின் உறுதி குலையாத வீரமும், யப்பானிய மக்களின் தேசப்பற்றும் அன்னிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான ஒரு மாபெரும் சக்தியாகத் தன்னை வளர்த்துக் கொண்டு எழுச்சி பெற்றது!

"ஓ... எங்கள் தாயகத்தை அன்னிய ஏகாதிபத்திய வாதிகளின் கோரப் பிடியினுள் விடமாட்டோம்.... எங்கள் மண்ணின் ஒரு அங்குலத்தையேனும், எதிரிக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம்.... இந்த மண்ணின் கடைசி யப்பானிய வீரன் இருக்கும் வரை இந்த யப்பானிய மண், என்றுமே அன்னியனுக்கு அடிபணியாது...."

ஆம்!... யப்பானிய மக்கள் ஒவ்வொருவரின் உணர்வுகளும் விழித்துக் கொண்டிருந்தன.

அந்தத் தேசத்தின் வீதிகள் எங்கும் போர்ப் பரணி ஒலித்தது!

கட்டிடங்கள், சாலைகள், மரங்கள் எங்கும் யப்பானிய தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டன! தாயகத்தைக் காக்க வேண்டும் என்ற தேசியப் பற்று, ஒவ்வொரு யப்பானிய பிரஜையின் இதயத்திலும், ஆழமாகப் பதிந்து போய் இருந்தது.

வட அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக வலம் வந்து கொண்டிருக்கும் 'குயின் விக்ரோறியா' கப்பலின் முன்னேற்றம் தடுக்கப்படா விட்டால், யப்பான் பாரிய ஒரு இழப்புக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்ற அச்சம், ஒவ்வொரு யப்பானிய வீரனையும் சிந்திக்கத் தூண்டியது.

"ஓ... எனது இழப்பின் மூலம், அந்தப் பாரிய ஆயுதம் தாங்கிய விக்ரோறிய அரசிக் கப்பலைத் தகர்த்தால் என்ன..."

யப்பானிய விமானப்படையைச் சேர்ந்த இளைஞன் சுசுக்கியின் உணர்வுகள், அந்த மண்ணுக்காக விழித்துக் கொண்டன.

"என் தசையும்... என் குருதியும்.... என் ஆவியும் இந்த மண்ணின் மீட்சிக்காகவே அர்ப்பணிக்கப்படுமானால், நான் பெற்ற இன்பம், என் தேசமே பெற்றுவிடும்..."

அந்த யப்பானிய வீரன் சுசுக்கி, தன் உயிரையும், உடலையும் யப்பானிய மண்ணுக்காக அர்ப்பணிக்கத் தயாராகி விட்டான்.

"குயின் விக்ரோறியாக் கப்பலை நான் தகர்த்து விடுகின்றேன். அதற்குத் தங்கள் அனுமதி வேண்டும்..."

படைத் தளபதியிடம் சென்று, சுசுக்கி விடுத்த வேண்டுகோள், அவனை வியப்புக்குள்ளாக்கியது.

"என்ன சுசுக்கி!... நீயா...? அந்தப் பாரிய போர்க் கப்பலைத் தகர்க்கப் போகின்றாய்...? ஹ... ஹ... ஹா... யூ... யூ.... ரூ.... சி மோல் மை டியர் போய்..."

படைத் தளபதிக்கு வந்த சிரிப்பை அடக்கியபடி, அவனை எள்ளி நகையாடுவது போல் கூறினான்.

"ஐயா!.... நான் வெடி குண்டுடன் அந்தக் கப்பலின் புகை போக்கியினுள் குதிக்கப் போகின்றேன்... அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டும்..."

சுசுக்கி, உறுதியாக நெஞ்சை நிமிர்த்தியபடி கூறியதும் அந்தப் படைத் தளபதி திடுக்கிட்டான்.

"ஓ... என்ன இது...? தற்கொலை புரியப் போகிறாயா....? இது, உன்னால் முடியக் கூடிய காரியமா....?"

அதிர்ச்சியடைந்த யப்பானியப் படைத் தளபதியினால் அவன் கூறியதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை.... முற்றாக நிராகரிக்கவும் முடியவில்லை. அந்த இளைஞனை மேலும், கீழுமாகப் பார்த்து தன் புருவங்களை அசைத்தபடி அவனைப் பார்த்தான்.

"இல்லை ஐயா!... நான் என் தாய் நாட்டுக்காக என் உயிரைத் தற் கொடை செய்யப்போகின்றேன்...."

அவனுடைய உறுதியின் முன்னால், தாயக விடுதலைப் பற்றின் முன்னால், நிலைகுலைந்து போன யப்பானியத் தளபதியினால் அதற்குமேல் எதுவுமே கூற முடியவில்லை....

வழமை போல், வட அத்திலாந்திக் சமுத்திரத்தின் வழியாக பிரித்தானியாவின் அந்தப் பாரிய போர்க் கப்பலான ‘குயின் விக்ரோறியா’ புகையைக் கக்கியபடி கம்பீரமாக வலம் வந்து கொண்டிருந்தது.

‘குயின் விக்ரோறியா....’, கடலில் வலம் வந்தால் அந்தப் பிரதேசம் எங்குமே எந்தக் கப்பலுமே நிலை கொள்வதில்லை... அன்றும் கூட, ‘குயின் விக்ரோறியா’, தனிக்காட்டு இராணியாக, அந்தப் பரந்த சமுத்திரத்தில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட விரைந்து கொண்டிருந்தது.

அந்தக் கப்பலின் பேரிரைச்சல், வான் அலைகளையும் கிழித்துக் கொண்டு, யப்பானிய அரசை நடுங்க வைத்தது. யப்பானியத் தளபதிகள் நிலை குலைந்து போய் நின்றனர்

அதேவேளை, வானத்தில் பறந்து கொண்டிருந்த சிறிய விமானம் ஒன்று, மிக உயரத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

ஆரவாரத்துடன் சென்று கொண்டிருந்த விக்ரோறியா கப்பல் கப்டனின் கபீனில் பாட்டும் கூத்தும் நாராசமாய் ஒலித்துக் கொண்டிருந்தன. வானமும், கடலும் இருண்டு கிடந்தன...! கடல் அலைகள் பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்தன!

அந்த இரவின் மடியில், சத்தமின்றி மெதுவாகப் பறந்து கொண்டிருந்த விமானத்தினுள், பாரிய வெடிகுண்டு நிரப்பப்பட்டிருந்தது.

விமானத்தின் ஓட்டியாக இருந்து, நிதானத்துடன் செயல்பட்டுக் கொண்டிருந்த சுசுக்கி, மகிழ்ச்சியோடு தன் தாயகத்தின் விடிவையும், தன் மக்களின் சுபீட்சத்தையும் எண்ணியபடி விமானத்தை மெதுவாகக் கீழ்நோக்கி இறக்கிக் கொண்டிருந்தான்.

விமானத்தை ஓட்டிக்கொண்டிருந்த சுசுக்கியின் கவனம் முழுவதும், ஆடி, அசைந்து விரைந்து கொண்டிருக்கும் ‘விக்ரோறியா அரசியின்’ பாரிய புகைப் போக்கியின் மீது சென்றது.

இன்னும் ஒரு சில வினாடிகளுக்குள், வெடிகுண்டு நிரப்பிய அந்தச் சிறிய விமானத்துடன் புகைபோக்கியினுள் குதித்துவிடுவான்...!

இவை எதுவுமே தெரியாத நிலையில், 'குயின் விக்ரோறியா' பெ...ங்கும் கடல் அலைகளில், நர்த்தனம் ஆடியபடி விரைந்து கொண்டிருந்தது. அந்தக் கப்பலில் இருந்தவர்களின் ஆட்டமும், பாட்டும் இன்னும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

"டமார்...!"

அத்திலாந்திக் சமுத்திரத்தில் கேட்ட, செவிப்பறையைத் தகர்க்கும் அந்த வெடியோசை, பல மைல் தூரம் வரைக்கும் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது.

அந்தக் கடல் பிரதேசம் எங்கும் புகை மண்டலம் பரவிக் கொண்டிருந்தது. கருங்கடல் தீச்சுவாலையினால் சிவப்பாகிக் கொண்டு வந்தது...!

தென்கிழக்காசியாவையே நடுநடுங்க வைத்த, 'விக்ரோறியா அரசி' கப்பல், தீப் பிழம்பாகிச் சிதறிச் சின்னா பின்னமாகிக் கொண்டிருந்தது. ஆதிக்க வெறியுடன், தென்கிழக்காசிய நாடுகளை நசுக்குவதற்குத் திட்டமிட்ட பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் நோக்கம், குறிக்கோள் எல்லாமே அந்தக் கப்பலுடன் சேர்ந்து எரிந்து சாம்பராகிக் கொண்டிருந்தன.

அந்தக் கப்பலின் அழிவைக் கண்டு, யப்பானிய தேசம் ஆர்ப்பரித்தது...!

விக்ரோறியா அரசியின் வருகையினால் அஞ்சி நடுங்கிய நாடுகள் கூட, கைகொட்டி மகிழ்ந்தன!

ஓ... வெடிகுண்டுடன் புகைப் போக்கியினுள் குதித்த, அந்த யப்பானிய வீரன் சுசுக்கியின் உடல் எங்கே...?

அவனை யாரும் தேடவில்லை !.......

அவன் தன் தசையையும், குருதியையும், உயிரையும் அல்லவா தன் தேசத்திற்கு அர்ப்பணித்து விட்டான்....?

அவனது, அந்த வீர மரணத்தின் மூலம், ஒரு புதிய சரித்திரம் எழுந்தது...! உலகமே அவன் வீரத்தைப் புகழ்ந்தது.

ஆம்...! அந்தத் தற் கொடையாளியின் மரணம், அந்தத் தேசத்தின் விடிவுக்கான ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டு விட்டது.

அவனது உடலும்... தசைகளும்... குருதியும்... ஆவியும் காற்றோடு காற்றாகி இன்றும் யப்பானிய தேசமெங்கும் பரவிக் கொண்டே இருக்கிறது.

*(1995)*

# அந்தச் சுவடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன..!

"அடேய் கீழ் சாதிப் பயலே!... இஞ்சை எதுக்கடா வந்தனீ? எளிய நாயள்... உங்களுக்கு எதுக்குக் கோயிலும் சாமியும்? தூ... நாயளே"

பொரிந்து தள்ளிக்கொண்டிருந்தார் ஸ்ரீமான் அழகலிங்கம், ஆம்!... அழகலிங்கம் ஐயாவைத் தெரியாதவர்கள் அந்த ஊரில் யாருமே இல்லையென்று சொல்லலாம். அந்த அளவுக்குப் பிரபல்யமாகி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் அபிமானத்திற்குரியவராகி விட்டவர் தான் அழகலிங்கம்.

இடுப்பிலே சரிகை வேட்டியும், கையில் தங்கக் காப்புமாக, உதடுகள் சிவக்கும் வண்ணம் வெற்றிலையும் வாயில் போட்டுக் குதப்பியபடி அவர் வருவார். இது மட்டுமா? நெற்றியிலே அழகாக வரியிட்ட திருநீற்றுப் பூச்சும், பழைய ஒரு சதம் அளவு வட்ட வடிவான சந்தனப் பொட்டுமாக அழகலிங்கம் ஐயா ஆடி அசைந்து கொண்டு வருவதைப் பார்த்தால், அடடா... இவரல்லவோ பெரிய மனிதர், அதி பக்திமான் என்றெல்லாம் எண்ணத் தோன்றும்.

வீதியிலே நடந்து வரும் பொழுது அவருக்கு வழி விட்டுக் கொடுப்பதற்கென ஒரு சின்னக் கூட்டம், அவரைக் கண்டதும் "ஹி... ஹி..." என்று முப்பத்திரண்டும் தெரிய "வாங்க முதலாளி!" என்று பல்லைக் காட்டும்

கும்பலும், தோளில் இருந்து சால்வையை எடுத்துக் கைகட்டிச் செல்ல ஒரு கூட்டமுமாக... அப்பப்பா, என்ன மரியாதை?... என்ன கௌரவம்?.... இந்தக் கௌரவத்தை நம்பியே அழகலிங்கம் ஐயா, ஒருமுறை நகரசபைத் தேர்தலில் நின்று...! பாவம் அதை ஏன் பேசுவான், பழைய கதை, இதை நினைத்தாலே வயிறு பற்றி எரியுது என்று அவரே தன் நண்பர்களிடம் அடிக்கடி கூறி வேதனைப்பட்டுக் கொள்வார்.

அன்றும் வழமை போல் வருடா வருடம் நடைபெறும் அம்மன் கோயில் உற்சவத்தின் எட்டாம் நாள். அழகலிங்கம் ஐயா, தனக்கே உரித்தான பாணியில் இரண்டு அங்குல அகலமுள்ள சரிகைக்கரை வேட்டியும், தோளுக்கு ஏற்றாற் போல் அளவான சால்வையும், கழுத்திலே பளபளக்கும் தங்கச் சங்கிலியும், கையிலே ஒளி வீசும் தங்கக் காப்புமாக அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவரை யாராவது பார்த்தால், ஏதோ கடுமையான வேலையாக இருக்கின்றார் என்றே எண்ணுவார்கள். அடிக்கடி மற்றவர்களிடம் குற்றேவல்களை ஆணையிட்டுக் கொண்டு நிற்பது தான் அவருடைய அப்போதைய வேலை. இதைவிட அவருக்கு வேறு என்ன தான் வேலை இருக்கப் போகின்றது?

அந்த நேரம் பார்த்துத் தான் கோயில் முகப்பில், வானளாவ உயர்ந்து நிற்கும் கோபுரத்தை அண்ணாந்து பார்த்து வணங்கிக் கொண்டிருந்தான்... மாணிக்கம்!

மாணிக்கம் சாதாரண ஒரு தொழிலாளி தான். கள் இறக்கும் வேலை தான்.

“எடேய்!... என்னடா நான் சொல்லுறது தெரியேல்லையோ? ஏண்டா நீங்கள் எல்லாரும் இஞ்சை வாறியள்? உங்களுக்கு எண்டு ஒரு கோயிலைக் கட்டிப் போட்டு அங்கை போய்க் கும்பிடுங்கோவன்.”

ஆலய முகப்பில், அதுவும் ஆலயத்தின் வெளியே அவன் நின்றதற்காகவே, அழகலிங்கம் இப்படிக் கர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்.

“ஐயா!... நான் போறனுங்க... ஏதோ அந்த அம்மாளாச்சியைப் பார்க்க வேணும் போல கிடந்தது. அது தான் இவ்வளவு தூரம் வந்து விட்டன்...”

“சீக்... பள்ப் பயலே!.... என்னடா கதை வேறை கதைச்சுக் கொண்டு நிக்கிற?.. ஏண்டா டேய்!.. என்ன நீங்களுமாடா பார்த்துக் கொண்டிருக்கியள்?... ம்... ம்”

தனது கூட்டத்தை ஒரு தரம் நோட்டமிட்டவாறே கூறிவிட்டு அழகலிங்கம் கோயிலுக்குள் போய்விட்டார். அவருக்கென்றே இருக்கின்ற கூட்டம், இதற்கு மேலும் பார்த்துக் கொண்டு நிற்குமா? ஆலய வாசல் தூணில் கட்டப்பட்டிருந்த வாழை மரங்கள் பிடுங்கப்பட்டது தான் மாணிக்கத்துக்குத் தெரியும். அதன் பின் நடந்ததை இதயமுள்ள எவருமே பார்த்துக் கொண்டு நிற்க மாட்டார்கள்.

ஆண்டவன் இல்லாத ஆலயத்திற்குள் இவ்வளவு போராட்டமா? ஆம்!... மனித இனத்தின் ஒரு சாராரை நுழையவிடாது தடுக்கும் வரை அந்த ஆலயத்தினுள் ஆண்டவனால் மட்டும் அமைதியுடன் இருக்க முடியுமா? பூட்டி வைத்த கதவுகளுக்கூடாகச் செல்ல அந்த ஆண்டவனுக்கே அனுமதி வழங்க மறுக்கும் அவர்கள், கேவலம் ஒரு வெறும் மனிதன் மாணிக்கத்திற்கா அனுமதி வழங்கப் போகின்றார்கள்?

வெற்றிகரமாகத் தமது கைவரிசையைக் காட்டிய அந்த அடியார் கூட்டம் ஆலயத்திற்குள் சென்றது.... ஆண்டவனைத் தரிசிப்பதற்கு?

மேளங்கள் முழங்கியது!.... நாதஸ்வரம் ஒலித்தது!... இப்படி அன்றைய காலை உற்சவத்தின் பொழுது ஒரே இசைவிருந்து தான். அழகலிங்கம் ஐயாவின் திருவிழா என்றால் இவற்றிற்குக் குறைவே இருக்காது. இதை இரசிப்பதற்கென்றே அந்த ஊரில் உள்ள பக்தர் கூட்டம் திரளுமே.

அபிஷேகம், பூசை முதலியன முடித்து விக்கிரகத்தை இந்திர விமானத்தில் வைத்துத் தூக்கிக்கொண்டு வீதி வலம் வந்தனர் சில அடிய்யார்கள்... அவர்கள் வேறுயாருமல்ல ஸ்ரீமான் அழகலிங்கம் ஐயாவின் தொண்டர்களே!

"தட்டு!..." அழகலிங்கம் உரத்த குரலில் சத்தம் போட்டதும் இதைத் தொடர்ந்து யாகசாலையின் முன் இருந்தும் புறப்பட்ட அம்மன் விக்கிரகம் ஆலயத்தின் வெளிவீதி நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. இந்திர விமானத்தின் இரு திருவாடு தண்டுகளின் முனைகளையும் பிடித்த வண்ணம் ஆடி அசைந்து கொண்டு வருகின்றார் அழகலிங்கம். அவரது நடைக்கு ஏற்ப தாளம் போடுவதுபோல் மேளங்கள் முழங்கியது.

அன்றைய பகல் திருவிழா, மாலை ஐந்து மணியளவில் முடிந்து பக்தர்கள் வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

"இப்பிடியெல்லோ திருவிழா எண்டால் இருக்க வேணும், ச்சூ... எத்தினை கூட்டுப் பெரிய மேளம்!... என்ன மாதிரியாய் இருந்தது."

"ஓமடி பிள்ளை.... இந்த மனுசனுடைய திருவிழா எண்டால் ஒவ்வொரு வரியமும் இப்பிடித்தான். அதோடை உண்ணாணை சொல்லுறன், இந்த மனுசன் இருந்தால்தான் கோயிலும் சுத்தமாயிருக்கும்.

"ஓமணை... நானும் வெள்ளெனப் பார்த்தன்... ஆரோ ஒரு பள்ளனாம், கோயிலுக்கை வந்து விட்டானாம். இவர் தான் அவனை அடிச்சுக் கலைச்சவர். அதை விட்டு இந்தக் காலத்திலை எங்கடை பொடியள் பேசுற பேச்சுக்களைப் பார்த்தால், அவங்கடை பொம்பிளையளைக் கலியாணமும் கட்டிப் போடுவான்கள் போலக் கிடக்கு."

கோயிலுக்கு வந்த, அந்த இரண்டு பெண்களுக்கிடையில் நிகழ்ந்த விமர்சனம் இப்படியே போனது. மாணிக்கமும் ஒரு மனிதன் தான் என்று அவர்களுக்கு எங்கே தெரியப் போகின்றது? இவர்களின் சம்பாஷணை, அழகலிங்கம் ஐயாவின் காதில் விழுந்தது தான் தாமதம் வழுக்கி விழும் பட்டுச் சால்வையை மெல்லத் தூக்கிக் கட்டிக் கொண்டே மிடுக்கோடு அவர்களுக்கு முன்னால் சென்று, மீண்டும் கோயிலுக்குள் சென்றார்.

தேவியின் உற்சவம் முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. மாணிக்கம், இப்பொழுது வழமை போல் தன் வேலைகளைச் செய்யத் தொடங்கிவிட்டான். என்றாலும், பழைய வலி இன்னும் தான் முற்றாக மாறிவிடவில்லை.

அன்று ஆலய முகப்பில் ஆண்டவனை வணங்கவிடாது, துன்புறுத்தப்பட்ட நினைவை மாணிக்கத்தால் இன்னும் நெஞ்சை விட்டு அகற்ற முடியவில்லை. இது அவனுடைய விதி தானோ? இதை விதி என்று சொல்வதைவிட சதி என்று சொன்னால் கொஞ்சம் பொருத்தமாக இருந்திருக்கும்.

தொழிலுக்குப் போய் வந்த களைப்போடு பாயில் மல்லாந்து படுத்திருந்த மாணிக்கம், குறைச் சுருட்டு ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டிருந்தான்.

"மாணிக்கம்!.... மாணிக்கம்!!"

படலை தட்டப்பட்ட ஓசை கேட்டதும், சுருட்டை அரை மனதுடன் அணைத்து வேலி இடுக்கில் செருகி விட்டுப் போய்த் திறந்தான். வாசலில் மிடுக்கோடு நின்றவரைக் கண்டதும், திடீரெனத் திகைத்துப் போய்ச் சில வினாடிகள் அப்படியே அசையாது நின்றான்.

"வாங்க ஐயா!... கன நாளைக்குப் பிறகு இந்தப் பக்கம் வந்திருக்கிறியள்?" தனது உள்ளத்து உணர்ச்சிகளையும், இதயத்தின் சுமையையும் தாங்கிக் கொண்டு எப்படியோ கேட்டு வைத்தான்.

அதே உருவம்!.... வாயில் குதப்பிய வெற்றிலை, கையில் ஜொலித்துக் கொண்டிருக்கும் தங்கக் காப்பு, ஆம்!.... வேறுயாருமல்ல, அழகலிங்கம் ஐயாவே தான் விரதத்தை முடிக்க மாணிக்கத்தைத் தேடிவந்திருக்கிறார்.

"என்னா மாணிக்கம் சௌக்கியமா?.... எப்பிடி உன் பாடெல்லாம் இருக்கு?" இந்தக் கேள்வி மாணிக்கத்தைக் கேலி செய்வது போல் இருந்தது. தன்னுள் குமுறி எழுந்த ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். இந்த வார்த்தைகளை அவனைப் பார்த்துக் கேட்பதற்கு எப்படித் தான் மனம் வந்ததோ?... ஓ... அவர் தான் பெரிய மனுஷராச்சே!

"ஓம் ஐயா!... ஏதோ அந்த ஆண்டவன் புண்ணியத்திலை சுகமா இருக்கிறம்." தனது சுகத்திற்கும், ஆண்டவனையே நம்பும் அந்த ஏழை இன்னும், அந்த ஆண்டவனையே காணவில்லை. காணவோ, அந்தப் பெரியவர்கள் விடவுமில்லை. ஆண்டவன் தான் அந்த ஏழையின் இதயத்தில் குடியிருக்கும் பொழுது, அவனால் எப்படி ஆண்டவனைக் காணமுடியும்?

"மாணிக்கம்!... குறை நினைக்காதை, எனக்கு இப்ப ரெண்டு போத்தல் கள்ளு வேணும். இப்பத்தேலைதான் வீடு வழிய ஒண்டும் விக்கிறதில்லையே... நீங்க எல்லாரும் தவறணையளுக்குக் கொண்டுபோய்த்தானை குடுக்கிறியள்... உன்னட்டை யெண்டால் பிரைவேற்றாக எடுக்கலாம் எண்டு தான் வந்தனான்."

அழகலிங்கம் தனது அவசரத் தேவையை உணர்ந்தோ என்னவோ, தன்னுடைய நிலையைப் பரிதாபமாக எடுத்துக் கூறிக் கொண்டு இருந்தார்.

முன்பெல்லாம் அழகலிங்கம் போன்ற கௌரவக் குடிகாரர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பூசாரிகள் போன்ற சிலரும் அவனை நாடிவந்து இரண்டு, மூன்று என்றெல்லாம் கேட்பார்கள். அவனும் சளைக்காமல் கொடுத்து வந்தான்.

"ஐயா!... நான் என்ன செய்யிறது?... இப்ப நாங்கள் எல்லாத்தையும் கோப்பரேசனுக்கே குடுத்து விடுறம் அதாலை இப்ப வீட்டிலை ஒண்டும் வைக்கிறதில்லை."

மாணிக்கம் வேண்டா வெறுப்புடன் சொல்லிக் கொண்டே அலட்சியமாக நின்றான்.

ஒரு சமுதாயத்தை எந்த அளவுக்கு அடிமைப்படுத்தி, அடக்கி ஒடுக்கி இன்னொரு சமுதாயம் வாழ்ந்து சுகம் அனுபவிக்கின்றதோ, அதே நேரத்தில் அந்தச் சமுதாயத்தில் தோன்றும் விரக்தி நிலை, முற்றிப் பெருகும் பொழுது அதன் வெம்மையை எந்த விரோத சக்திகளாலுமே தாங்க முடியாதென்பது பிரத்தியட்சமாகக் கண்ட உண்மைதானே?

"மாணிக்கம்!... இப்பிடியே எல்லாரும் இல்லையெண்டால் நான் என்ன செய்யிறது? ஒரு மாதிரிப் பார்த்துக் கீத்து ஒரு போத்தல் தன்னும் தாவன்.

எத்தனையோ இடங்களில் பார்த்தும் முடியாத நிலையில் தான் தன்னிடம் வந்திருக்கின்றார் என்பதை மாணிக்கம் புரிந்து கொண்டான்.

"இஞ்சேரும்!... நீங்கள் கேக்கிறியள் எண்டதுக்காக நான் என்ன செய்ய? நாங்கள் கோப்பரேசனுக்குக் கொண்டு போய்க் கொடுக்கிறம்... உங்களுக்கு விருப்பமெண்டால் அங்கை போய்க் குடியுங்கோ. அதுக்கு மேலையும் இஞ்சை நிண்டியளெண்டால்...."

மாணிக்கம் வார்த்தைகளை நீட்டி நிமிர்த்திக் கொண்டே முடியாத நிலையில் முடித்து வைத்தான். அவனுடைய பதில் அழகலிங்கம் ஐயாவின் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் 'சுரீர்' என்று தைப்பது போல் இருந்தது.

மாணிக்கம், இதை ஏதோ ஒரு அர்த்தத்துடன் சொல்லிக் கொண்டே திரும்பினான். ஆம்!... அதில் உறுதியும், தன்மானமும் தொனித்தது. இப்படியொரு குத்தலான பதில் அவனிடம் இருந்து கிடைக்கும் என்பதையே எதிர்பாராத அழகலிங்கம் ஐயாவின் முகத்தில் ஈயாடவில்லை... தொங்கிய முகத்துடன் திரும்பி நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடைய சுவடுகள் காற்றின் வேகத்தால் அழிந்து கொண்டிருந்தன.

ஒரு சமூகத்தை எவராவது நீண்ட நாட்களுக்கு அடிமைப்படுத்தி வைத்திருக்க முயன்றால் அதற்கு எதிராக அந்தச் சமூகம் கிளர்ந்து எழுந்து ஆர்ப்பரிக்கும் என்பதற்குச் சான்றாக மாணிக்கம் நின்றான்.

(சுடர் சஞ்சிகையின் 1976 ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைக்கான பரிசு பெற்ற சிறுகதை)

# அன்னதானம்

அந்த ஊரின் ஒதுக்குப் புறத்தில் அமைந்துள்ள ஆசிரியர் கலாசாலையை, அதன் நுழைவாசலில் நின்றபடியே பார்க்கின்றேன். சுற்றிவர எங்கும் வனாந்தரம் போல் காட்சியளிக்கும் அந்த இடத்தில் இப்படிப் பெரிய கட்டிடங்கள் நிறைந்த ஒரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இருக்கின்றது என்றால் எவரும் ஆச்சரியப்படத்தான் செய்வார்கள்.

"என்னப்பா!... உங்களைப் போலை வாத்திமாருக்குப் பயிற்சி அளிப்பதற்காக அந்தக் காலத்திலேயே இப்பிடிப் பெரிய கட்டிடங்களை யெல்லாம் கட்டி வைத்திருக்கிறார்களோ?..."

என்னுடன் வந்து கொண்டிருந்த நண்பன் சிவஞானத்தைப் பார்த்துக் கிண்டலாகவே கேட்டு வைத்தேன். அவனும் இதே கலாசாலையில் தான் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றான்.

"சே!... சே!... இது கலாசாலைக்கெண்டு கட்டவில்லை... இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பொழுது பிரிட்டிஷ் ஆமிக்காறங்களுக்காகக் கட்டப்பட்ட பங்களாக்களைத் தான் மீண்டும் திருத்தி இதைக் கலாசாலையாக மாத்தியிருக்கிறாங்கள்..."

நான் சிரித்துக் கொண்டே, அந்த நுழைவாசலையும் தாண்டி உள்ளே சென்றேன்.

இந்தக் கலாசாலைக்கு இதுவே எனது முதல் விஜயம்.

கலாசாலையை விட்டுப் பிரிந்து செல்லவிருக்கும் இரண்டாம் வருட மாணவர்களுக்கு, முதலாம் வருட மாணவர்கள் அளிக்கும் விருந்துபசார, கலை நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுப்பதற்காகவே என்னை அழைத்திருந்தார்கள்.

சிவஞானம், முன்னே செல்ல, நான் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன்.

எனது தோளில் தொங்கிக்கொண்டிருந்த 'கமராவை' வலது கையால் தூக்கிப் பிடித்தபடி விழா நடக்கவிருக்கும், நாடக அரங்கிற்குள் சென்றேன்.

அங்கே ஓடி ஆடிக் கொண்டிருந்த ஒரு சில மாணவ ஆசிரியைகளைக் கண்டதும் எரிச்சல்தான் வந்தது. சிலவேளை இவர்கள் விருந்தினர்களை உபசரிப்பதற்காக நியமிக்கப்பட்ட 'வாடகைக் கன்னிகளோ' என்று கூட எண்ணினேன்.

"அவர்களும் இங்கே படிக்கிற ஆசிரிய மாணவிகள்...!" சிவஞானம் கூறிவிட்டுக் கடைக் கண்ணால் என்னைப் பார்த்தான்.

அவர்களில் சிலர் தடித்த உதட்டுச் சாயம், கண்மை என்பவற்றை அள்ளிப் பூசிக் கொண்டு அரை வயிறு தெரியும்படி அங்குமிங்குமாக நடைபயின்று கொண்டிருந்தனர்.

இவர்கள் தான் நாளைய ஆசிரியைகள்...! ஆம்!... இவை போன்ற எத்தனையோ கண்றாவிக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டே எனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் போய் அமர்ந்தேன்.

எனது கமராவைச் சரிசெய்து கொண்டே, அடுத்து நடைபெற உள்ள நிகழ்ச்சிகளைப் படம் பிடிப்பதற்காக என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டேன்.

தலைவர் உரை.... உணவு பரிமாறுதல்... இப்படியே அடுக்கடுக்காக நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நானும் மாறி மாறிச் சுழன்றபடி புகைப்படங்களை எடுத்தபடியே இருந்தேன்.

நேரமோ இரண்டு மணியையும் தாண்டிக் கொண்டிருந்தது.... அங்கே பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும் உணவின் வாசனை மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது.

பசியோ வயிற்றைப் பிடுங்கத் தொடங்கியது. நானும் அவர்களுடன் போய் இருந்து கொண்டு, சாப்பிடலாமா என்று கூட யோசித்தேன்...

விருந்தும், கேளிக்கைகளும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருந்தன... நானும் தொடர்ந்து படங்களை எடுத்து, ஒவ்வொருவரின் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொண்டே இருந்தேன்.

"இந்தாங்க.... போட்டோ கிராபர்.... நீங்களும் உங்கடை செயாரில் போய் உட்கார்ந்து சாப்பிடுங்க... அப்புறமா போட்டோ எடுத்துக்கலாம்..."

எனக்குப் பின்புறமாகக் கேட்ட அந்த மென்மையான கீச்சுக்குரல் கேட்டு என் பார்வையைத் திருப்பினேன்.

"ஓ... குரலுக்கேற்ற கிளி போலத்தான் அழகாக இருக்கிறாள்..." புன்முறுவல் பூத்தபடி என் எதிரே வந்து நின்ற அந்த அழகான பெண்ணைக் கண்டதும், என்னையறியாமலேயே ஒரு கணம் என் மனம் துணுக்குற்றது.

சிறிது நேரம் திருட்டுத் தனமாக அவளுடைய அழகை உச்சியில் இருந்து, உள்ளங்கால்வரை இரசித்துக் கொண்டிருந்தேன். அப்படியிருந்தும் பசி வயிற்றைக் கிளறிக்கொண்டிருந்தது! அந்தப் பெண் காட்டிய இடத்தில் போய் இருந்து சாப்பிட ஆரம்பித்தேன். நேரம் போனதாலோ என்னவோ என் அருகில் இருந்தவர்களைக் கூடக் கவனியாது, வேகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

"பசி வந்தால் பத்தும் பறந்து விடும்" என்பது போல் விறுவிறு என்று அந்த புரியாணிக் கோப்பையைக் காலி செய்துவிட்டேன். இன்னும் கொஞ்சமாவது என்னுடைய கோப்பையிலே போடமாட்டார்களா என்று மனம் அங்கலாய்த்தது. அந்த அளவுக்கு அகோரப் பசி...!

அந்த மண்டப வாசலுக்கு வெளியே சுமார் பத்துப் பதினைந்து சிறுவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

புழுதி படிந்து அழுக்கேறிப்போன தலைகள்; ஒட்டி உலர்ந்த கன்னங்கள்; இடையிடையே கிழிந்து தையல் போட்டும், தொங்கியும் இருந்த ஆடைகளுமாக அவர்கள் காட்சியளித்துக் கொண்டிருந்தனர்.

ஏக்கம் நிறைந்த அந்தச் சிறுவர்கள் எல்லோருமே என்னையே பார்த்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை...!

"சே!... சே!... அது வெறும் பிரமைதானோ?..." கண்களைக் கசக்கியபடி மீண்டும் அவர்களையே பார்த்தேன்.

ஆம்!... அதே கோலம்... அதே ஏக்கங்கள் குடி கொண்ட முகங்கள்...!

தொடர்ந்தும் அந்த இடத்திலேயே அமர்ந்திருக்க எனக்குக் கூச்சமாக இருந்தது... அத்துடன், அந்தச் சாப்பாட்டுக் கோப்பையை அப்படியே வைத்துவிட்டு எழுந்து கைகளைக் கழுவச் சென்றேன்.

விருந்துக் கொண்டாட்டங்களைத் தொடர்ந்து மீண்டும் அந்த மண்டபம் களை கட்டத் தொடங்கிவிட்டது.

பாட்டுக்கள்... அபிநயங்கள்... விகடத் துணுக்குகள்... பலூன் கடத்தல்.. என்று அந்த வைபவம் ஒரே கலகலப்பாகப் போய்க் கொண்டிருந்தது. பழைய படி அவர்களுடைய ஆட்டங்களையும், பாட்டுக்களையும் சளைக்காமல் படம் எடுத்துக் கொண்டே இருந்தேன்.

இடையிடையே என் பார்வை, வாசலில் வேடிக்கை பார்ப்பது போல் நின்ற அந்தச் சிறுவர்கள் மீது சென்றது.

அதே ஏக்கம் குடிகொண்ட முகங்கள்...! உணர்ச்சியற்ற மரக்கட்டைகள் போல் அங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சின்னஞ் சிறிதுகளின் உள்ளங்களிலோ எதையோ பெற்றுவிட வேண்டுமென்ற ஆவல்...! அவர்களும், அந்த இடத்தைவிட்டுப் போவதாகத் தெரியவில்லை...

அவர்கள் மீது ஏனோ தெரியவில்லை, என்னையறியாமலேயே ஒரு இரக்கம் ஏற்பட்டது. வறுமையின் ரேகைகள், அந்தச் சின்னஞ்சிறுசுகளின் முகங்களிலே நிழலாடியது...!

அந்த விழா முடியும் கட்டத்தை நெருங்கி விட்டதை, அங்கே நின்று, கலாசாலை கீதத்தைப் பாடிய பெண்களின் இனிமையான குரல்கள் கட்டியங் கூறிக் கொண்டிருந்தன.

நானும் எனது கமராவை இறுதியாகக் 'கிளிக்' செய்துவிட்டு, மறுபடியும் சரிபார்த்து அதனைத் தோல் பெட்டிக்குள் வைத்துவிட்டுப் புறப்படுவதற்கு ஆயத்தமானேன்.

"மிஸ்டர் மனோகரன்!... கொஞ்சம் வெயிற் பண்ண முடியுமா?... பிளீஸ்.... இன்னும் சில குறூப் போட்டோக்கள் எடுக்கவேணும்..."

என் முன்னால் ஓடி வந்த அந்த இளம் ஆசிரிய மாணவிகளின் குரல் என்னைத் தடுத்து நிறுத்தியது.

"மனோகரன்!... இப்ப அவசர மில்லைத்தானே? இந்தக் கதிரைகளை முந்தி இருந்தது மாதிரி ஒழுங்கு படுத்திவிட்டு வாறம்.... பிறகு ஒன்றாகப் போகலாம்...."

அந்தக் கலாசாலையின் ஆசிரிய மாணவ மன்றத்தின் தலைவர் என்னிடம் வந்து சொல்லிவிட்டு அப்பால் சென்றுவிட்டார்.

நான் அங்குள்ள ஒரு கதிரையை இழுத்துப் போட்டு அதில் இருந்து, அன்றைய தினசரியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கே நின்றவர்கள், அந்த அரங்கை முன்பு போல் இருந்தவாறு ஒழுங்குபடுத்துவதில் முனைப்பாக நின்றனர்.

அந்த வாசலில், அதே சிறுவர்கள், தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது எனக்கு என்னவோ போல் இருந்தது.

எனக்கு அவர்கள் வேடிக்கை பார்ப்பது போல் தெரியவில்லை.... வேறு எதையோ அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அவர்களுடைய ஏங்கும் முகபாவனைகளிலிருந்து உணர்ந்தேன். அந்த நேரத்தில் என்னால், என்னதான் செய்யமுடியும்?... தலையைக் குனிந்து கொண்டே பத்திரிகையைப் படிப்பதுபோல் பாவனை செய்தேன்.

எனது மனம் அவர்களையே வட்டமிட்டது. மீண்டும் நிமிர்ந்து பார்க்கின்றேன். அதே பார்வை!... அதே கோலங்கள்!..!....

"சே!... இவர்கள் எப்படித்தான், ஒரு ஸ்திரமுள்ள, காத்திரமான ஒரு சமுதாயத்தை உருவாக்கப் போகின்றனர்?"

அவர்கள் மீது இயல்பாகவே தோன்றிய என் பச்சாத்தாப உணர்வுகள் வெறுப்பாக மாறி, அந்தக் கண்ணீர்த்துளிகளை உருவாக்கிய கண்மணிகளின் மீதே சென்றது.

"ஆ!... பொடியள்!... இஞ்சை எல்லாரும் வந்து, இப்பிடி வரிசையாய் இருங்கோ...."

திடீரெனக் கேட்ட பெண் குரலால் திடுக்குற்ற நான், குரல் வந்த திக்கை நோக்கினேன். அந்தச் சிறுவர்கள் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு, அந்தப் பெண் காட்டிய இடத்தில் போய் இருந்தனர்.

ஒரு பெரிய அலுமினியச் சட்டியில் நிறையச் சோறு, கறிகளைச் சேர்த்துப் பிரட்டியபடி ஒருத்தி வைத்திருக்க, இன்னுமொருத்தி சேலையைத் தூக்கி இடுப்பில் செருகியபடி, ஒரு சிரட்டையால் வரிசையாக இருந்த அந்தச் சிறுவர்களின், கைகள் நிறையப் போட்டுக் கொண்டு வந்தாள்.

"தம்பிமாரே!... சாப்பிட்டுவிட்டுக் கேளுங்க... பிறகு போடுறம்." ஒரு தடவை போட்டது போதாதென்று, இன்னும் போடுவதாகக் கூறிக்கொண்டே, தள்ளிநின்று அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவர்களும் விழுந்து, விழுந்து கண் விழிகள் பிதுங்கிய நிலையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பதையே பார்த்துக் கொண்டிருந்த என் கண்களை நீர்த் திவலைகள் மறைத்துக் கொண்டிருந்தன.

அவர்கள், ஆவல் அடங்காதவர்களாகச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தனர். சிலர் தாம் கொண்டு வந்த 'பொலித்தீன்' பைகளில் போட்டு நிரப்பிக் கொண்டும் இருந்தனர்.

அவர்களைப் பார்த்ததும் எனக்கே வயிறு நிறைந்தது போலிருந்தது. அதே வேளையில், என் உள்ளத்தில் எழுந்த சந்தேகம் கேள்விக் குறியாக மாறி நின்றது.

மாணவர் மன்றத் தலைவர் குறிப்பிட்டபடி 'குறூப்போட்டோ' ஒன்றை எடுத்தபின் வேலைகளை முடித்துக் கொண்டு ஆயத்தமாக நின்ற சிவஞானத்துடன் புறப்பட்டேன்.

"சிவா!... நீங்கள் எவ்வளவு பேருக்குத்தான் இண்டைக்குச் சாப்பாடு கொடுத்தாலும், அதனாலை பிரயோசனமுமில்லை... ஆனால், பிறகு கடைசியிலை அந்தப் பொடியளுந்தை வயிறு நிறையச் சாப்பாடு போட்டியளே?... அதைப் போலை ஒரு தர்மம், வேறு எதுவுமே இருக்க முடியாதப்பா... றியர்லி ஐ ஆம் வெறி ஹப்பி, சிவா...." கண்களில் நீர் மல்கியவனாக, அவனையும், மற்றைய ஆசிரியர்களையும் பாராட்டிக் கொண்டே நடந்தேன்.

"பாவம் தானே?.... நாங்கள் சாப்பிட்ட நேரம் தொடக்கம் அதிலை நின்று வாய் பார்த்துக் கொண்டு நிற்குதுகள் என்றுதான் அந்தச் சோறைப் போட்டம்..."

அவன் உதட்டிற்குள் சிரித்துக் கொண்டே 'அந்தச் சோறு' என்று, சிறிது அழுத்திச் சொன்னான்.

சந்தியை நோக்கி, அந்தக் கிறவல் பாதை வழியாக இருவரும் நடந்து கொண்டிருந்தோம். என் மனதை உறுத்திக் கொண்டிருந்த அந்தச் சந்தேகத்தைச் சிவஞானத்திடம் கேட்கவா, விடவா என்ற நிலையில் சிறிது தூரம் சிந்தித்த படியே சென்று கொண்டிருந்தேன்.

"என்னப்பா?... கடைசியிலை நாங்க சாப்பிடேக்கை, எங்களுக்கே போதாமல் இருந்த சோறு, பிறகு அந்தப் பொடியளுக்குப் போடுறதுக்கு எப்பிடி வந்தது?"

வயிற்றைத் தடவிக்கொண்டே, என் சந்தேகத்தையும் கேட்டு வைத்தேன்.

சிறிது தூரம் மௌனமாகவே நடந்து வந்து கொண்டிருந்த சிவஞானம், அந்த மௌனத்தைக் கலைத்துக்கொண்டு அவனே சொல்ல ஆரம்பித்தான்.

"மனோ!... வெளியிலை ஒருவருக்கும் சொல்லிப் போடாதை. அது, எல்லாரும் சாப்பிட்டுவிட்டுக் கோப்பைகளில் மிச்சம் வைத்த சோறு தான்...."

"என்ன?... நீ... நீ... என்ன சொல்லுறாய்?" அதிர்ச்சி தாங்காதவனாக அவனைப் பிடித்து உலுக்கிக் கொண்டே கேட்டேன்.

"ஓம்... மனோ!.... இது இஞ்சை நடக்கிற விருந்துகளில் வாடிக்கையாகவே ஆகிவிட்டது.... எங்கடை ஆக்கள் கோப்பைகளில் மிச்சம் வைத்தவற்றைச் சட்டியில் கொட்டி வைத்துவிட்டுக் கோப்பைகளைக் கழுவினனாங்கள். பொடியளைக் கண்டதும் அதை எடுத்து போட்டு விட்டினம்... மனோ!... பிளீஸ் இதை நீ சீரியசாக எடுத்து வெளியிலை சொல்லிப் போடாதை..."

அவன் ஏதோ எல்லாம் சொல்லிக்கொண்டே போனான். என் உடலின் ஒவ்வொரு அங்கமும் நடுங்குவது போன்ற உணர்வில் நெஞ்சை அழுத்திப் பிடித்தேன். சிறிது அளவை மட்டும் சாப்பிட்டுவிட்டு, ஒரு ஸ்ரைலுக்கு மீதியைக் கோப்பைகளில் விடுவது, இப்படியான விருந்துகளில் ஒரு பாஷனாகி விட்டது.

"விரதகாரர் காகத்துக்கு எடுத்து வைச்சுவிட்டுச் சாப்பிடுகிற அந்தப் பெருந்தன்மையைக் கூட, இந்த மனிதப் பிராணிகளிடமும் காட்டியிருக்கக் கூடாதா? சே... கௌரவமான நீங்களே இப்படிச் செய்தால்...?"

அவனுடைய முகத்தைப் பார்க்காமலேயே சொல்லிக் கொண்டு நடந்தேன். அவன் தலை குனிந்தபடியே வந்து கொண்டிருந்தான்.

"சே!... குடுக்கிறதுக்கு விருப்பம் இருந்தால், இப்பிடி ஒரு சோத்தையா அதுகளுக்குக் குடுக்க வேணும்?"

என் வாய் முணுமுணுத்தது. என் கண்களில் இருந்தும் வழிந்தோடிய கண்ணீர், என் குவிந்த கன்னங்களில் விழுந்து உருண்டது!

நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டே, பாதை ஓரமாக உள்ள வயல்வெளியைத் திரும்பிப் பார்த்தேன்.

வயிறார உணவு கிடைத்த ஆனந்தத்தில் அந்தச் சிறுவர்கள், வயல் வெளியின் காய்ந்த வரம்புகளுக்கிடையே நின்று கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

*(1975)*

# ஊருக்குப் போவோம்...!

"இஞ்ச பாரப்பா!... எத்தனை நாளைக் கெண்டு இப்பிடி அகதி முகாமிலை இருக்கிறது...? சரியான ஒரு படுக்கை வசதியோ, சாப்பாட்டு வசதியோ இல்லாமல்..."

அலுப்புடன் நீட்டி இழுத்துக்கொண்டே சொல்லிக் கொண்டிருந்த இராஜேஸ்வரியினால் அந்த 'அகதி' வாழ்க்கையின் அவலங்களைத் தாங்க முடியவில்லை.

மார்கழி மாதப் பனிக் குளிரில் நடுங்கியபடி பள்ளிக்கூடச் சுவரோடு ஒட்டிக் கொண்டிருந்த சுந்தரி, தாயை ஆச்சரியத்துடன் பார்த்தாள்...!

"ஏனம்மா!... எங்கடை ஊருக்குப் போகவேணும் என்று நினைக்கிறியளோ?..."

தாயின் மனக்குறிப்பை உணர்ந்த சுந்தரி, தன்தாய் இராஜேஸ்வரியின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டாள்.

"பின்னை என்ன... எதுக்கும் எங்கடை வீட்டிலை இருக்கிற மாதிரி வருமோ?... எவ்வளவு நாளெண்டு தான் இப்படிச் சீரழியிறது? கெதியாய் ஊருக்குப் போகத்தானை வேணும்..."

"எணேய்!... அம்மா!... இப்ப யாழ்ப்பாணத்திலை ஆமி சுத்தி வளைச்சிருக்கிறாங்கள்... அங்கை மாட்டுப்பட்டிருக்கிற சனமே வெளியை வரத்துடிக்குதுகளாம்... இதுக்குள்ளை நாங்கள் போய் நிம்மதியாய் இருக்கலாம் எண்டு நினைக்கிறியளோ அம்மா..."

சுந்தரிக்கும் ஊருக்குப் போகவேணும் என்று உள்ளூர விருப்பம் இருந்தாலும், அங்கே நடந்த சில சம்பவங்களும், "புதைகுழிகள்" பற்றிய செய்திகளும் இன்னும் அவள் உள்ளத்தில் உறைந்துபோய் இருந்ததால், ஊருக்குப் போவதை நினைத்துப் பார்க்கவே, அவளால் முடியவில்லை.

"ஏன் நாங்கள் இப்ப அங்கை போனால் என்ன... அவன் தானை அது தரலாம், இது தரலாம்... றோட்டுப் போடப்போறம்... கறன்ற் தரலாம்... என்று சொல்லுறாங்கள். இப்ப போகாட்டால் எப்ப எங்கடை ஊருக்குப் போறது?"

அந்த நிசப்தமான இரவையும் கிழித்துக் கொண்டு பரிதவிக்கும் ஒரு சராசரி யாழ்ப்பாணத்துப் பெண்ணாக, இராஜேஸ்வரி தனது அவலத்தை வெளிக்காட்டி கொண்டிருந்தாள்.

வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலை இல்லாப் பிரச்சினை, பொருளாதார நெருக்கடி என்று ஸ்ரீ லங்காவில் வாழும் சிங்கள மக்களிடையே அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்தி, அரச எதிர்ப்பைக் குறைக்க வேண்டுமானால் தமிழ் மக்கள் மீது ஒரு பாரிய படை எடுப்பை மேற்கொண்டு அவர்களது பொருளாதார இலக்குகளையும், விவசாய பிரதேசங்களையும் நிர்மூலமாக்கி அவர்களுடைய உரிமைப் போராட்டத்தை முறியடித்ததாகக் காட்டவேண்டும். இதற்கு ஒரே வழி "சமாதானத்திற்கான யுத்தம்" என்ற ஒரு புதிய கோட்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாண மக்களின் பிரதான பொருளாதார மையமான வலிகாமத்தைக் கைப்பற்றி அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடவேண்டும் என்ற அரசின் திட்டம் படிப்படியாக அரங்கேறத் தொடங்கியது.

இத்தகைய ஒரு தூர நோக்கிலான இராணுவ தந்திரோபாயத்திற் கமைய பிரகடனப்படுத்தப்பட்ட 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை, யாழ்ப்பாண மண்ணின் மீது முடுக்கிவிடப்பட்டுள்ளது.

அத்தகைய பாரிய இராணுவ தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க அஞ்சி காலம் காலமாக வாழ்ந்து வந்த, வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அப்படியே கைவிட்டு, இரவோடிரவாகக் கொட்டும் மழையிலும் இடம்பெயர்ந்து வரலாறு படைத்த ஐந்து லட்சம் மக்களில் ஒருத்தியாக ஓடிவந்த, இராஜேஸ்வரியினால் தொடரும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளவோ, தூர நோக்கில் சிந்தித்துச் செயல்படவோ முடியவில்லை.

"ஏய்!... சும்மா உதிலை இருந்து விசர்க்கதை கதைச்சுக் கொண்டிருக்காதை... நானும் தான் இரண்டு, மூன்று நாளாய்ப் பார்க்கிறன்... வீடு, வீடு என்று பிதற்றிக் கொண்டிருக்கிறாய்... என்ன பெரிய வீடு, உனக்கு வேண்டிக் கிடக்குது...? எங்கடை சனம் படுகிற கஷ்டத்திலை இது பெரிய இழப்போ?..."

அதுவரை அமைதியாக இருந்து, அங்கே நடப்பவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பொன்னம்பலத்தினால், அதற்கு மேலும் வாயை மூடிக் கொண்டிருக்க முடியவில்லை...!

"ஓ... சும்மா, குந்தி இருந்து கதை சொல்லுறது சுகம்... உங்க எல்லாருக்கும் சமைக்கிறதும், ஒவ்வொரு சின்னச் சின்னச் சாமானுக்கும் அங்கை இங்கை என்று தேடி அலையிற கஷ்டமும் எனக்கல்லோ தெரியும்... ஏன் இப்பவும் அங்கை வலிகாமத்திலை சனம் இருக்குது தானே...? உங்களுக்குத்தான் ஒரு..." சொல்லவந்ததைப் பாதியில் நிறுத்தி விட்டாள். அவளுடைய சலிப்பின் உச்சக் கட்டம், கோபமாக மாறிக்கொண்டு வந்தது. இந்த மோதலில் சுந்தரி கலந்து கொள்ளவிரும்பாது, அந்த இடத்தை விட்டு எழுந்து சென்றுவிட்டாள்.

இராஜேஸ்வரியின் பிடிவாதக் குணத்தைப் பொன்னம்பலம் மட்டுமல்ல, சுந்தரியும் அறிந்து வைத்திருந்தாள்.

"சரி!... சரி!... நான் ஒன்றும் கதைக்கேல்லை... நாளைக்கே ஊருக்குப் போவம்... இனிக் கடவுள் விட்ட வழி...."

இராஜேஸ்வரியின் பிடிவாதத்திற்குப் பின்வாங்கிய பொன்னம்பலம் தனது பிடியில் இருந்தும் நழுவியபடி விலகிச் சென்றார்.

சிறுகச் சிறுகச் சேகரித்த பொருட்கள்... அழகழகாக அடுக்கி வைத்த பட்டுச் சேலைகள்... புதிதாக வாங்கிப் போட்ட கவர்ச்சிகரமான 'செற்றி செற்...' தொலைக்காட்சிப்பெட்டி... எவர் சில்வர் பாத்திரங்கள்... ஆசையோடு வளர்த்த பூமரங்கள்... இப்படியே ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்த இராஜேஸ்வரியினால், அந்த இழப்பின் துயரத்தைத் தாங்க முடியவில்லை.

"ஓ வென்று...." கதறியழத் தொடங்கி விட்டாள்.

"எணேய்!... எணேய்!... ஏன் இப்படிக் கத்தி ஊரைக் கூப்பிடுறாய்...? ஊருக்குப் போவம் என்று சொல்லிட்டன் தானை... இஞ்சேர்.... இப்ப உடனேயே வெளிக்கிடு... இரவோடிரவாய் ஊருக்குப் போவம்...."

வெறுப்போடு கூறிய பொன்னம்பலம் தனது உடுப்புக்களை எடுத்து அடுக்கத் தொடங்கியதும் இராஜேஸ்வரியின் கண்களை நம்ப முடியவில்லை...

"என்ன...? அவர் உண்மையாகத் தான் சொல்லியிருக்கிறாரோ...? அப்ப நாங்கள் எங்கடை வீட்டுக்குப் போகத்தான் போறமோ...?" ஆம்!... வீட்டிற்குத் திரும்பப் போகின்றோம் என்ற அந்த இன்ப உணர்வு, அவளுடைய நெஞ்சில் ஒரு நிறைவை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அந்த ஒரு கணத்தில் இருந்து, அவள் இயந்திரமாகத் தொழிற்படத் தொடங்கி விட்டாள்...!

அவர்களுடைய இந்த திடீர் முடிவு சுந்தரிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது... இருவரின் செயலையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இராஜேஸ்வரி புறப்படுவதற்கு ஆயத்தமாகத் தன்னுடைய உடுப்புக்களோடு உடுப்புக்களாக ஒரு வெள்ளைக் கொடியையும் எடுத்து மறைத்து வைத்ததை சுந்தரி கவனித்து விட்டாள்.

"எணேய்!... என்னணை உள்ளை வைச்சிருக்கிறியள்..."

"பிள்ளை!... எதுக்கும் ஒரு பாதுகாப்புக்காக எடுத்துக் கொண்டு போவம்...."

இராஜேஸ்வரியின் வெகுளித்தனத்தைக் கண்டதும், சுந்தரிக்குச் சிரிப்புத்தான் வந்தது.

வலிகாமத்தை இராணுவம் கைப்பற்றியதும், சாவகச்சேரியில் உள்ள ஒரு பாடசாலையில் வந்து தங்கிய நாளில் இருந்து அவர்கள் 'அகதிகள்' என்ற பெயரினால் அழைக்கப்பட்டு வந்தனர்.

அந்த அகதி வாழ்க்கை அவர்களுக்குப் புதிதாக இருந்தாலும், அதுவே அவர்களுடைய வாழ்வாகியும், விட்டது!

அரசு மேற்கொள்கின்ற ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் தமிழ் மக்களை அகதிகள் ஆக்கிவிடுவதில் தான் முற்றுப் பெற்றுக் கொண்டிருக்கின்றன, என்பதை ஒவ்வொரு இடப்பெயர்வுகளும் காட்டிக்கொண்டிருக்கின்றன.

அவர்கள் மூவரும், பாடசாலை அகதி முகாமில் இருந்து புறப்பட்டு, கனகம்புளியடிச் சந்திவரை, முக்கி முனகி நடந்து வந்து விட்டார்கள்.

"சே!... எவ்வளவு எதிர்பார்ப்புகளுடன் வலிகாமத்தில் இருந்து ஓடிவந்தம்... இப்ப ஒரு முடிவு கூடக் காணாமல் எந்த முகத்தோடு திரும்பப் போறம்... எவ்வளவத்தை இழந்தம், எத்தனை பேரைப் பலிகொடுத்தம்... இதற்காக எத்தனை ஆயிரம் போராளிகளை விலை கொடுத்தம்....?"

பொன்னம்பலத்தின் நொந்துபோன உள்ளத்தை, ஏதோ ஒரு உணர்வு மேலும் உறுத்தியது போல் இருந்தது... அவரது இதயம் 'படபட' வென்று அடித்துக் கொண்டிருந்தது!

பயத்தினாலா அல்லது முதன் முதலில் தானே அந்தத் தவறைச் செய்கின்றார் என்ற குற்ற உணர்வினாலா?... அவருடைய நெஞ்சு கனத்துக் கொண்டிருந்தது...

பொன்னம்பலத்தினால், அந்த இரண்டுக்கும் இடையில் அதிக வேறுபாட்டைக் காணமுடியவில்லை. அந்த இரவு நேரத்தில் ஏன் இப்படி வெளிக்கிட வேண்டும், என்று அவர் தனக்குத் தானே கேட்டுக் கொண்டிருந்தார்.

"இது பீ.பீ.சி. லண்டன்.... உலக சேவையில் இருந்து முழங்கும் தமிழோசை..."

கனகம்புளியடிச் சந்தியில் இருந்து, கப்புது நோக்கி வந்த பொன்னம்பலத்தை, அந்த றோட்டின் ஓரமாக உள்ள வீட்டில் இருந்து ஒலித்த பி.பி.சி. ஆனந்தியின் கணீரென்ற குரல் தடுத்து நிறுத்தியது... அவரைத் தொடர்ந்து பெட்டி படுக்கைகளையும், சமையல் பாத்திரங்களையும் தூக்கி வந்து கொண்டிருந்த இராஜேஸ்வரியும், சுந்தரியும் அப்படியே நின்று, அந்தச் செய்தி அறிக்கையைக் கேட்கத் தொடங்கினர்.

ஸ்ரீ லங்கா அரசின் செய்தித் தணிக்கையினால், இங்கே எமது சொந்த மண்ணில் நடப்பவற்றைக் கூட லண்டனில் இருந்தும், மணிலாவில் இருந்தும் தானே கேட்டு அறிய முடிகின்றது.

அவர்கள் அந்த இடத்திற்கு வந்து சேரவும், செய்தியரங்கத்தில் இலங்கைச் செய்திபற்றிய குறிப்புக்கள் ஒலிக்கத் தொடங்கின. இலங்கைச் செய்தி என்றதும், இன்னும் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்கத் தொடங்கினார்கள்.

"மட்டக்களப்பில் அதிரடிப்படையினர் மீது, மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து, பஸ் வண்டியில் பயணம் செய்த குழந்தைகள், பெண்கள் உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்."

உலக சேவையில் இருந்தும் முழங்கிக் கொண்டிருந்த அந்தச் செய்தியறிக்கையைக் கேட்டதும். பொன்னம்பலம், அதிர்ந்து போய் இராஜேஸ்வரியை அந்த இருட்டினூடாக ஒளிவீசிக் கொண்டிருந்த நிலவொளியில் பார்த்தார்... அவளுடைய முகமும், பேயறைந்தது போல் இருந்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை.

இராஜேஸ்வரி, தன்னுடைய தலையில் இருந்த உரப்பை மூட்டையை அப்படியே கீழே இறக்கி வைத்துவிட்டுத் தன் கணவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.

"ஓ... இது தான் நாளைக்கு எங்களுக்கும் வலிகாமத்திலை நடக்கும்... இஞ்சரப்பா... எங்கடை குமர்ப் பிள்ளையையும் இப்ப அங்கை கூட்டிக் கொண்டுபோய் வயிற்றிலை நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து சாவதை விட, இப்படியே வன்னிக்குப்போய் எங்கடை புதுவாழ்வைத் தொடங்குவம்... மானம், மரியாதையோடு எப்ப போகமுடியுமோ அப்ப ஊருக்குப் போவம்...."

இராஜேஸ்வரியின் அந்த அர்த்தமுள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றும், பொன்னம்பலத்தை மெய் சிலிர்க்க வைத்தது.

"எணேய் அம்மா!... அப்ப வெள்ளைக் கொடியை என்ன செய்யப் போறியள்?..."

தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்கியபடி சுந்தரி, தாயை வேடிக்கையாகக் கேட்டாள்.

"பிள்ளை!... வெள்ளைக் கொடி துணியிலை மட்டுமில்லை... ஒவ்வொருவர் மனசிலை தான் இருக்கவேணும்... திரும்புங்கோ நாளைக்கே வன்னிக்குப் போவம்...."

அவர்களின் முன்னால் அமைதியாகக் கூறிக்கொண்டு நின்ற இராஜேஸ்வரி மீண்டும் தான் கொண்டுவந்த மூட்டைகளைத் தூக்கினாள். ஆம்!... ஒரு புது வாழ்வைத் தொடங்குவதற்கு ஆயத்தமான ஒரு யாழ்ப்பாணக் குடும்பம் வன்னியை நோக்கி நகருகின்றது.

*(24.12.1995)*

# பிறந்தநாள் பரிசு

"உவை சும்மா பந்தலைப் போட்டுச் சிலவழிக்கிறதுக்கும் மாவீரர் நாள் எண்டு அநியாயமாச் சிலவழிக்கிறதுக்கும் நாங்கள் ஒரு நாள் சம்பளம் குடுக்க வேணுமே?"

பொன்னம்பலம் மாஸ்ரர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

மாவீரர் நாள் ஏற்பாடுகள் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளுக்கு முன்னால் உள்ள புற்கள், பற்றைகளை வெட்டி, எரித்துச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்! .... தமது வீடுகளில் கொண்டாட்டங்களை நடத்துவது போன்ற உணர்வில், அந்தப் பணிகளில் தம்மை இதய சுத்தியோடு இணைத்துச் செயல்பட்டனர்.

அந்த வேளையில், ஒவ்வொரு அரச, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்களும் தத்தமது சம்பளத்தில், ஒரு நாள் வேதனத்தைக் கொடுத்து உதவுவதாகக் கேள்விப்பட்டதும், அவரால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை.

அந்தக் கல்லூரியின், ஆசிரியர் ஓய்வு அறை, அன்றும் வழமைபோல் கலகலப்பாகக் காணப்பட்டது...

பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள்; கரம்போட் விளையாடிக் கொண்டிருந்தவர்கள்; மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்தவர்கள்... என்று ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்தமான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்!

இடைவேளை நேரமானதால் மாணவர்களின் கூச்சலும், கும்மாளமும் ஒருபுறம் காதைப் பிளந்துகொண்டிருந்தன!

அந்த இரைச்சலின் மத்தியிலும், பொன்னம்பலம் மாஸ்ரரின், கர்ணகடூரமான குரல் கேட்டு, அந்த ஓய்வு அறையில் இருந்த ஆசிரியர்கள் எல்லோரும் திகைத்துப்போய், அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

“இஞ்சை பாருங்கோ!.... நாங்கள் இதைச் சும்மா விடக்கூடாது. உவங்கள் இண்டைக்கு ஒரு நாள் சம்பளம் தா, எண்டு கேப்பாங்கள் இன்னும் கொஞ்ச நாள் போனால், ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் சம்பளத்தைத் தரவேணும் எண்டு கேட்பாங்கள்... இதை ஆரும் தட்டிக் கேக்க முடியாவிட்டால், நாளைக்கு எங்கடை நிலை என்ன?... உதுக்கு ஒரு முடிவு கட்டவேணும்....”

அங்கே இருந்த ஆசிரியர்கள் எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்ததும், பொன்னம்பலம் மாஸ்ரரின் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது!

இன்னும் சிறிது உரக்கச் சத்தமிட்டபடி ஒரு இடத்தில் இருப்புக் கொள்ள முடியாத நிலையில், அங்குமிங்கும் கைகளை விசிறியபடி நடந்து கொண்டிருந்தார்.

“ஓம் மாஸ்ரர்! நீங்கள் சொல்லுறதும் சரிதான் இப்ப இருக்கிற கஷ்டத்துக்குள்ளை, எங்கடை இந்தக் குறைஞ்ச சம்பளத்திலை ஒரு நாள் வேதனத்தைக் கழிக்கிறதெண்டால் யோசிக்கத்தான் வேணும்.”

அவருக்கு அருகில் இருந்து ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த தர்மலிங்கம், இரண்டும் கெட்டான நிலையில் ஒத்தூதிக் கொண்டிருந்தார்.

“மாஸ்ரர்!... உங்கடை மூத்த மகன்ரை தபால் கொஞ்ச நாளா வரேல்லை எண்டு சொல்லிக்கொண்டிருந்தியள்.... இப்ப எப்படியாம் ஆள்?...

அந்தச் சம்பாசணையைத் திசை திருப்பிவிடுவதுபோல், தூரத்தில் இருந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்த, அந்த இளம் ஆசிரியரான புஸ்பராஜா சிரித்துக்கொண்டே, பொன்னம்பலம் மாஸ்ரருக்குப் பக்கத்தில் வந்து இருந்தார்.

பொன்னம்பலம் மாஸ்ரர், அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தார்...

"ஓமடா தம்பி! இப்ப பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம் அது, இது எண்டு வாறதாலையோ என்னவோ, சுவிசிலையிருந்து எங்கடை சனத்தைத் திருப்பி அனுப்பப் போறாங்களாம். அதுதான் கொஞ்சம் யோசனையாக் கிடக்கு... இஞ்சை சண்டை நடந்தால் தானை, அவங்களும் அங்கை வைச்சிருப்பாங்கள்..."

பொன்னம்பலம் மாஸ்ரர், தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் பொழுதே, அவருடைய உள்ளத்தில் ஏக்கம் சூழ்ந்தது.

"இந்தச் சந்திரிக்கா வந்ததாலை...."

அவர் உதட்டுக்குள் முணு முணுத்துக் கொண்டிருந்தார். பொன்னம்பலம் மாஸ்ரர் கடந்த முப்பது வருடங்களாக இதே கல்லூரியிலே தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வருவதால், மூத்த ஆசிரியர் என்ற வகையில், அங்கு எல்லோராலும் கௌரவமாக மதிக்கப்பட்டார்.

அவருக்கு இருப்பதோ மூன்று ஆண்பிள்ளைகள், மூத்த மகன் சுவிட்சலாந்திலும், இரண்டாவது மகன், கனடாவிலும் அகதியாகப்போய், வேலைபார்க்கின்றார்கள்...

இளையவன்... அவருடைய கடைக்குட்டி, இதே கல்லூரியிலேயே எட்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கின்றான்.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த பயங்கரக் குண்டு வீச்சினால், சேதமாகி, அழிக்கப்பட்ட யாரோ ஒருவரின் வீட்டின் புகைப்படத்தை வாங்கி அதை விதானையார் மூலம், தன்னுடைய வீடு என்று உறுதிப்படுத்திக் கொண்டுபோய்த் தூதரகத்தில் காட்டி, அகதி என்ற பெயரில் ஒருமாதிரிக் கனடாவுக்கு அவரது இரண்டாவது மகனை அனுப்பிவைத்து இரண்டு வருடம் முடிந்துவிட்டது. இப்பொழுது அவனுக்கு கனடியன் பிரஜாவுரிமையும் கிடைத்து லட்சம் லட்சமாக உழைக்கிறான்.

இவர்களைவிட, வீட்டில் அவரது மனைவி பாக்கியத்தைத் தவிர வேறு பெரிதாகச் சொந்த பந்தம் என்று யாரும் அவருக்கு இல்லை,

அவருடைய இரண்டு மகன்களும், சுளை சுளையாக அனுப்புகின்ற வெளிநாட்டுப் பணங்களை அப்படியே ஒரு சதம் கூட எடுக்காது வங்கியில் வைப்புச் செய்து விடுவார்.

"என்னப்பா எல்லாத்தையும் பாங்கிலை போட்டால், செலவுக்கு என்ன செய்கிறது?"

பாக்கியத்தின் இந்த வேடிக்கையான பேச்சு அவருக்கு எரிச்சலைத்தான் கொடுத்தது.

"பாக்கியம்! என்ன விசர்க்கதை கதைக்கிறாய்... ஏன், என்ரை சம்பளம் என்ன கரிப்பிடிச்ச காசே எதுக்கும் பின்னுக்குத் தேவைப்படும் கண்டியோ?... இந்த விசயத்திலை மட்டும் நீ தலையிடக்கூடாது...."

இந்த அதட்டலுடன், பாக்கியம் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டாள். அதற்குப் பிறகு அவள், அந்தப் பணத்தைப் பற்றி எதுவுமே, வாய் திறந்து கேட்பதில்லை.

அவருடைய பிள்ளைகளோடும் அவரது ஆசைகள் எதிர்பார்ப்புக்களோடும், அந்தப் பணமும் வட்டியும் சேர்ந்து வளர்ந்து கொண்டே வந்தது!

"டாண்... டாண்..." அன்றைய நாளின் மாலை நேர வகுப்புகளும் முடிந்து, கல்லூரிவிடுவதற்கான மணி கேட்டதும், பொன்னம்பலம் மாஸ்ரர், அவசர, அவசரமாக அலுவலகம் சென்று, தன் விடுகைக்கான நேரத்தைப் பதிந்து விட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு, வீட்டை நோக்கி, விரைந்து கொண்டிருந்தார்....

"என்ன மாஸ்ரர்! அவசரமாப் போறியள் போல கிடக்கு"

அவருடன் வெளியேறிய தர்மலிங்கம் மாஸ்ரரின் குரல் கேட்டுத் திரும்பினார்.

"ஓம்... ஓம்... நாளைக்கு என்ரை கடைக்குட்டிக்குப் பிறந்த நாள்... அதுக்கு ஆயத்தப்படுத்த வேணும். இப்ப வீட்டிலை இருக்கிறது இந்த ஒரு பிள்ளைதானே... அதின்ரை ஆசைப்படி எல்லாம் செய்து குடுக்கவேணும்..."

"ஓ... சொப்பிங் போறியள் போல...."

தர்மலிங்கம் மாஸ்ரரின் குரல் காதில் விழுந்ததோ, என்னவோ, பொன்னம்பலம் மாஸ்ரர் அதைக் காதில் போட்டுக்கொள்ளாதவராகச் "சைக்கிளின் பெடல்" கட்டையைச் சிறிது அழுத்தி மிதித்துக் கொண்டே, விரைந்து கொண்டிருந்தார்.

அந்த மத்தியான நேரம் சிறிது மழை பெய்து மப்பும் மந்தாரமுமாக இருந்தது... அப்படியிருந்தும், அவர் சைக்கிளின் வேகத்தைக் குறைக்கவில்லை.

பொன்னம்பலம் மாஸ்ரர், சைக்கிளை வீட்டின் போட்டிக்கோவின் முன்னால் நிறுத்திவிட்டு, உள்ளே நுழைய அவரது இளைய மகனும் அப்பொழுதுதான் கல்லூரியில் இருந்து வந்து உடுப்பை மாற்றிக் கொண்டிருந்தான்.

தீபாவளிக்கு உடுப்பு!....

தீபாவளிக்கு பட்சணங்கள் வாங்குதல்!....

மகனுடைய பிறந்தநாள் பரிசுகள்!....

வீடியோ படம், புகைப்படம்!

இப்படியே அவர், ஒவ்வொன்றாக மனதிற்குள் எண்ணி ஒரு வரவு, செலவுத் திட்டத்தையே போட்டுக்கொண்டிருந்தார்.

"தம்பி.... பிரபு..."

அவருடைய கடைக்குட்டியைக் கூப்பிட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்த பொன்னம்பலம் மாஸ்ரரை நோக்கி அவரது மகன் ஓடிவந்தான்!

"பிரபு! நாளைக்கு உன்ரை பேத்டே என்னென்ன வேணும்? எப்படியான உடுப்பு வேணும் கெதியாய்ச் சொல்லு, கடைக்குப் போகவேணும்..."

ஆவலுடன் அழைத்துக் கொண்டே, அங்கே இருந்த கதிரையில் இருந்த பொன்னம்பலம் மாஸ்ரரின்முன், அவன் கைகளைக் கட்டியபடி சிரித்துக் கொண்டு நின்றான்....

"அப்பா... எனக்கு இரண்டு ரொபி பைக்கற் தேவை... நல்ல வடிவான ஜீன்சும், மாட்டின் சேட்டும் தேவை... பெரிய கேக் வெட்டவேணும்... வீடியோ எடுக்கவேணும்.... போட்டோ எடுக்கவேணும்.... நாளை இரவுக்கு என்ரை சிநேகிதப் பெடியள் வருவினம். இரண்டு படம் காட்ட வேணும்..."

இப்படியே அவன் பட்டியல் போட்டுக் கொண்டே சொல்லுவான் என்று எதிர்பார்த்த பொன்னம்பலம் மாஸ்ரரின்முன்,

"அப்பா! இந்தமுறை, என்ரை பிறந்த நாளுக்கு எதுவுமே வேண்டாம்...

என்று சொல்லியபடியே அமைதியாய் நின்றதைக் கண்டதும் வானமே தலையில் இடிந்து விழுவது போல் அதிர்ச்சியுடன், தன் மகனைப் பார்த்தார்.

இன்றைய யாழ்ப்பாணத்துச் சமூகத்தின், சமூக நிலை நிறுத்தற் பண்பாட்டு வரன்முறைகளையே உடைத்து விடுபவன் போல் நின்ற அவரது மகன் பிரபுவை வியப்போடு பார்த்தார்.

"அப்பா எனக்கு இந்த முறை பிறந்த நாளுக்குச் செலவழிக்க எண்டு நீங்கள் ஒதுக்கிய காசை பிறந்த நாள் பரிசாகப் பணமாகவே தாருங்கோ."

"காசோ?... அதை என்ன செய்யப் போகிறாய்? என்ன வேணுமோ கேள், அதையும் வாங்கித் தாறன்."

பொன்னம்பலம் மாஸ்ரருக்கு அவன் என்ன கேட்கிறான்... என்ன செய்யப்போகிறான் என்று ஒன்றுமே புரியாமல் இருந்தது.

"அப்பா!... அந்தப் பணத்தை இந்த முறை எங்கடை நல் வாழ்வுக்காகத் தமது உயிரை அர்ப்பணித்த மாவீரர் நாள் நிதிக்கு என்னுடைய பிறந்த நாள் பரிசாகக் குடுக்கப் போறன்..."

அவன் அமைதியாகச் சொல்லிக்கொண்டே நின்றதும், பொன்னம்பலம் மாஸ்ரர் திக்பிரமை பிடித்தவர் போல் மலைத்துப்போய் நின்றார்.

*(1995)*

*(உலக ஆசிரியர் நாள் தொடர்பாக "விளக்கு" சஞ்சிகை நடத்திய அனைத்திலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்ற சிறுகதை.)*

# அடைக்கலம் தந்த வீடுகள்

"**லொ**ள்... லொள்....!"

அந்த அதிகாலைப் பொழுதில் நாய்கள் விட்டு விட்டுக் குரைத்துக் கொண்டிருந்தன.

அமைதியும், இயற்கையிலேயே அழகும் நிறைந்த பாண்டியன்குளம் கிராமம் மெல்ல மெல்ல விழித்துக் கொண்டிருந்தது.

இப்படி அதிகாலைவேளைகளில், நாய்கள் குரைப்பது அந்தக் கிராம மக்களுக்கு இது வாடிக்கையாகவே போய்விட்டது. அடிக்கடி இந்திய இராணுவம் வந்து அந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தைச் சுற்றிவளைப்பதும், ஊரடங்குச் சட்டத்தை நாள் முழுவதும் பிரகடனப்படுத்திவிட்டு, அந்த மக்களை அடைத்து வைப்பதும் அவர்களுக்குப் பழகிப்போய்விட்ட ஒன்றுதான்...!

பாண்டியன் குளம்... முல்லைத் தீவு மாவட்டத்தில் மாங்குளத்திற்கு தென்மேற்கே உள்ள ஒரு சிறிய கிராமம். அதை அடுத்து அடர்ந்த காட்டுப்பகுதி உள்ளது. அந்தக் காட்டிற்குள் தப்பித் தவறி யாராவது உள்ளே நுழைந்துவிட்டால் அவ்வளவு தான் வழி தெரியாது திக்கு முக்காட வேண்டியது தான்.

அந்த அதிகாலை நேரம்... மெல்லிய குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது! காட்டுப் பகுதியில் இருந்து மக்கள் குடியிருப்புப் பகுதியைச் சுற்றிவர இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்த புதிதில், அவர்களை ஆசையுடன் 'அமைதிப்படை' என்று அழைத்து வந்த அந்த மக்கள், இப்போது 'இந்தியன் ஆமி' என்றே சற்று எரிச்சலுடன் அழைக்கத் தொடங்கி விட்டார்கள்...

நாய்கள் குரைக்கத் தொடங்கியதும், அங்கே உள்ளவர்கள் உசார் அடைந்து விடுவார்கள்!

அந்த அளவுக்கு அந்தக் கிராமத்து நாய்கள், அந்த மக்களின் நன்றிக்குரிய விருந்தாளிகளாகவே மாறிவிட்டிருந்தன!

அங்கே அந்தக் கிராமத்து இளைஞர்கள் நாய்களை, "உயிர் காக்கும் தோழர்" என்று செல்லமாக அழைத்துக் கொள்வார்கள்.

நாய்களின் ஓசை வர வர அதிகரித்துக் கொண்டு வந்தது! இன்னும் இருள் விலகவில்லை.

"இந்திய இராணுவம் எங்காவது மூலை முடுக்குகளில் பதுங்கியிருக்குமோ..." என்ற பயமோ, என்னவோ, சூரியன் கூட கருமுகில்களில் மறைந்து மறைந்து மெதுவாகத் தலையை நீட்டத் தொடங்கினான்.

இராணுவம் சுற்றி வளைக்கப் போகின்றது என்ற தகவல் கிடைத்தால் கூட அவர்கள் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கமாட்டார்கள்! வழமையான தங்களுடைய வேலைகளைப் பார்ப்பதற்குப் புறப்பட்டுவிடுகின்ற ஒரு நெஞ்சுரத்தைக் கொண்டவர்களாக அன்றும் தமது அன்றாட வாழ்வை தொடங்கிவிட்டார்கள்.

இப்படி அவர்களிடம் உள்ள அசட்டுத்துணிவு எத்தனையோ உயிர்களின் மரணத்திற்கே காரணமாகியிருந்தது!

"அம்மா!... ஸ்கூலுக்கு நேரமாச்சனை கெதியாய்ச் சாப்பாட்டைத் தாங்க..."

அவசரஅவசரமாகப் பாடசாலைக்குப் புறப்படுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த சோபனா, தாயைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தாள்.

“பொறு பிள்ளை...! தெருவிலை ஆமிக்காரங்கள் சுத்தி வளைச்சிருக்கிறாங்கள் போல கிடக்கு... அதுக்குள்ளாற நீ அவசரப்படுகிறாய் என்ன.... கடவுளே!... இண்டைக்கு ஆருக்கு என்ன கஷ்டகாலமோ...”

சோபனாவின் தாயின் மனம் துடித்துக் கொண்டிருந்தது... அவள் அடிக்கொரு தடவை காட்டுப் பகுதியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருந்தாள்...

“முருகா!... அந்தப் பெடியள் இந்தப் பக்கம் வராமல் இருக்கவேணும்...” அவளுடைய மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

“அம்மா!... நேரம் போகுதணை... இண்டைக்கு நான்தான் கூட்டு முறை... கெதியாய்ப் போகவேணும்...”

இன்று பாடசாலை நடைபெறாது என்று தெரிந்தும் கூட அவள் தாயை நச்சரித்துக் கொண்டே இருந்தாள்...

அவளுடைய அவசரத்திற்கு ஏற்ற மாதிரி சோபனாவின் தாயும், ஏதோ சாப்பாட்டைக் கட்டிக் கொடுத்து படலை வரை வந்து அனுப்பி வைத்தாள்.

சோபனா, பாண்டியன் குளத்தில் உள்ள ஒரே ஒரு பாடசாலையான ‘பாண்டியன் குளம்’ மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கின்றாள்...

இயல்பாகவே கெட்டித்தனமும், ஆர்வமும் இருந்தாலும் அங்கே உள்ள ஆசிரியர் பற்றாக் குறைகளினால், சோபனாவினால் பெரிய அளவுக்குக் கல்வியில் முன்னேற முடியவில்லை.

இந்த நாட்டில் உள்ள கல்வி அமைப்பின் குறைபாடு, பாண்டியன் குளம் கிராமத்தின் வளர்ச்சியைத் தான் நன்றாகப் பாதித்திருந்தது. நகரப் புறங்களில் அதிக அளவில் ஆசிரியர்களைக் குவித்து வைப்பதும், கிராமப்புறங்களை ஏனோ தானோ என்று விடுவதும் கல்வித் திணைக்களங்களுக்குப் பழகிப் போய்விட்ட ஒன்றுதானே. ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்திலோ நகர, கிராமப்புறம் என்ற வேறுபாடுகளின்றி எல்லாப் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாகவே உள்ளது.

அந்தக் கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள சின்னஞ்சிறிய ஓலைக் குடிசையில் இருந்தும், புத்தகப் பையுடன் புறப்பட்ட சோபனா, கிறவல் றோட்டின் ஊடாகப் பாடசாலையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

'துரு துரு' வென்ற கருவிழிகளும், பருத்துத் திரண்ட கன்னங்களும், அழகாக வாரிப் பின்னிய இரட்டைக் கூந்தலுமாகக் கறுப்பாக இருந்தாலும் பார்ப்பதற்கு அழகாக இருப்பாள்.

அவள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, பாதையின் இரு மருங்கிலும் மரங்களோடு மரங்களாக மறைந்து நிற்கின்ற சீக்கியச் சிப்பாய்களை, அவளுடைய கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

"என்ன!... இண்டைக்கு எங்கடை ஸ்கூல் பக்கம் ஒருத்தரையும் காணன்..."

சோபனா மனதிற்குள் நினைத்துக் கொண்டே பாடசாலையை நோக்கி மெது மெதுவாக நடந்தாள். அந்தப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் போடப்படாவிட்டால் எந்த இராணுவச் சுற்றிவளைப்பென்றாலும் அந்தப் பிரதேசங்களில் பாடசாலைகள் நடைபெறுவது சகஜமாகத்தான் இருக்கும்.

வழமைக்கு மாறாகக் கலகலப்பின்றி, இருந்த பாடசாலையை ஒரு கணம் எட்டிப் பார்த்ததும், அவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கிவிட்டது!

"அடே அப்பா!... இவ்வளவு ஆமிக்காரங்கள் நிற்கிறாங்களே?..."

பாடசாலை வளவுக்குள் எங்கு பார்த்தாலும் தாடியும், தலைப் பாகையுமாகச் சீக்கியச் சிப்பாய்கள் நிறைந்திருந்தனர்.

"டால்டா" எண்ணெயின் நாற்றம் மூக்கைத் துளைத்து, வயிற்றைக் குமட்டிக் கொண்டுவரவே, சோபனா மூக்கைப் பொத்தியபடி பாடசாலைக்குள் மெல்ல மெல்லக் காலடி வைத்தாள்.

சோபனாவின் நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது...!

"ஐயோ...! அண்ணாக்கள் இந்தப் பக்கம் வந்தால், அவையளைச் சுட்டுவிடுவாங்களே... கடவுளே!... அந்த அண்ணாக்களைக் காப்பாற்று...."

ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து அந்த மக்களையும், மண்ணையும் காப்பாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் அவர்களுக்காக அவளுடைய குழந்தை மனம் துடித்துக் கொண்டிருந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரிடம் இருந்து தங்களைக் காப்பாற்றி வருபவர்கள், என்ற ஒரு நம்பிக்கையோ என்னவோ, அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக் கூடாதே என்பதற்காக அவளுடைய மனம் அவர்களுக்காக வேண்டிக் கொண்டிருந்தது.

உள்ளே பாடசாலைக்குள் காலடி வைத்த சோபனா, ஒரு கணம் தயங்கியபடி அப்படியே நின்றாள்! அங்கே இருந்து திரும்பி ஓடினால் சுட்டு விடுவார்கள் என்ற பயம் ஒரு புறம்... தப்பித்தவறி உள்ளே போய்விட்டால் பிடித்து வைத்து விடுவார்களே என்ற ஏக்கம் மறுபுறம்....!

"ஏய்!... பாப்பா!... இங்கிட்டு வா பாப்பா..."

அந்தப் பாடசாலையின் கட்டிட மூலையுடன் நின்ற ஒரு சிப்பாயின் குரல் கேட்டுத் திடுக்கிட்ட சோபனா, அப்படியே நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்... அவன் தமிழ் நாட்டுக்காரனாக இருக்க வேண்டும்... அவன் இருந்த இடத்தை நோக்கி மெதுவாக நடந்து சென்றாள்.

"இந்தா பாப்பா!... இந்தக் கானிலை நல்ல ரொடியா வாங்கிட்டு வா!..."

அந்தத் தமிழ்ச் சிப்பாய், தன்னுடைய கையில் இருந்த ஐம்பது ரூபா நோட்டையும், கள்ளு வாங்குவதற்காக ஒரு "பிளாஸ்ரிக் கானையும்" சோபனாவின் கையில் கொடுத்துவிட்டு, அவளுடைய புத்தகப் பையையும் கையோடு வாங்கி வைத்துக் கொண்டான்.

தன்னுடைய வேண்டுதல் பலித்துவிட்ட சந்தோஷமோ என்னவோ, சோபனா துள்ளிக் குதித்துக் கொண்டே, அதில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்ற கள்ளுத் தவறணையை நோக்கி ஓடினாள்....

"ஓ... அந்தப் பக்கம் தானே, போசன் மாமாக்கள் நிக்கிறவை...."

பனங்கள்ளை வாங்கிய சோபனா என்ன நினைத்தாளோ, அதில் இருந்து சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில் இருக்கிற மதகை நோக்கிப் போனாள்.

அந்த இடத்தில் இருந்து ஒற்றையடிப் பாதையூடாகச் சென்று, ஒரு ஓடையுடன் இருந்த மதகை அடைந்தாள். அந்த மதகுப் பகுதியில் உள்ள பெரிய மரத்தில் ஏறி இருந்து கொண்டே பாண்டியன் குளக் கிராமத்தின் ஒவ்வொரு மூலை முடக்கையும் அவதானித்துக் கொண்டிருக்கலாம்.

சோபனா தூரத்தில் வருவதையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த போசனும் மற்றைய சில போராளிகளும் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்! போசன்தான், பாண்டியன் குளம் பகுதியின் பிரதேசப் பொறுப்பாளராக இருப்பவன். அதே கிராமத்தைச் சேர்ந்தவனாதலால், அந்தப் பிரதேசத்தைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தான்.

அங்கே இருந்த உயரமான பாலை மரத்தின் கிளையில் இருந்து, தொலை நோக்கியினூடாகப் பார்த்துக் கொண்டிருந்த தீபனும் , சோபனா நடந்து வருவதைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"மாமா!... மாமா!... இங்கையா நிற்கிறீங்கள்...? எங்கடை ஸ்கூல்லை இண்டைக்கு நிறைய ஆமிக்காறங்கள் வந்து, ஒழிச்சிருக்கிறாங்கள்... அந்தப் பக்கம் இண்டைக்கு வந்திடாதேங்கோ.... இது அவங்கள் தான் தந்தவங்கள்.... கள்ளு வாங்கியரச் சொல்லி..."

சோபனா வந்த வேகத்தில் 'படபட' வென்று சொல்லி முடித்துவிட்டுத் திரும்பினாள். அதில் இருந்து சிறிது தூரம் வரை போனவள், திரும்பவும் அவர்களை நோக்கி வந்தாள்.

"மாமா!... உங்களிட்டை சயனைட் இருக்கா...? இந்தக் கானுக்கை போட்டுத் தாங்க... அவங்க கிட்ட கொண்டுபோய்க் கொடுத்திடறேன் எல்லாரும் குடிச்சுச் சாவட்டும்... அப்பத்தான் நாங்க சந்தோசமா இருக்கலாம்...."

அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்த போசனுக்கும், மற்றைய போராளிகளுக்கும் நெஞ்சில் ஈரம் கசியத் தொடங்கியது...!

அடுத்தடுத்து அந்தக் கிராமத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத் தினரால் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றிவளைப்புகளும், கைதுகளும், அடாவடித்தனங்களும், அந்த மக்கள் அனுபவிக்கின்ற அவலங்களும், அவர்களுடைய உள்ளத்தில் எவ்வளவு ஆழப் பதிந்துள்ளது என்பதைச் சோபனாவின் உணர்வுகள் வெளிக்காட்டிக் கொண்டிருந்தன.

"அம்மா!... அப்படிச் செய்யக் கூடாது குஞ்சு...! இதை அப்படியே கொண்டுபோய் அவங்ககிட்டை கொடுத்திட்டு நீ வீட்டை போம்மா..."

அவளை அப்படியே கட்டிப் பிடித்து உச்சிப் பொட்டில் முத்தமிட்ட, அந்தப் போராளியின் கண்கள் குளமாகிக் கொண்டு வந்தன!

*(1995)*

# பாதசரம்

**வ**டமராட்சியின் பெரியதொரு வைத்தியசாலையாக விளங்கிக் கொண்டிருக்கும் "மந்திகை அரசினர் வைத்தியசாலையின்" முன், அன்றும் வழமை போல் சனக்கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

இன்னும் பன்னிரண்டு மணியாகவில்லை... அதுதான் வைத்திய சாலையின் முன் எல்லோரும் மொய்த்துக் கொண்டு நிற்கின்றார்கள்.

வடமராட்சியின் மேற்கே தொண்டைமானாறு, தொடக்கம் கிழக்கே வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு வரையுள்ள நாற்பது மைல் நீளமான ஒரு பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய மக்களுக்கு உள்ள ஓரளவு வசதியுள்ள வைத்தியசாலையான "மந்திகை ஆதார வைத்தியசாலை" எந்த நேரமும் நோயாளர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும்.

வைத்தியசாலை வாட்டுகளில் உள்ள, நோயாளர்களைப் பார்க்கச் செல்வதென்றால், நண்பகல் பன்னிரண்டு மணிக்கும், பிற்பகல் ஐந்து மணிக்கும் தான் அனுமதிக்கப்படுவார்கள். அதற்கு இடையில் ஏதாவது செல்வாக்குகள் இருந்தாலன்றி எவருமே நோயாளரைப் பார்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நோயாளர்களைப் பார்வையிட அனுமதிப்பதற்கு இன்னும் நாற்பத்தைந்து நிமிடங்கள் இருந்தன.

"வாட்டுக்குள்" செல்வதற்காக நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருந்த சிவரூபன், பொறுமை இழந்த நிலையில் அடிக்கடி நேரத்தைப் பார்ப்பதும், நுழைவாசலில் இருந்த 'வாச்சரைப்' பார்ப்பதுமாக நின்றான்.

"அண்ணை...! குண்டு வீச்சிலை காயப்பட்ட ஒரு பிள்ளையைப் பார்க்கப்போக வேணும்..."

நீண்ட நேரம் அங்கே கால் கடுக்க நின்றதில், அவனுடைய இடுப்புக்குக் கீழ் வலித்துக்கொண்டு வந்தது... மாறி, மாறிக் கால்களைத் தூக்கிச் சுவருடன் சாய்த்துக் கொண்டு நின்றது, சிவரூபனுக்குச் சிறிது இதமாக இருந்ததால் சிறிது நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டான்.

வெளிநோயாளர் பகுதியில் இருந்து வாட்டுகளுக்குச் செல்லும் ஒடுங்கிய பாதைக்குக் குறுக்கே இருந்த ஒரு கதிரையில் இருந்து 'நந்தி' போல் வழியை மறித்துக்கொண்டிருந்த வாச்சர் அவனை மேலும், கீழுமாக ஒரு தடவை பார்த்துச் சிரித்துக்கொண்டான்.

"ஓ... இஞ்சை ஒவ்வொரு நாளும் தானை குண்டு வீச்சு நடக்குது... அதுசரி, எந்தப் பிள்ளையைப் பார்க்கப் போறியள்?... அது உங்களுக்குச் சொந்தமே?.... எங்கே இருந்து வாறியள்?....

வடமராட்சிக் கிராமிய மண்வாசனை அந்த 'வாச்சரின்' ஒவ்வொரு வார்த்தையிலும் தொனித்தது. கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு சிவரூபனைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தான்.

"அண்ணை!... நான் நாகர்கோயில்லை இருந்துவாறன்.... என்ரை சொந்தக்காரப் பிள்ளையைத்தான் பார்க்கப்போறன்.... இப்ப பார்த்துவிட்டுப் போனால்தான் ஒன்றரை மணி பஸ் வண்டியைப் பிடிக்கலாம்.... அதுதான் நாகர்கோயிலுக்குப்போற கடைசி வண்டி."

"என்ன...?.... நாகர்கோயிலோ...?"

அவன், ஏதோ பேயைக் கண்டவன் போல், அந்த ஊரின் பெயரைக் கூறியதும் அதிர்ந்து போய் நின்றான்.

கடந்த சில நாட்களாக நாகர்கோயிலின் பெயர் அடிபடாத பத்திரிகைகளோ, வானொலிச் செய்திகளோ இல்லை என்ற அளவுக்கு அந்தக் கடலோரக் கிராமத்தின் பெயர் உலகளாவிய ரீதியில் அடிபடத் தொடங்கி விட்டது.

சில நாட்களுக்கு முன்னர்தான், அந்தக் கோரச் சம்பவம் நடந்து முடிந்தது...!

அன்றும், நாகர்கோயில் மகாவித்தியாலயம் தனது வழமையான பணிகளுக்காகத் தயாராகிக்கொண்டிருந்த நேரம்...

வெள்ளைச் சட்டைகளுடன், வெண்புறாக்கள் போல் அந்தப் பள்ளியை நோக்கி நூற்றுக்கணக்கான மாணவர்கள் புத்தகப் பைகளுடன் சென்று கொண்டிருந்தனர்.

பாடசாலையில் இறைவணக்கப் பாடல்கள் முடிந்து, காலைக்கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, நாகர் கோயில் கடல் வான்பரப்பின் வழியாக வந்து கொண்டிருந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்களினதும் இரைச்சல், அங்கே நின்றவர்களின், காதுகளைச் செவிடாக்கிக்கொண்டிருந்தன.... அதிர்ச்சியடைந்த மாணவர்களும், அதிபரும், ஆசிரியர்களும் என்ன செய்வதென்றே தெரியாது அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டு ஓடித்திரிந்தனர்.

அந்தப் பள்ளிக்கூடத்திற்குள் நின்ற, குழந்தைகளின் கூக்குரல் இன்னும் அச்சத்தைக் கூட்டிக் கொண்டிருந்தது!

வானத்தில் ஒரு தடவை மட்டுமே வட்டமிட்ட அந்த இரண்டு "புக்காரா" குண்டு வீச்சு விமானங்களும் மாறி மாறிக் குண்டுகளைப் பொழியத் தொடங்கின. பள்ளிக்கூடத்தைச் சுற்றியும் அருகே இருந்த பத்தினியம்மன் கோயிலைச் சுற்றியும் புளிய மரத்திலும் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன.

அந்த ஒரு கணப்பொழுதிற்குள், அங்கே எழுந்த மரண ஓலம் அந்தக் கிராமத்தின் பொங்கும் கடலலைகளின் இரைச்சலையும் மேவி எதிரொலித்துக் கொண்டிருந்தது. கண்மூடி விழிப்பதற்குள் எல்லாமே நடந்து முடிந்து விட்டன...

மரங்களில் தொங்கிக் கொண்டிருந்த மாணவர்களின் சடலங்கள்.... சிதறி எறியப்பட்டு உருக்குலைந்து போன புத்தகப்பைகள்... செங்குருதி ஊறிச் சிவந்த வெண்ணிற ஆடைகள்.... பத்தினி அம்மன் கோயில் சுவரில் ஒட்டியிருந்த தசைத்துண்டங்கள்.... கோயில் சுவரில் சிதறப்பட்டிருந்த இரத்தக் கறைகள்....! என்று ஒரு போர்க்களத்தையே அந்தப் பிரதேசம் நினைவூட்டியது.

தமது வீடுகளில் இருந்து பெரும் ஆவலுடன் பள்ளிக்குப் புறப்பட்டு வந்த பிள்ளைகளின் சாக்காடாக அன்று நாகர் கோயில் மண் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

இருபத்திநான்கு மாணவர்களைப் பலி கொண்ட அந்தக் கோரச் சம்பவத்தில், காயப்பட்டவர்களையும், குற்றுயிராய்த் துடித்துக் கொண் டிருந்தவர்களையும் மீன் லொறிகளிலும், தனியார் தட்டிவான்களிலும், ஏற்றி அம்பன் வைத்தியசாலைக்கும், மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கும் கொண்டு வந்து சேர்த்தனர்.

அந்தக் கிராமத்து இளைஞர்கள் துரிதமாகவும், புத்திசாலித் தனமாகவும் செயல்பட்டதால் தான், நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றக் கூடியதாக இருந்தது.

"அண்ணை...! என்னை ஒருக்கால் விட்டியள் எண்டால் உடனே பார்த்துவிட்டு வந்துவிடுவேன்... பிந்திப் போனால், பஸ்சைப் பிடிக்க முடியாது...."

சிவரூபன் அழாக் குறையாகக் கெஞ்சிக் கொண்டு நின்றது, அந்த 'வாச்சரின்' மனதை இளக வைத்திருக்க வேண்டும்.

"சரி... சரி... கெதியாய்ப் போயிற்று வாங்க.... டீஎம்ஓ ஐயா கண்டால், எனக்குத் தான் பேசுவார்...."

'வாச்சர்' விடை கொடுத்ததும், 'விறு விறு' என்று நடந்து சென்ற சிவரூபனின் கண்கள், ஆறாம் வாட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சுதர்சினியைத் தேடிக் கொண்டிருந்தன.

"அண்ணன்... இங்கை வாங்க.... பிள்ளை இந்தக் கட்டில்லை தான் படுத்திருக்குது..."

சுதர்சினியின் கட்டிலுக்கு அருகில் நின்ற தாய் பார்வதியின், குரலைக் கேட்டதும், அந்தக் கட்டிலை நோக்கிச் சென்றான்.

கண்களை மூடியபடி, முகம் மட்டும் திறந்த நிலையில், வெள்ளை பெட்சீற்றினால் போர்த்துக்கொண்டு படுத்திருந்த சுதர்சினியைக் கண்டதும், சிவரூபனின் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன!

அந்தச் சிறுமியின் முகம், அன்றலர்ந்த தாமரைபோல், வெள்ளைத் துணிக்குள் புதைந்து கிடந்தது!

"பிள்ளைக்கு எங்கை காயம்?.... கொழும்பாலை வந்ததும், கேள்விப்பட்டு உடனை வாறன்... இப்ப என்ன மாதிரி.... சுகமே...?"

வந்து சேர்ந்த அவசரத்தில் அடுத்தடுத்துக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

கட்டிலில் படுத்திருந்த சுதர்சினியைப் போர்த்தியிருந்த வெள்ளைத் துணியை பார்வதி மெதுவாக எடுத்தாள். அதைப்பார்த்து அதிர்ந்து போன சிவரூபனின் கண்கள், சுதர்சினியின் இடுப்புக்குக் கீழ் நிலைக்குத்தி நின்றன.

“ஐயோ!... கடவுளே!.... என்ன கொடுமை இது? இந்தப் பிள்ளை என்ன பாவம் செய்தது?”

அவன், வைத்தியசாலைச் சூழலையும் மறந்து ‘ஓவென்று’ கதறியழத் தொடங்கிவிட்டான்.

கட்டிலுக்கு அருகில் நின்ற பார்வதி, சேலைத் தலைப்பினால் வாயை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள்... சுதர்சினியை வார்ட்டில் சேர்த்த நாளில் இருந்து, பார்வதி சரியான தூக்கமோ, உணவோ இன்றி, அழுதழுதே அவளுடைய முகம் வீங்கிப்போய் இருந்தது.

“வெறும் முண்டம்” என்று சொல்வார்களே? அதுபோல், அந்தச் சிறுமியின் இரண்டு கால்களும், முழங்காலுடன் துண்டிக்கப்பட்ட நிலையில் படுத்திருந்ததைக் கண்டதும் சிவரூபன் பேயறைந்தவன் போல் நின்றான்.

நாகர் கோயிலின் வெண்மணற் பரப்புகளில் ஆடிப் பாடித் திரிந்த அந்த அழகான இளங்குருத்து, இன்று இரண்டு கால்களையும் இழந்து ஒரு புழுவைப் போலக் கட்டிலில் படுத்திருந்தது.

அங்கே ஏற்பட்ட சலசலப்பில், சுதர்சினி விழித்துக் கொண்டு விட்டாள்!

“ஹாய்!... அங்கிள்!.... எப்ப வந்தீங்க? இண்டைக்குத் தான் என்னைப் பார்க்கவாறீங்க என்ன....?”

சிவரூபனைக் கண்டதும் ஆவலுடன் எழுந்திருக்க முயன்ற சுதர்சினியால் எழுந்திருக்க முடியவில்லை!

“சுதா! என்னம்மா? இப்ப எப்படி சுகமா? அங்கிள், வெளியூர் போயிருந்ததாலை உடனே வரமுடியாது போய் விட்டது.”

மனதில் எழுந்த துயரத்தை அடக்கியபடி சம்பிரதாயத்துக்காக அவளுடன், சில வார்த்தைகளைப் பேசினான். துயரத்தினால், அவனுடைய தொண்டை அடைத்துக் கொண்டது.

"ஓம்... அங்கிள்! எனக்கு இப்ப நல்ல சுகம், எப்போ வீட்டை போகப்போறனோ தெரியவில்லை... கெதியா பள்ளிக்கூடத்திற்குப் போக வேணும் போலக்கிடக்கு..."

தண்ணீர் குவளைக்குள் மாபிள் குண்டைப்போட்டுக் குலுக்கியது போல் 'கலகல' என்று கதைத்துக் கொண்டிருந்தாள். தன்னுடைய எதிர்காலத்தில், அவள் சந்திக்கப் போகின்ற அந்தத் துயர வாழ்வையும் மறந்து சிரித்துக் கொண்டிருந்தாள்!....

"பிள்ளை!... சுதர்சினி!... இந்தாங்க இந்தக் குளிசையை போடுங்க...!"

மத்தியான வேளைக்கான மருந்துகளைக் கொடுத்துக் கொண்டு வந்த தாதி, சுதர்சினிக்கு அருகில் வந்து உடல் வெப்பநிலையை பரிசோதித்துக் குறித்துக் கொண்ட பின், மருந்து, மாத்திரைகளைக் கொடுத்தாள்.

அந்த வைத்தியசாலையில் வேலை செய்கின்ற டாக்டர்கள், தாதிகள், அற்றெண்டண்மார் எல்லாருக்கும் அவள் மீது ஒரு அலாதியான அன்பு. அங்கே, எவர் வந்தாலும், ஏதாவது கதைத்துக் கொண்டு, நின்று விட்டுத்தான் போவார்கள். அந்த அளவுக்கு அவளுடைய கதையும், பாட்டும், சிரிப்பும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும்.

"என்ன சுதர்சினி!.... இண்டைக்கு உங்கடை பாட்டைக் கேட்க முடியவில்லை..."

சுதர்சினிக்கு அருகில் நின்ற தாதி, அவளுடைய தலையை வாஞ்சையுடன் தடவிக்கொண்டு நின்றாள். அதற்கு அவள், தன் தலையை சாய்த்து ஒரு மெல்லிய சிரிப்பை மட்டும் உதிர்த்துவிட்டு, அங்கே நின்றவர்களை மாறிமாறி பார்த்தாள்.

"அம்மா!... கனடாவிலிருந்து மாமாவின்ரை கடிதம் வந்ததோ?..." எதையோ நினைத்துக் கொண்டவள் போல், திடீரென தாயைப் பார்த்துக் கேட்டாள்.

"ஓம்.... பிள்ளை!... முந்தநாள் தான் வந்தது. உன்னைப் பற்றித் தான் சுகம் விசாரித்து எழுதியிருக்கிறார்...." தாயின் பதிலைக் கேட்டதும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"அது சரி அம்மா!... மாமா எனக்கு வெள்ளிக் கால்சரம் செய்விக்கிறதுக்குக் காசு அனுப்புறன் என்று போனமுறை கடிதத்தில் எழுதியிருந்தவர்... அதை இன்னும் அனுப்பவில்லையோ?...."

அமைதியாகப் படுத்திருந்த சுதர்சினியின் அந்தத் திடீர்த் தாக்குதலால் அங்கே நின்ற மூவரும் ஒரு கணம் அதிர்ந்து போய் நின்றனர்.

“வெள்ளிப் பாதசரம்”.... அந்த அழகான, கால் அணிகலனை அவளால் எந்தப் பாதத்திற்குத் தான் போட்டு அழகு பார்க்க முடியும்?

“ஏன் பிள்ளை!.... இப்ப அதைக் கேட்கிறாய்?.... நீ சுகப்பட்டு, வீட்டை போன பிறகு பார்ப்பம்.... உனக்கு நிறையக் காப்பு, அட்டியல், சிமிக்கி எல்லாம் செய்து தருவன்....”

பாதசரத்தை மட்டும் அவளால் எப்படிச் செய்து கொடுக்க முடியும்.

மௌனமாக நின்று அழுது கொண்டிருந்த பார்வதியின் நெஞ்சு வெடித்துக் குமுறியது.

“ஏனம்மா?.... எனக்கு இரண்டு காலும் இல்லையென்று யோசிக்கிறியளோ? மாமா எழுதின மாதிரி அந்தக் காசை அனுப்பினால் கால் சரங்களைச் செய்வித்து தாருங்கோ...”

அந்தச் சிறுமியின் ஒவ்வொரு வார்த்தைகளும் அங்கே நின்றவர்களையும், அருகே உள்ள கட்டில்களில் படுத்திருந்தவர்களையும் சம்மட்டியால் அடிப்பது போல் இருந்தது.

“அம்மா!... எனக்குச் கால்சரம் செய்து தந்தால் போடேலாது என்று நினைக்கிறியளோ?... ஊரிலை, அண்ணாக்கள் பொய்க்கால் போட்டுத் திரியிற மாதிரி நானும் போட்டதுக்கு பிறகு, அதுக்குப் போட்டால் நல்ல வடிவாய் இருக்கும் தானே? ...........ஹி...........ஹி.............”

சுதர்சினி எல்லோரையும் பார்த்துக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டு இருந்தாள்.

அந்தக் கணப்பொழுதில் அங்கே நிலவிய மயான அமைதியில், அந்த வார்ட்டில் இருந்தவர்களின் இதயங்கள் குருதிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தன.

ஆம்!.... அந்தச் சின்னஞ் சிறு பெண்ணின் நெஞ்சுறுதியும், தன்னம்பிக்கையும் அவளுடைய சிரிப்பின் ஊடாகக் காற்றிலே பரவிக் கொண்டிருந்தன.

*(1998)*

*(யாழ் இலக்கிய வட்டமும், தினக்குரலும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் 2ம் பரிசு பெற்ற சிறுகதை)*

# ஒரு பிடி அரிசி

மார்கழி மாதக் கடுங்குளிர் அந்தப் பிரதேசத்தையே உறைய வைத்துக் கொண்டிருந்தது. உயர்ந்து, அடர்த்தியாக வளர்ந்திருந்த காட்டு மரங்களிடையே வெள்ளைப் பஞ்சுகளைத் தூவி விட்டது போல், ஆங்காங்கே பனிமூட்டம் பரவி இருந்தது.

அந்தக் காலை நேரத்தில் வன்னி மண் இன்னும் விழித்துக் கொள்ளவில்லை... அந்த அளவுக்கு குளிர்காற்று எல்லோரையும் உலுப்பிக் கொண்டிருந்தது.

காட்டுக் குயில்களின் மனதைக் கிறங்க வைக்கும் மெல்லிய ஓசை மட்டும் காற்றில் கலந்து இதமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இனிய ஒலிக்கு மேலாக, "கீச்சு...கீச்சு" என்று குரங்குக் குட்டிகளை வயிற்றில் காவியபடி மரங்களிடையே தாவித்திரியும் மந்திக் குரங்குகளின் சத்தங்களும், தூரத்தில் எங்கோ காட்டுப் பகுதிக்குள் இருந்து இடையிடையே விட்டு, விட்டுக் கேட்டுக் கொண்டிருக்கும் துப்பாக்கிச் சத்தங்களும் தான், அந்த மண்ணின் இயற்கை ஒலிகளாகி விட்டன.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள மாவட்டங்களில், முல்லைத்தீவு மாவட்டம் என்றதுமே, அடங்காத் தமிழன் பண்டார வன்னியனின் பெயர் தான் நினைவுக்கு வரும்.... தூங்கிக் கிடக்கும் குழந்தை கூட ஒரு கணம் தன்னுடைய உடலைச் சிலிர்த்துக் கொள்ளும்.

ஆம்.... அன்று யாழ்ப்பாண அரசு, அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரப்பட்ட பின்னரும் கூட, வன்னிமையை அடிபணிய விடாது, இறுதிவரை போராடி அந்த மண்ணைக் காத்த மாவீரன் பண்டாரவன்னியன் ஓடித் திரிந்த மண்ணல்லவா அது...

அதனால், தானோ என்னவோ, இன்றும்கூட அந்த மண் வளையாது நிற்கின்றது.... வந்தாரை வாழ வைக்கும் மண் என்றும், வீரத்தின் விளை நிலம் என்றும் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பேசப்பட்டு வந்த மண்... இன்று

அவலம் நிறைந்த மக்களால் நிரம்பிப் போய் சிவந்து காணப்படுகின்றது.... யாழ்ப்பாண மண்ணைக் கைப்பற்றி, அதன் பாரம்பரியத்தையும், தனித்துவத்தையுமே வேரோடு அழித்துவிட வேண்டு மென்பதற்காகவே மேற்கொள்ளப்பட்ட 'ரிவிரெச' படை எடுப்பும், அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சிங்களப் பெயரிலும் அமைந்த இராணுவ நடவடிக்கைகளும் அந்த மண்ணையே இன்று அல்லோல கல்லோலப்படுத்தி விட்டன...!

காலம் காலமாகத் தமது சொந்த வீடுகளில் உண்டு, உறங்கி வாழ்ந்த மக்களை ஒரே இரவில் விரட்டி அடித்து, அகதிகளாக்கிவிட்ட அந்த அவலத்தைச் சுமந்து நின்ற யாழ்ப்பாணத்தை விட்டுக் கண்ணீருடன் வெளியேறிய இலட்சக் கணக்கான தமிழர்களில் செல்லம்மாவும் ஒருத்தியாக ஓடிவந்த அந்தத் துயரம் நிறைந்த இரவுகளை அவளால் எப்படி மறக்க முடியும்?

"அம்மா.... இன்னும் வயிற்று நோக் குறைஞ்சதாத் தெரியேல்லை யம்மா... வரவர அடிவயிறு எரியிற மாதிரிக் கிடக்குதணை... ஆ... கடவுளே வலி தாங்க முடியேல்லை...."

செல்லம்மாவின் மூத்த மகள் வானதி, அடி வயிற்றை அழுத்திப் பிடித்தபடி, அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். ஒரு வாரத்திற்கு மேலாகச் சாப்பிடாமல் இருந்ததால், கடந்த மூன்று நாட்களாக வயிற்று வலியினாலும், தொடர்ச்சியான வாந்தியினாலும் துடித்துத் துவண்டு போய் இருந்தாள்....

"பிள்ளை.... இப்பத்தானை தேத்தண்ணி குடிச்சனி.... இன்னும் கொஞ்சத்தாலை எல்லாம் குணமாப் போயிடும்...."

கடந்த மூன்று நாட்களாகப் பழகிப் போய்விட்ட, அந்த முனகல் செல்லம்மாவுக்குப் புதிதாகத் தெரியவில்லை.

செல்லம்மா ஏதோ ஒரு சாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது.... ஒரு நாளைக்கு, ஒரு நேர உணவினாலாவது அரைகுறையாக நிரப்பித் திருப்திப்படுத்த வேண்டிய

வயிற்றை, எத்தனை நாட்கள் தான், வெறும் பனங்கட்டித் தேநீரைக் காட்டி ஏமாற்றமுடியும்...? 'அல்சர்' முற்றி, அவளுடைய இரைப்பையின் உட்சுவர் புண்ணாகிப் போய்விட்டது.

பலாலியில் இருந்து ஏவப்பட்ட மூர்க்கத்தனமான எறிகணைத் தாக்குதல்களினால், தெல்லிப்பளையில் இருந்தும் இடம்பெயர்ந்து, நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தபோது, வீசப்பட்ட 'புக்காரா' போர் விமானங்களின் குண்டுகள், அந்தப் புனித கத்தோலிக்கத் தேவாலயத்தை மட்டுமா தாக்கி அழித்தன...?

அந்த ஆலயத்தினுள் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், பெண்கள், வயோதிபர் என்று நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் உடல்கள், சிதறிப் பலியானபோது, அவளுடைய கணவனையுமல்லவா பறிகொடுத்துவிட்டு நிர்க்கதியாக நின்றவள்....! அன்று, அவள் அனுபவித்த, அந்த வேதனையின் கொடூரத்தைவிட, இன்று அந்த அகதி முகாமில் அனுபவிக்கும் துயரமோ மிகவும் கொடூரமானது.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அகதிமுகாமில் கழித்த அந்த ஆறுமாத அவல வாழ்க்கையில் அவள் அனுபவித்த துயரங்களோ ஏராளம்.

பாயில் படுத்திருந்தபடியே, வலி தாங்கமுடியாது முக்கி முனகிக் கொண்டிருந்த, வானதியின் கோலத்தைப் பார்த்ததுமே, செல்லம்மாவின் பெற்ற வயிறு பற்றி எரிந்து கொண்டிருந்தது.... சேர்த்து வைத்த பணத்தைச் செலவழிக்க வழி தெரியாது, உண்டு குடித்துக் கழித்து வாழ்பவர்களுக்கு அதனாலேயே நோய்களும் வந்து விடுகின்றது... ஆனால், வானதியைப் போன்று நிர்க்கதியாக்கப்பட்டுவிட்ட ஏழைகளின் 'பசிப்பிணிக்கு' யாரால் தான் மருந்து கொடுக்க முடியும்...?

"சே... என்ன வடிவாய் இருந்த பிள்ளை... ஊரைவிட்டு வந்து தேப்பனையும் பறிகுடுத்திட்டு இப்பிடிக் கோலம் மாறிப் போய்... கடவுளே... நான் என்ன பாவம் செய்து பிறந்திட்டன்... கலியாணம் முடிக்கவேண்டிய வயதில், இப்பிடி எலும்பும் தோலுமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறதை விட, அண்டைக்கே அவரோடை செத்துத் துலைஞ்சிருக்கலாம்...."

நீண்ட பெருமூச்சு விட்டபடியே, தன்னையே நொந்து, சபித்துக் கொண்டாள்.... முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என்று அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால், யாழ்ப்பாணத்தில்

இருந்து இடம் பெயர்ந்த மக்களாலும், 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை யினால் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களாலும் அந்த அகதி முகாம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அங்கே தான், அவர்களுக்கும் ஒரு சிறிய பகுதி ஒதுக்கிக் கொடுக்கப் பட்டிருந்தது... ஒரு வகுப்பறையினுள் மூன்று தனிக் குடும்பங்கள் எப்படியோ இருந்தே ஆக வேண்டும்.

"அம்மா... என்னம்மா?.... இண்டைக்கும் சாப்பாடு தரமாட்டி யளோ...? ரெண்டு நாளா வெறுந்தேத்தண்ணியைக் குடிச்சு குடிச்சு வாயெல்லாம் கைக்குது... இண்டைக்குப் பள்ளிக்கூடத்திலை வகுப்பேற்றச் சோதனை என்றும் சொல்லி விட்டவை..."

படுக்கையில் இருந்தும், எழும்ப மனமில்லாமல் சோம்பலை முறித்துக் கொண்டே எழுந்த பிரதீபன், தாயின் முகத்தையே பார்த்து அனுங்கிக் கொண்டிருந்தான்.

அவன் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றான்.... எந்தக் கஷ்டம் வந்தாலும் அவனை எப்படியும் படித்து ஆளாக்கிவிட வேண்டும் என்ற ஆதங்கம் செல்லம்மாவிடம் இருந்தாலும், அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க மட்டும் அவளால் முடியவில்லை...

"என்ரை ராசன்... இண்டைக்கு மட்டும் போய்ச் சோதனையைச் செய்துட்டு வா, நான் எப்பிடியும் இண்டைக்குக் காக் கிலோ அரிசியாவது கொண்டு வந்து கஞ்சி வைத்துத் தருவன்..."

"சும்மா போணை... நேற்றும் இப்பிடித் தானை சொல்லிப் போட்டுப் போய் மத்தியானம் வெறுங்கையோடை வந்தனீங்கள்... ஏன் இப்பிடி ஒவ்வொரு நாளும் ஏமாத்திறியள்....?"

பிரதீபனின் ஆற்றாமையும், பசியின் கொடூரமும் அவனை அப்படிப் பேசவைத்து விட்டது.

"தம்பி.... அம்மாவை அப்பிடிப் பேசாதை.... பாவம், அவ என்ன செய்வா...? தன்ரை கழுத்திலை, காதிலை கிடந்த நகை எல்லாத்தையும் விற்று இவ்வளவு காலமும் சமாளிச்சா... அதுக்குப் பிறகும் கூட பக்கத்துச்

சனங்களிட்டைப் போய்ப் பிடி அரிசி சேர்த்துக் கஞ்சிகாய்ச்சித் தந்தா.... எத்தினை நாள், வீடுகளுக்குப் போய், அரிசி இடிச்சுக் கொடுத்து எங்களுக்குச் சாப்பாடு போட்டிருப்பா... இதெல்லாம் தெரிஞ்சும் ஏன் இப்பிடிக் கதைச்சு அவவின்ரை மனதை நோக வைக்கிறாய்...ம்... எங்கடை தலை விதி, இப்பிடி எங்களை அலைக்கழிக்குது..."

வானதியின் மூச்சு இளைத்துக் கொண்டிருந்தது... படுக்கையில் இருந்தும், மெதுவாக எழும்பி இருந்த வானதி, அந்த வயிறு எரியும் நிலையில் இருந்தும் கூடத் தன்னுடைய தம்பியைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"அக்கா.... என்னைக் கோவிக்காதீங்கோ... அம்மா, பாவம் எங்களுக்காகக் கஷ்டப்படுறதை நான் உணராமல் இல்லை அக்கா... இது எங்கடை விதி மட்டுமல்ல.... இந்த நாட்டிலை தமிழனாய்ப் பிறந்ததாலை ஏற்படுத்தப்பட்ட சதி அக்கா... அந்த விதியை நாங்கள் தான் மாற்றி அமைக்க வேணும்..."

ஆம்... தாயுடன் சேர்ந்து நாட்கணக்காகச் சாப்பிடாமலேயே இருக்கும், அவர்களுடைய வயிற்றில் மூண்டெழுந்த அந்தப் பசித்தீயை மட்டும் அவர்களால் எப்படி அணைக்க முடியும்?

செல்லம்மாவுக்கும், எங்காவது வேலைக்குப் போய், கூலி வேலையாவது செய்து அன்றாடம் செலவுக்குத் தன்னும் உழைக்க வேண்டும் என்ற ஆசைதான்....

இன்று, வன்னிப் பெரு நிலப்பரப்பில் வளம் கொழிக்கும் நூற்றுக் கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள், இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும், எறிகணை வீச்சு எல்லைக்குள்ளும் கொண்டுவரப்பட்ட பின்னர், அவை எல்லாமே இன்று வானம் பார்த்த பூமிகளாகி விட்டன. இந்த நிலையில், எத்தனையோ உடல் வலிமையுள்ள ஆண்களுக்கே வேலை வழங்கமுடியாத நிலையில், வலுவிழந்து, மெலிந்து, எலும்புக் கூடாகி விட்ட செல்லம்மாவுக்கு, அங்கே யார்தான் வேலை கொடுக்கப் போகின்றார்கள்?

வன்னிப் பெரு நிலப்பரப்பைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாத நிலையில், அங்கே வாழ்கின்ற மக்களைப் பட்டினி போட்டுப் பணிய வைப்பதற்கு உணவுத் தடையைப் போராயுதமாகப் பயன்படுத்தும் அந்த, அநாகரிகம் உலகில் வேறு எந்த நாட்டிலுமே நடந்திருக்க முடியாது....

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்தவர்களுக்குச் சில மாதங்கள் வரை, ஏதோ பெயரளவில் வாரத்திற்கு முன்னூறு ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை நிவாரணமாகக் கொடுத்து வந்தார்கள். அதற்குப் பிறகு மாதத்திற்கு ஒரு தடவையாகக் குறைத்து, இப்போது 'அகதிகளுக்கான நிவாரணம்' முற்றாகவே நிறுத்தப்பட்டுவிட்டது.

அகதிகளுக்கென வெளிநாடுகளில் இருந்து வரும் உதவிகள் தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றன.... ஆனால், அந்த ஏழைகளின் வயிறுகள் மட்டும் வெறுமையாகிக் கொண்டு வந்தன...!

"தம்பி... எழும்பித் தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போயிற்று வா... நான் என்ன சும்மா திரிஞ்சிட்டே வாறன்.... நேற்றுக்கூட ஒரு கொத்து அரிசிக்காக அலையாத இடமில்லை.... ஏறி இறங்காத படலை இல்லை... உண்ணாணை இண்டைக்கு எப்பிடியும், உனக்குக் கஞ்சி காய்ச்சி வைப்பன்..."

அவள் உறுதியாகக் கூறிக் கொண்டே, மகனின் தலையை வாஞ்சையுடன் தடவி விட்டாள்.

"சரி... அம்மா நான் இண்டைக்குப் போறன்... அம்மா.... நான் கதைச்சதைப் பற்றிக் கவலைப்படாதையுங்கோ... ஏதோ, தெரியாமல் கதைச்சிட்டேன்...."

அவன் இப்பிடிக் கூறியதும், செல்லம்மாவின் நெஞ்சுக்குள் அடக்கி வைத்திருந்த துயரம் இன்னும் பீறிட்டுக் கொண்டு வந்தது... சேலைத் தலைப்பினால் வாயையும், கண்களையும் மூடிக் கொண்டு விம்மி, விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

அவர்களுக்கு எதிரில், பாயில் படுத்திருந்தபடியே, பிரதீபனையே பார்த்துக் கொண்டிருந்த வானதியின் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது... அவளுக்கு, அந்த நேரம், 'ஓவென்று' வாய் விட்டே கதறி அழ வேண்டும் போல் இருந்தது. தன்னுடைய முகத்தை அடுத்த பக்கம் திருப்பிச் சட்டைத் தலைப்பினால், வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

ஆம்... அங்கே, பசிக்கும், பாசத்திற்கும் இடையே அவர்களுடைய உணர்வுகள் போராடிக் கொண்டிருந்தன...

அந்த அகதிமுகாமின், 'ஒரு லயம்' மெல்ல, மெல்ல விழித்துக் கொண்டிருந்தது... அந்த முகாமில் உள்ளவர்கள், அன்றும் வழமைபோலக் கலகலப்பாக இயங்கத் தொடங்கி விட்டனர். செல்லம்மா மட்டும், அந்த விடியப் போகும் பொழுதை நினைத்து நடுங்கிக் கொண்டிருந்தாள்.

"பிள்ளை... இண்டைக்கு எங்கையாவது போய்ப் பிடி அரிசி சேர்த்தெண்டாலும், கொண்டு வாறன்..."

சேலைத் தலப்பினால் கண்களைத் துடைத்துக் கொண்டே எழும்பினாள்.

தெல்லிப்பளையில் இருந்தபொழுது, அவளுடைய கணவன் ஒரு முழு நேர விவசாயியாக இருந்து, வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கெல்லாம் தாராளமாக உணவைக் கொடுத்து அனுப்பும் அளவுக்கு வீட்டில் நெல்லை மூடை, மூடையாக அடுக்கி வைத்திருப்பான்.

இன்று, வீடு, வீடாகச் சென்று, அவர்கள் சமைக்கும் அரிசியில் இருந்து ஒரு பிடி அரிசியாகச் சேர்த்துக் கஞ்சி காய்ச்சி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதை நினைத்துப் பார்த்ததும் செல்லம்மாவின் உடல் கூனிக் குறுகியது...

போர் நெருக்கடிகள், அரசின் உணவுத் தடை என்பவற்றால் வன்னியின் எல்லா வீடுகளுமே இன்று அரிசிக்காகவும், மாவுக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், பிடி அரிசி கொடுக்கின்ற நிலையில் எத்தனை பேர் இருப்பார்கள்....?

"அம்மா.... ஏனணை அப்பிடி வீடு வீடாகச் சென்று பிச்சை எடுக்கிற மாதிரிக் கேட்க வேணும்....? இண்டைக்கும், அந்த உதவி அரசாங்க அதிபரிட்டையே எங்கடை நிலைமையைச் சொல்லிக் கேட்டுப் பாருங்கோ..."

வானதி, இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, அடிவயிற்றில் பலமாக வலி ஏற்பட்டதால், வயிற்றை அப்படியே அழுத்திப் பிடித்தபடி படுத்திருந்தாள்.

"சரி.... பிள்ளை எதுக்கும் இண்டைக்கும் ஒருக்கால் போய், அவரிட்டையே கேட்டுப் பார்த்துட்டு வாறன்... ஏதோ கடவுள் விட்ட வழி..."

செல்லம்மா கொடியில் இருந்த சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குப் போவதற்கு ஆயத்தப்படுத்தினாள்.

இதயத்தை அழுத்திப் பிடித்த துயரத்துடன், அந்த முகாமை விட்டு வெளியேறிய செல்லம்மா, ஒருவாறு நடந்து சுமார், ஒரு மைல் தூரத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடையவும், அங்கு அலுவலகப் பணிகள் ஆரம்பமாகவும் சரியாக இருந்தது.

வசதிகளும், வாய்ப்புகளும் நிறைந்த நகரப் புறங்களில் கிடைக்கின்ற வளங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டு, ஏனோதானோ என்று இருக்கின்ற அதிகாரிகளைப் போன்றவர்களை அங்கே, வன்னியில் காணமுடியாது... அவர்களை யாருமே மேற்பார்வை செய்வதில்லை... ஆனால் பற்றுறுதியோடும், மனிதாபிமானத்தோடும் பணியாற்றுகின்ற மனிதர்களைக் கொண்டுதான், அங்கே உள்ள அலுவலகங்கள் எல்லாமே இயங்குகின்றன.

"என்னம்மா.... இண்டைக்கும் நேரத்தோடையே வந்து விட்டியள் போல கிடக்கு. சரி... உள்ளை நடவுங்க. நான் சைக்கிளை விட்டிட்டு வாறன்..."

அந்த அலுவலகத்தினுள் தனது, மோட்டார் சைக்கிளில் வந்து சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் சிவானந்தா, தூரத்தில் வரும்பொழுதே, செல்லம்மாவைக் கண்டுவிட்டார்.

வழமையாகவே சோகத்துடன் வந்து போகும், செல்லம்மாவைக் கண்டதும் அன்றும் அவரையறியாமலேயே, அவள் மீது ஒருவித இரக்கம் ஏற்பட்டது. அலுவலக அறையை நோக்கி நடந்து கொண்டிருந்த சிவானந்தாவைத் தொடர்ந்து, செல்லம்மாவும் தயங்கித் தயங்கியபடியே பின் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தாள்.

"சண்முகம்... அந்த அம்மாவை இன்னும் கொஞ்ச நேரத்திலை உள்ளை அனுப்பு..."

வாசலில் எழுந்து நின்ற 'வாச்சரிடம்' கூறியபடியே, கதவைத் திறந்து தனது அலுவலக மேசையை நோக்கிச் சென்ற சிவானந்தா, அன்று மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்களைத் தன் குறிப்பேட்டில் இருந்து மேலோட்டமாக ஒரு தடவை பார்த்துக் கொண்டார்.

அன்றைய பணிக்கான தனது ஆரம்ப வேலைகளை முடித்துவிட்டு, வாசலில் நின்ற சண்முகத்தைப் பார்த்துச் சைகை காட்டினார்.

அவரது அனுமதி கிடைத்ததும், சண்முகம் செல்லம்மாவை உள்ளே செல்லுமாறு கூறிக் கதவைத் திறந்து விட்டான்.

உதவி அரசாங்க அதிபரின் அலுவலக மேசையை நோக்கி, மெதுவாகச் சென்று கொண்டிருந்த செல்லம்மா அவருக்கு அருகே வந்ததும், கையைக் கட்டிக் கொண்டு அவரையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"அம்மா... இந்தக் கதிரையிலை இருங்க..."

அச்சம் கலந்த பார்வையுடன், அவருக்கு எதிரில் இருந்த செல்லம்மாவையே பார்த்துக் கொண்டிருந்த அந்த இளம் உதவி அரசாங்க அதிபருக்கே, அரசு மேற்கொள்ளும் பாரபட்சமான நடவடிக்கைகளை நினைத்துப் பார்த்ததும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"சே... என்ன போக்கிரித்தனமான வேலை... சந்தோஷமாகத் தங்கடை, தங்கடை வீடுகளில் இருந்து உழைத்துச் சாப்பிட்டு நிம்மதியாக வாழ்ந்த சனத்தைத் சமாதானத்திற்கான யுத்தம் என்ற போர்வையிலை துரத்தி அடித்து அகதிகளாக்கிவிட்டு, பட்டினி போட்டுக் கொல்லும், இந்தக் கொடுமையை ஆரிட்டைப் போய்ச் சொல்லி அழுறது...?"

அவருடைய இதயம் குமுறிக் கொண்டிருந்தது. இதனை வாய்விட்டு எவரிடமும் கூறினாலோ, அல்லது அறிக்கையாக அனுப்பி வைத்தாலோ 'ராஜத் துரோகி' என்ற பெயரும் சூட்டப்பட்டு, தண்டனை இடமாற்றமும் கிடைத்துவிடும் என்பதால், அவருடைய உள்ளத்து உணர்வுகளை இதயத்திற்குள்ளேயே அமுக்கிக் கொண்டார்.

"ஐயா... என்ரை பிள்ளைகள் இரண்டும், பத்து நாளா அன்னத்தைக் காணாமல், அப்பிடியே வாடி வதங்கிப் போய்க் கிடக்குதுகள். இந்த முறை மட்டும், ஏதோ பார்த்து நிவாரணம் தந்தியள் எண்டால் உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்..."

அவருடைய காலில் விழாத குறையாக, சர்வாங்கமும் ஒடுங்கிக் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்த செல்லம்மாவின் கைகள் தளர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தன.

"அம்மா... நீங்கள் இப்படிக் கதைக்கிறதைப் பார்க்கவே எனக்குக் கஷ்டமாக இருக்குது... எனக்குத் தாறதுக்கு விருப்பமில்லை என்று நினைக்காதீங்க... அரசாங்கம் தான் இரண்டாம் கட்ட நிவாரணத்தை நிறுத்திட்டுது... அப்படியிருந்தும் இடைக்கிடை எங்களுடைய வேறு நிதியில் இருந்துதான், உங்களுக்கு நிவாரணம் தந்தனாங்கள்...."

சிவானந்தா ஒரே மூச்சில் கூறிவிட்டு தனது கோவையில் இருந்து சில படிவங்களை எடுத்து எதையோ எழுதிக் கொண்டிருந்தார். அவருடைய செய்கை, செல்லம்மாவுக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது... அவரையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அம்மா... உங்கடை கஷ்டம் எனக்கு விளங்குது... இண்டைக்கு உங்களை மாதிரி ஆயிரக்கணக்கான சனங்கள் இதேமாதிரிச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்குதுகள்... என்ன செய்வது. இண்டைக்கும் எங்கடை வேறு உதவி நிதியில் இருந்து, உங்களுக்கு நானூற்றைம்பது ரூபாவுக்குரிய உலர் உணவுப் பொருட்களை வாங்குவதற்குப் ‘பெர்மிட்’ தாறன்... இதற்கு மேல் என்னாலை ஒன்றுமே செய்யமுடியாது... சரி உங்கடை அடையாள அட்டையையும், அகதிக் காட்டையும் எடுத்துத் தாங்க...”

அவர் இப்படிப் ‘பெர்மிட்’ தருவதாகக் கூறியதும், செல்லம்மாவின் தலையில் இருந்து உள்ளங்கால் வரை மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது... ஏதோ, ‘ஜாக்பொட்’ பரிசு கிடைத்துவிட்டது போல் குதூகலித்தாள்.

இப்படி ஒரு பெரிய தொகைக்கு ‘நிவாரண பெர்மிட்’ தருவார் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

“ஐயா... நீங்கள் நல்லா இருக்க வேணும்... தெய்வம் போல வந்து இண்டைக்குச் செய்த உதவியை என்னாலை மறக்கேலாது... அந்தப் பெர்மிட்டுக்கு அரிசி வாங்கினன் எண்டால், கடவுளே... என்ரை பிள்ளையளுக்கு ஒரு நேரக் கஞ்சியைத் தன்னும் கொஞ்ச நாளைக்குக் காய்ச்சிக் கொடுப்பன்...”

‘பிடி அரிசியை’ எதிர்பார்த்து வந்தவளுக்கு, கொத்துக் கணக்காக அரிசி கிடைக்கப் போவதை நினைத்ததும், கைகால் புரியாத மகிழ்ச்சி...

அவளுடைய அந்த மகிழ்ச்சியைக் கண்டதும், சிவானந்தாவின் கண்கள் குளமாகிக் கொண்டு வந்தன. செல்லம்மா, தன்னுடைய பையில் இருந்து தேசிய அடையாள அட்டையையும், அகதிகளுக்கான அடையாள அட்டையையும் எடுத்துக் கொடுத்தாள். அங்கே உள்ளவர்கள், எப்பொழுதாவது இருந்து விட்டுத்தான் இப்படி ஏதாவது ஒரு தேவைக்கு அடையாள அட்டையைக் காட்டவேண்டி வரும். ஆனால் வன்னிக்கு வெளியே வாழ்கின்றவர்களைப் பொறுத்தவரையில், அடையாள அட்டை

இல்லாமல் எங்குமே செல்ல முடியாது. அந்த அளவுக்கு ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை... நாய்களுக்கு பட்டி கட்டி இலக்கமிடப்பட்டிருப்பது போல், மனிதருக்கும் அந்த அடையாள அட்டையில் தான் உயிரே இருக்கின்றது.

நாய்களின் கழுத்தில் பட்டி இல்லாவிட்டால், நகரசபைக்காரர்கள் பிடித்துக் கொண்டு போய்ச் சுட்டுப் புதைத்து விடுவார்கள். ஆனால் மனிதர்களின் கைகளில் அது இருந்தாலும்கூட சிலவேளைகளில் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்.

செல்லம்மாவிடம் இருந்து பெற்ற அடையாள அட்டையையும், அகதிகளுக்கான அடையாள அட்டையையும் வாங்கிப் பதிந்து விட்டு, அவற்றுடன் நானூற்றைம்பது ரூபாவுக்கான நிவாரணப் பெர்மிட்டையும், சேர்த்துச் செல்லம்மாவின் கைகளில் கொடுத்தார்.

அதை, அவரிடமிருந்து வாங்கிய செல்லம்மா, கண்ணீர் கனக்க, கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறி, கூட்டுறவுச் சங்கக் கடையை நோக்கி நடந்தாள்.

"முருகா... இண்டைக்குத் தான் உன்ரை கண் திறந்திருக்குது... ஐயோ என்ரை பிள்ளைகள் எத்தினை நாளாச் சாப்பாடு இல்லாமல் துடித்துக் கொண்டிருக்குதுகள்... போன உடனை கஞ்சி காய்ச்சிக் கொடுத்து, அந்தப் பிள்ளையள் சிரிக்கிறதைப் பார்க்க வேணும்..."

மனதிற்குள் நினைத்தபடியே, இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.... அவளுக்கு எங்கிருந்து தான் அந்த உத்வேகம் வந்ததோ தெரியவில்லை. இன்னும், இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

கூட்டுறவுச் சங்கக் கடையில் இருந்தும், அரிசியை வாங்கிக்கொண்டு, ஆனந்தபுரம் அகதி முகாமை நோக்கி ஓட்டமும், நடையுமாகச் சென்றடைந்தாள்.

ஒரு நாளா, இரண்டு நாட்களா...? பத்து நாட்கள் அல்லவா... வானதி பசியினால் துடித்துக் கொண்டிருக்கின்றாள்... எப்பொழுதாவது, இடையிடையே கிடைக்கின்றவற்றை ஆண்பிள்ளை என்றபடியாலோ என்னவோ, பிரதீபனுக்குக் கொடுத்துவிட்டு, வெறுந் தண்ணீருடன் கனன்று

கொண்டிருக்கும் வானதியின் வயிற்றில், உப்புக் கஞ்சியையாவது வார்த்துவிட வேண்டும் என்ற ஆதங்கம், அவளை ஒரு புதிய உலகத்திற்கு இழுத்துச் செல்வது போல் இருந்தது.

“பிள்ளை... பிள்ளை.... வானதி.... இஞ்சை அரிசி கொண்டு வந்திட்டன்... எழும்பிக் கெதியாய் வாணை....”

செல்லம்மாவின் கால்கள் ஒரு நிலையில் நிற்கவில்லை.... கொண்டு வந்த அரிசியை காய்ச்சிக் கொடுக்கவேண்டும் என்ற ஆவலில் அவள் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

அந்த வகுப்பறையின் வாசலையும் தாண்டி, சேலைத் துணியினால் மறைப்புக் கட்டியிருந்த அந்த அறையை எட்டிப் பார்த்தாள். நீண்ட நேரம் வயிற்றுவலியினால் துடித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, அந்தப் பாயில் அப்படியே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பவள் போல் வானதி படுத்திருந்தாள்.

“பிள்ளை... பிள்ளை... இந்த மத்தியான வெயிலுக்கை படுத்திருக்கிறியோ... எழும்பணை.... எங்கை பிரதீபன் போய்ற்றான்? பிள்ளை வானதி!....”

மீண்டும், உரத்துக் கூவியபடியே, அவள் படுத்திருந்த பாயை நெருங்கி வந்து வானதியை உற்றுப் பார்த்தாள், அப்பொழுதும் கூட அவள் அசைவது போல் தெரியவில்லை....

வானதியின் கண்கள் திறந்திருந்தன. உதடுகள் இரண்டும் விரிந்து, பற்கள் அப்படியே பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. அசையாது படுத்துக்கிடந்த அவளுடைய அந்த அழகிய முகத்தில், ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன...!

அந்தக் காட்சியைக் கண்டதும், செல்லம்மா அப்படியே, பேச்சு மூச்சற்று, விறைத்துப்போய் நின்றாள்.... அந்த ஒரு கணத்தில் அவளுடைய இதயமே வெடித்துவிடும்போல் இருந்தது...

“ஐயோ!... என்ரை பிள்ளை!.... பட்டினி வயிற்றோடை இந்தப் பாவி முகத்தைப் பார்க்கக்கூடாது என்று அப்படியே போயிட்டியோணை! ஐயோ... ஐயோ...”

முகத்திலும், தலையிலும் அடித்துக் கதறி அழுது புரண்ட செல்லம்மாவின் ஓலம், அந்த ஆனந்தபுரம் அகதி முகாமையே ஒருகணம் அதிரவைத்து விட்டது!

அவள் கொண்டு வந்த அரிசிப் பை அப்படியே விழுந்து, அரிசி மணிகள் சிதறிப் பறந்து பசியினால் மடிந்து உணர்வற்றுப்போன வானதியின் வாயிலும், மூக்கிலும் விழுந்து நிறைந்தது!

அவளுடைய மகன் பிரதீபன் புதிய போராளிகள் இணையும் செயலகத்திற்குப் போவதற்குமுன், தாய்க்கும், வானதிக்கும் காலையிலேயே எழுதி வைத்துவிட்டுப் போன அந்த கடிதம்கூட காற்றில் பறந்து, வானதியின் உயிரற்ற உடலுக்கு அர்ப்பணமாகிக் கொண்டிருந்தது!

*(1999)*

***(1999 இல் அவுஸ்திரேலிய விக்ரோறியா தமிழ்ச் சங்கம் நடத்திய அனைத்துலக சிறுகதைப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற சிறுகதை.)***

# கானல் நீர்

ஓங்கி வளர்ந்து நின்ற இரப்பர் மரங்கள், காற்றுக்கு வளைந்து கொடுக்கும் வகையில் அங்கும், இங்குமாக ஆடி, அசைந்து கொண்டிருந்தன... அவற்றின் நீண்ட மெல்லிய இலைகளில் இருந்தும் எழும்பிக் கொண்டிருக்கும் உரசல் ஒலி, பாதுக்கை கிராமத்தை ஊடறுத்தபடி போய்க்கொண்டிருந்தது...!

மகரகமவில் இருந்து அவிசாவளை செல்லும் பிரதான பாதையில், மீப்பேக்குச் சிறிது முன்னால் இடது புறமாகப் பிரிந்து செல்லும் பாதையூடாகச் சென்றால் 'பாதுக்கை' என்ற அந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தை அடைந்து விடலாம். பௌத்த மதக் கோட்பாடுகளையும், சிங்களப் பண்பாட்டு விழுமியங்களையும் மிக இறுக்கமாகக் கடைப்பிடித்து வாழ்கின்ற அந்தக் கிராமத்து மக்களின் வாழ்வே இரப்பர் மரங்களுடனும், விவசாய நிலங்களுடனும் பின்னிப் பிணைந்து போய் இருந்தன.

தூரத்தே, வானை முட்டும் அளவுக்கு உயர்ந்து நின்ற பௌத்த விகாரையின் வெண்பளிங்குத் தாதுகோபம், சுற்றிவர இருந்த நியோன் விளக்குகளின் ஒளி வெள்ளத்தில், பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அந்த மனோரம்மியமான சூழலில் கூட, மனம் ஒன்றிப் போகாத நிலையில் அமைதியற்றவனாக நடந்து கொண்டிருந்த சுனில் தேசப்பிரியாவின் நெஞ்சு, கனத்துக் கொண்டிருந்தது.

ஆறு வருடங்களுக்குப் பிறகு, அந்தப் பாதை வழியாகத் தன்னுடைய வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். வீட்டில் உள்ள, அவனுடைய அம்மா, அக்காமார், தம்பி ஆகியோரை நீண்ட நாட்களுக்குப்பின் பார்க்கப்

போகின்ற அந்த இன்ப உணர்வை முழுமையாக அனுபவிக்கமுடியாத நிலையில், தோளில் தொங்கிக் கொண்டிருந்த உடுப்புப் பையின் சுமை ஒருபுறமும், யுத்த முனையில் அனுபவித்துவிட்டு வந்த துயரங்கள் இன்னொரு புறமுமாக அவனது இதயத்தை அழுத்திக்கொண்டிருந்தன.

"அம்மாவுக்கு இப்ப என்னைக் கண்டதும், சரியான அதிர்ச்சியாகத்தான் இருக்கப் போகுது.... எத்தனை வருடத்துக்குப் பிறகு, எங்கடை ஊருக்கு வாறன்.... ஷ.... இந்த ஊர், எப்படியெல்லாம் மாறிப்போய் இருக்குது...?"

அந்தப் பாதையின், இரு பக்கங்களிலும் பூட்டப்பட்டிருந்த மின் விளக்குகள், அந்த இருளையே பகலாக்கிக் கொண்டிருந்தன.

சுற்றிவர எங்கு பார்த்தாலும், அழகிய உயர்ந்த மாடிக் கட்டிடங்கள்... நீண்டு செல்லும் ரப்பர் மரங்களின் இடையிடையே எழுந்த சின்னச் சின்னக் கடைகளுமாக, அந்தக் கிராமமே ஒரு புதுவடிவம் எடுத்திருந்தது... அவை எல்லாமே, அவனுக்குப் புதிதாகத்தான் இருந்தன...!

"எங்கடை கொட்டில் இருந்த இடத்திலையும் இப்ப, நல்ல வடிவான கல்வீடு கட்டப்பட்டிருக்கும்... கறன்ற் வந்திருக்கும்... ரீவி பூட்டியிருப்பினம்... அம்மா, இப்ப முன்னையை விட நல்ல சந்தோசமா இருப்பா..."

அவனுடைய மனம், கற்பனைகளை இன்னும் பலமாக வளர்த்துக் கொண்டிருந்தது.

அன்று, இராணுவத்தில் சேர்வதற்காக, இதே பாதையினூடாக வீட்டை விட்டுக் கிளம்பிய சுனில் தேசப்பிரியா, ஆறுவருட இராணுவ சேவையின் பின்னர், தன்னுடைய தாயைப் பார்ப்பதற்காக வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

ஆறு வருடங்களாக, அவனுடைய சம்பளப் பணத்தின் ஒரு பகுதி, வீட்டுக்கு அனுப்பப்படுவதாகவும், இராணுவத்தில் சேர்ந்தவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பாசறையில் கூறப்பட்டபோது, அன்று சுனில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவனுடைய தாய், சகோதரர்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவனை நெருட்டிக் கொண்டிருந்தது. எத்தனையோ தடவைகள், வீட்டுக்குப் போய் வருவதற்கான அனுமதியைக் கேட்டபோதும், அவசரகால, யுத்த நெருக்கடியைக் காரணம் காட்டி, 'டிவிசன்' பொறுப்பதிகாரி மேஜர் ரட்ண சூரியா, அவனுடைய லீவு விண்ணப்பத்தை நிராகரித்து வந்தார்.

அவனால் எவ்வளவு காலத்திற்குத்தான் உள்ளத்து ஆசா பாசங்களையும், விருப்பு வெறுப்புக்களையும் அடக்கி வைத்திருக்க முடியும்...? அந்த விரக்தியின் உச்சக் கட்டத்தில் பொறுமையை இழந்துவிட்ட சுனில், தற்கொலை செய்துவிடலாமோ என்றுகூட நினைத்தான். அது, அவனால் முடியாத நிலையில் தான் வருவது வரட்டுமென்று புறப்பட்டு விட்டான். அந்த முகாமை விட்டு வெளியேறுவதற்கு முன், சுகயீனம் காரணமாக லீவு வழங்கவும் என்று கடிதம் எழுதி, அவனுடைய நண்பன் ரஞ்சித் பண்டார மூலம், கொடுத்துவிட்டு எவர் கண்ணிலும் படாது, வெளியேறித் தன் சொந்தக் கிராமமான பாதுக்கையை வந்து சேர்ந்துவிட்டான்.

அவனுக்கு ஏற்கனவே பழகிப்போன பாதையூடாக நடந்து கொண்டிருக்கும் பொழுதே, சுனில் தேசப்பிரியாவின் வரண்டுபோன நினைவுகள், ஆறு வருடங்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவங்களையே அசை மீட்கத் தொடங்கிவிட்டன.

அன்று...!

நிசப்தம் குடிகொண்டிருந்த அந்த இரவில், பாதுக்கையில் இருந்த, அந்தச் சின்னஞ்சிறிய மண்குடிசையில் ஒரே ஒரு குப்பி விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது...! அங்கே, சுனில் தேசப்பிரியாவுடன், அவனுடைய அம்மா கேமலதா, இரண்டு மூத்த சகோதரிகள், ஒரு தம்பியுமாக ஐந்து ஜீவன்கள், அமைதியிழந்து, தூக்கமின்றி உழன்று கொண்டிருந்தன.

சுனில், வெறும் பாயில் படுத்திருந்தபடியே, நித்திரையின்றி மாறி மாறிப் புரண்டு கொண்டிருந்தான்... அந்த இரவு மட்டும் இன்னும் சிறிது நேரத்தில் விடிந்துவிடும்.

ஆமாம்...! அப்படி வந்து போகும், இரவுகள் விடிந்து விடுவதால் மட்டும் அவனுக்கு என்ன லாபம் கிடைத்துவிடப்போகின்றது? அவனுடைய இரண்டு அக்காள்களின் கண்ணீரையும், தம்பியின் புலம்பலையும், தாயின் வேதனையையும் அவனால், தீர்த்துவிடத்தான் முடியுமா?

“புத்தா...! அய்.... நிதா கண்ட நத்தத? ஹெட்ட உதே கொலம்ப யனவாத புத்தா...?”

சுனில், நித்திரை இல்லாமல் மாறி மாறிப் புரண்டு கொண்டிருந்ததை... கேமலதாவும் கவனித்துக் கொண்டே இருந்தாள். விடிந்ததும், கொழும்புக்குப் போவதை நினைவூட்டுவது போன்ற அவளுடைய வார்த்தைகள், அவனுடைய இதயத்தை இன்னும் துளைத்தெடுத்தது.

"விடிந்தால் கொழும்புக்குப் போய்விட வேண்டும்... அப்போ, அம்மாவையும், சகோதரங்களையும் பிரிந்துவிட வேணும்..."

சுனிலின் இதயம், நெருப்பில் விழுந்த புழுப்போல், துடித்துக் கொண்டு இருந்தது.... அவனுக்குள்ளாகவே, அவன் அழுது கொண்டிருந்தான்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி அடைந்து, அதன் அடிப்படையில் பல்கலைக் கழகத்திற்குப் போவதற்கான ஆயத்தத்தில் இருந்த சுனில் தேசப்பிரியாவுக்கு, அவனுடைய மாமன் கூறிய அந்தச் செய்தி பேரிடியாக விழுந்து விட்டது.

"கேமா...! என்னாலை இனி உங்களுக்குப் பணம், உதவி செய்யேலாது.... எனக்கும் பிள்ளைகள் வளர்ந்து வந்துட்டாங்கள்... இவ்வளவுக்கும் உன்னையும் பார்த்து, உன் மகனையும் படிக்க வைச்சிட்டன்... இனி, நீங்களே உங்கடை வழியைப் பார்க்கவேணும்..."

கேமலதாவின் அண்ணன், பியசேன, இப்படி ஒரு குண்டைத் திடீரெனப் போட்டுவிடுவான் என்று அவள் எதிர் பார்க்கவில்லை... ஆறு வருடங்களுக்கு முன்பு அரசியல் கிளர்ச்சியாளர்களை அழித்தொழித்தல் என்ற பெயரில், கேமலதாவின் கணவன் தேசப்பிரியா, விசாரணைக்கு என்று வெள்ளை வான் ஒன்றில், யாரோ சிலரால் கூட்டிச் செல்லப்பட்டவர்தான், அதற்குப் பிறகு அவருக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை தெரியாது.

அந்த நாட்களில் களனி கங்கையில், தலையில்லாது மிதந்த முண்டங்கள்... ரயர் போட்டு எரிக்கப்பட்ட உடலங்கள்... குழிகளில் உயிரோடு புதைக்கப்பட்ட மனித உயிர்கள்... என்று பல்லாயிரக்கணக்கான மக்களை இந்தப் பூமியில் இருந்தும் பெயர்த்து எறிந்துவிட்ட அந்தக் கொடூரமான சம்பவங்களை, இலகுவில் யாரால்தான் மறந்துவிட முடியும்...? அப்படிப் பெயர்த்தெடுத்துவிட்ட மனித உடலங்களில் ஒன்றாகவே, தேசப்பிரியாவும் சங்கமமாகியிருப்பான் என்பது அந்த ஊரவர்களின் நம்பிக்கை...!

ஆனால் கேமலதா மட்டும், தன்னுடைய கணவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையில் இன்றுவரை காத்திருக்கின்றாள். அவன் காணாமல் போய்விட்ட பின்னர், இந்த ஆறு வருடங்களாக பியசேனாவே, அவர்களது குடும்பத்தையும் பராமரித்து வருகின்றான்.

"அண்ணே!... இப்ப வந்து திடீரென இப்படிக் கூறினால், நான் யாரிட்டைப் போவன்?... மகன் சுனில், பல்கலைக் கழகம் போய் வரும் வரையாவது...."

அவள், அழாக்குறையாக, இரந்து கொண்டிருந்தாள்.

"கேமா!... நான் இதுக்கு மேலே என்ன செய்யிறது...? உன்ரை மச்சாளின் குணமும் தெரியும் தானை.... இவ்வளவு காலமும் அவவைச் சமாளித்து வந்ததே பெரிய காரியம்.... எங்களுக்கும் வர வரக் கடன் ஏறிட்டுப் போகுது... கேமா!... ஒன்று செய்யேன்... புதிதாக இராணுவத்திற்கு ஆட்களை எடுக்கப் போகின்றார்களாம்... சுனில் படிச்சிருக்கிறபடியால், அதிலை சேர்ந்திட்டான் எண்டால், சீக்கிரமா மேலை வந்துடுவான். தெரிவு செய்யப்பட்ட உடனேயே, படி, கிடி எல்லாம் சேர்த்துப் பத்தாயிரம் ரூபா வரை கிடைக்குமாம்... அதை அப்படியே வீட்டுக்கு அனுப்பி வைப்பாங்களாம்... சாப்பாடு, உடுப்புச் செலவு எல்லாம் இலவசமாம்... வீடு இல்லாதவங்களுக்குக் கல்வீடுகூடக் கட்டிக் கொடுப்பாங்களாம்... சுனில் மிலிற்றரியிலை சேர்ந்திட்டான் எண்டால், நாட்டைக் காக்கிறதாகவும் இருக்கும், வீட்டுக்குக் காசாகவும் இருக்கும்...."

பியசேன, மிகவும் சுவாரசியமாகவும், கவர்ச்சிகரமாகவும் வார்த்தைகளை நீட்டி இழுத்துக் கொண்டு போனது, கேமாவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றுவது போல் இருந்தது.

"அண்ணை!... இவ்வளவுக்கும் படிக்க வைச்சிட்டு என்ரை மகன் சுனிலைப் பட்டாளத்திலை சேர்க்கச் சொல்லுறீங்களோ...?"

அவளுடைய தாய் மனம், துடித்துக் கொண்டிருந்தது.... இந்த யுத்தத்தின் கொடூரத்திற்குக் கணவனையே இழந்துவிட்டு, அவள் அனுபவித்து வருகின்ற துயரங்கள் கொஞ்சமா?

அந்தத் துயரத்தின் வடு, மாறுவதற்கு முன்னரே இன்னொரு பலிக்கடாவையும் இந்த அர்த்தமற்ற போருக்கு அனுப்ப அவளுடைய உள்ளம், இடம் கொடுக்கவில்லை.

"அண்ணா!... முடியாது... என்னாலை, என்ரை மகனைப் பட்டாளத்திற்கு அனுப்ப முடியாது..."

அவள் தலையில் அடித்துக் கொண்டு, அழுது புலம்பத் தொடங்கி விட்டாள்.

"அப்ப சரி!... நான் போறன்... நீ சரி... உன்ரை மகன் சரி... என்னவாவது செய்யுங்க... நல்லதொரு வழியைக் காட்ட, அதையே வேண்டாம் என்று சொல்லுறாய்... இதுக்கு மேலை நான் என்ன செய்ய..."

அந்தக் குடும்ப பிணைப்பில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு தப்புவதற்கு, இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்த பியசேன, கோபித்துக்கொண்டே போய்விட்டான்.

பியசேன, இப்படிக் கூறிவிட்டுச் சென்றதைத் தொடர்ந்து, கேமலதாவின் இதயம், குருதிக் கண்ணீர் வடித்தது.

"ஐயோ!... என்ரை மகன்!... உன்னைப் பட்டாளத்திலை சேர்த்திட்டு எப்படிடா நான் வாழப்போறன்...?"

அந்தத் துயரத்தின் வெம்மையைத் தாங்க முடியாத கேமலதாவினால் அழுது புலம்புவதைத் தவிர வேறு எதைத்தான் செய்யமுடியும்...?

'யுத்தம்' என்ற ஒன்று, இந்த நாட்டில் திணிக்கப்பட்ட பின்னர், கிராமப் புறங்களிலும், சேரிகளிலும் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களே, கவர்ந்திழுக்கப்பட்டு, குறுகிய காலப் பயிற்சி கொடுக்கப்பட்டு, போர் முனைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர் என்றுதான் அவளும் கேள்விப்பட்டிருக்கின்றாள்.

அவசர, அவசரமாக அரை குறைப் பயிற்சியை முடித்து அனுப்பி வைக்கப்பட்ட பல இளைஞர்கள் தான், பின்னர் யுத்தமுனைகளில் இருந்து 'பொலித்தீன் பைகளில்' சடலங்களாக அனுப்பப்பட்டுக் கொண்டிருக் கின்றனர் என்ற செய்தியை அடிக்கடி பத்திரிகைகளில் பார்த்ததால் கேமலதாவினால், சுனிலை இராணுவத்திற்கு அனுப்பி வைப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

"அம்மா!... ஏனம்மா அழுகிறீங்க...? மாமா சொல்லுறதும் சரிதானே?... எவ்வளவு காலத்திற்குத் தான் அவராலை இப்படிப் பணம் தந்து கொண்டிருக்க முடியும்...? அவருக்கும் என்று, ஒரு குடும்பம் இருக்குத் தானை அம்மா..."

வாசல் கதவைத் திறந்து கொண்டு, அப்பொழுது தான் உள்ளே நுழைந்த சுனில் தேசப்பிரியாவைக் கண்டதும், கேமலதா அதிர்ந்து போய் விட்டாள்.

"மகன்!... மகன்!... நீ... நீ... இங்கையா நிண்டாய்...?"

அதுவரை, அவளுக்கும் பியசேனாவுக்கும் இடையில் நடந்த உரையாடல்களை, அவனும் அறிந்துவிட்டானே என்ற பதற்றத்தில் கேமலதாவின் வார்த்தைகள் தடுமாறின.

"ஓம்!... அம்மா!... மாமா பேசியது எல்லாம் கேட்டுக் கொண்டு தான் நின்றனான்... அம்மா!... எங்களுக்கு என்று சொந்த வீடு இருக்கா...? அக்காக்களுக்கு ஒரு நகைகூட இருக்குதா? நாம் நாளைக்கு வாழ்கிறதுக்கு என்று கொஞ்சம் பணம் கூடச் சேமிப்பிலை இருக்கா அம்மா...? இந்த நிலையிலை இவ்வளவு சுமைகளையும் தாங்கிக்கொண்டு, எப்படி அம்மா என்னால் படிக்க முடியும்...?"

அவன் உறுதியாக நின்றபடி, ஒவ்வொரு அம்புகளாகத் தொடுத்துக் கொண்டிருந்தான்... அவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளும், அவளுடைய இதயத்தைச் சம்மட்டியால் அடிப்பது போல் இருந்தது.

"அம்மா!... கவலைப்படாதீங்க அம்மா!... நான் நாளைக்கு இராணுவ ஆட்சேர்ப்புக்கான இன்ரவியுவுக்குப் போறன்... என்னுடைய இந்தச் சேவையாலை எங்களுக்கு ஒரு வீடும் கிடைக்கும்... என்ரை அக்காக்களை நல்ல இடத்திலை கலியாணம் கட்டியும் கொடுக்கலாம்... நான் படிச்சுப் பட்டம் பெற்று, உத்தியோகம் கிடைத்து உழைக்கிறதென்றால், எவ்வளவு காலம் செல்லும்..."

சுனில் தேசப்பிரியாவின் நெஞ்சு கனத்துக் கொண்டிருந்தது... ஆம்!... அவனுடைய பல்கலைக் கழகக் கனவுகள், உடைந்து நொருங்கிக் கொண்டிருந்தன... சுனில், அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக, இராணுவத்தில் சேரப்போகின்றானாம் என்ற செய்தியை அவனுடைய குடும்பத்தினரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

அன்று, அந்த வீட்டில் அடுப்பே எரியவில்லை... எல்லோருமே அழுது, அழுது அப்படியே படுத்துவிட்டார்கள்... ஆம்!... அன்று அது ஒரு சாவீடாகவே மாறிவிட்டிருந்தது. அந்த மௌன இரவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு யுகமாக நகர்ந்து கொண்டிருந்தன. அன்று இரவு முழுவதும் கண்விழித்து, அழுது கொண்டிருந்ததனால், சுனிலின் கண்கள் இரண்டும் வீங்கிப்போய் இருந்தன.

இராணுவ ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைக்குப் போய்க் காத்திருந்த சுனிலுக்கு, அங்கே வந்தவர்களைக் கண்டதும் ஏமாற்றமாகத்தான் இருந்தது...! மிகப் பெருமளவில் ஆட்கள் வந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தவனுக்கு, அங்கே பத்து அல்லது பதினைந்து பேர் வரையில் இருந்தவர்களைக் கண்டதும், அதிர்ச்சியாக இருந்தது. அன்று, அந்த நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளித்திருந்தவர்கள் எல்லோரையும் உடனடியாகவே தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகுமாறு கூறப்பட்டதும், சுனிலுக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

"இவ்வளவு அவசர அவசரமாக இராணுவத்திற்கு ஆட்களை எடுக்கின்றார்களே...? வீட்டிற்குப் போய், எல்லாரிட்டையும் சொல்லிட்டு வரக்கூட அவகாசமில்லாமல்....."

தியத்தலாவையில் அவனுக்கு வழங்கப்பட்ட குறுகியகால இராணுவப்பயிற்சிக்குப் பின்னர், வடபகுதிப் போர் முனைக்கே அனுப்பி வைக்கப்பட்டான்.

அன்று தொடக்கம், அந்த ஆறு வருடங்களாகப் போர்முனையில் அவன் அனுபவித்து வந்த துயரங்கள், நெஞ்சை உருக்கிய அனுபவங்கள்... அவனை ஒரு நிலையில் இருக்க விடவில்லை... அவற்றையெல்லாம், அவனுக்குள்ளாகவே ஜீரணித்துக் கொண்டு நடைப்பிணம் போல் காலத்தைக் கடத்தி வந்தான்.

'புலி வாலைப் பிடித்துக் கொண்டு நின்றவன்' நிலையில் சுனில் தவித்துக்கொண்டிருந்தான். பிடித்துக் கொண்டு நிற்கவும் முடியாமல், விடவும் முடியாமல்... அவன் பட்ட தவிப்பு...?

"சேக்!... இந்த யுத்தம் எதுக்காக நடக்குது?... யாருக்காக நடக்குது என்றே எங்களுக்குத் தெரியேல்லையே...! ஏன் சண்டை பிடிக்கிறோம் என்றே தெரியேல்லை. ஒவ்வொரு நாளும் மரண பயத்துடனேயே இந்தக் காவலரண்களில் காலத்தைக் கழிக்க வேண்டியிருக்குது... மச்சான் சுனில்!... எப்ப நாம ஊருக்குப் போகப் போறம்...?"

அன்றும் வழமைபோல், போர்முனையின் முன்னணிக் காவலரணின் பாதுகாப்புக் கடமையில் இருந்த சுனில் தேசப்பிரியாவும், அவனுடைய பயிற்சிக் காலத் தோழன் ரஞ்சித் பண்டாராவும் கண்விழித்தபடியே அந்தக் காட்டுவெளியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

தூக்கக் கலக்கத்தில் ரஞ்சித் கூறிய, அந்த வார்த்தைகளைக் கேட்டதும் சுனிலுக்குச் சிரிப்புத்தான் வந்தது... ரஞ்சித் பண்டாராவும் அவனைப் போலவே இராணுவத்தில் புதிதாக இணைந்து கொண்டு பயிற்சி பெற்றவன்...

பதுங்கு குழியினூடாகப் பொட்டுப் பொட்டாகப் பரவிக் கொண்டிருந்த காட்டு நிலவொளியில், ரஞ்சித்தின் முகம் பேயறைந்தது போல் இருந்ததை சுனில் கவனித்தான்.

"ரஞ்சித்!... நான்கூட அதைப் பற்றித்தான் இவ்வளவு நாட்களாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறன். இப்பிடியே, வெறுமனே இந்த வன்னிக் காடுகளையும், வரண்டுபோன எங்கடை பாசறைகளையும் பார்த்துக் கொண்டும், அறுந்துபோன உறவுகளை எண்ணிக்கொண்டும் எத்தனை நாட்கள் இந்த இருட்டறை வாழ்க்கையை வாழப்போறம்...? இதுக்கு ஒரு முடிவு கிடைக்கும் என்று நான் நினைக்கேல்லை. அவங்களும் விடாங்கள்... எங்கடை ஆட்களும் விடமாட்டினம்... இந்த மண்ணே, எங்களுக்குப் புதை குழியாகிவிடும் போல..."

"சுனில்!... நீ சொல்லுறதும் சரிதான்.... அவங்கள், தங்கடை இனத்துக்காகச் சம்பளம் இல்லாமல், ஏதோ ஒரு இலட்சியத்துக்காக என்று கூறிக்கொண்டு சண்டை பிடிக்கிறாங்கள்... ஆனால், நாங்கள் ஆருக்காகச் சண்டை பிடிக்கிறம்...? ஒவ்வொரு அரசியல்வாதிகளின்ரையும் பாராளுமன்றக் கதிரைகளைக் காப்பாற்றி அவர்களை வாழ வைக்கத்தானை நாங்க சண்டை பிடிக்கிறம். அதுவும் சம்பளத்திற்காக ஆயுதம் ஏந்தியிருக்கிற எங்கடை விருப்பு, வெறுப்புக்களை ஆரிட்டைப் போய்ச்சொல்லி ஆற முடியும்...? இங்கையிருந்து சுதந்திரமாக, நடமாடவோ, அல்லது கடிதப் பரிமாற்றத்தைக் கூடவோ எங்களாலை மேற்கொள்ள முடியுதா சுனில்...?"

ரஞ்சித் பண்டாராவின் உணர்வுகள், வார்த்தைகளாக வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன. இராணுவத்தில் உள்ளவர்களுக்கு வருகின்ற கடிதங்கள் தணிக்கை செய்யப்படுவதால், உண்மையைக் கூட அவர்களால் அறிய முடிவதில்லை.

இடையிடையே விட்டு, விட்டுக் கேட்டுக் கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், மோட்டார் குண்டுகளும், எறிகணைகளும் விழுந்து வெடிக்கும் ஓசைகளின் அதிர்வுகளும் அவர்களை மிகவும் மோசமாகப் பாதித் திருந்ததை, அவர்களுடைய நடுங்கும் குரல்கள் காட்டிக்கொண்டிருந்தன.

"ரஞ்சித்!... நான் நாளைக்கு ஊருக்குப்போய், அம்மாவையும், சகோதரர்களையும் பார்க்கப்போறன்..."

ஒரு சில நிமிட நேர மௌனத்தைக் கலைத்துக் கொண்டு, சுனில் திடீரென இப்படிக் கூறியதும், ரஞ்சித்துக்கு ஆச்சரியமாக இருந்தது.

"சுனில்!... என்ன சொல்லுறாய்...? உன்னை இப்ப வீட்டுக்குப் போக அனுமதிப்பார்களா?... பைத்தியக்காரத்தனமாக முடிவெடுக்காதை... பேசாமல் இரு... பிறகு, இதுவே உன்ரை உயிருக்கு ஆபத்தாகிவிடும்...."

சுனில் தேசப்பிரியாவின் இந்த முடிவைக் கேட்டதும் ரஞ்சித் அதிர்ந்து விட்டான்... அப்படியொரு துணிச்சலான முடிவை எடுக்கும் அளவுக்கு விரக்தியின் உச்சக் கட்டத்திற்குப் போய்விட்ட சுனில், உணர்ச்சியற்ற மரம்போல், மீண்டும் கண்களை மூடியபடி அமைதியாக இருந்தான்.

அரசியல்வாதிகளின் பகடைக்காய்களாகவே இந்த யுத்த முனைவுகள் நகர்த்தப்படுவதை அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

அவன் எடுத்துவிட்ட அந்த முடிவில் உறுதியாக இருந்ததை, சுனிலின் நீண்ட மௌனம் காட்டிக்கொண்டிருந்ததால், தொடர்ந்தும் பேச்சுக் கொடுத்து நிலைமையைச் சிக்கலாக்க ரஞ்சித் விரும்பவில்லை.

“விடிந்தால், அவன் எப்படியும் வெளியேறிவிடுவான்... அவனை இனி யாராலும் கட்டுப்படுத்தமுடியாது... போய்ச் சேரட்டும்...”

ரஞ்சித் தனக்குள் எண்ணியபடியே, மௌனமாக இருந்து அன்றைய இரவையும் அந்தப் பதுங்கு குழியினுள்ளேயே, அவனுடன் சேர்ந்து கழித்தான்.

நெஞ்சில் கனத்த இதயத்துடன், அந்த ஆறு வருட கால நினைவுகளையே மீட்டிப்பார்த்தபடி சோர்வுடன் நடந்து கொண்டிருந்த சுனிலின் நினைவுகள் மீண்டும் பாதுக்கைக்குத் திரும்பியது... அந்த ஒடுங்கிய வளைந்து செல்லும் பாதையினூடாக மெதுவாக நடந்து கொண்டிருந்த சுனிலின், கலங்கிய கண்களில் அவனுடைய வீடு மங்கலாகத் தெரிந்தது.

தூரத்தில் நின்றபடியே, அதனைப் பார்த்ததும் சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றான்... ஆம்...! அதே குப்பி விளக்கு வெளிச்சத்தில், அவனுடைய அந்தத் தாய்மனை அன்றும் அப்படியே இருண்டு போய்க் கிடந்தது...!

“என்ரை அம்மாவுக்கும், அக்காக்களுக்கும் புதுவீடு கட்டிக் கொடுக்கேல்லையோ?”

மனம் பதை பதைத்த நிலையில் வேகமாக நடந்து சென்ற சுனில், அந்தக் குடிசையை நெருங்கியதும் அங்கே சூழ்ந்திருந்த இருள், மனதை உறுத்திக் கொண்டிருந்த நெருடல்கள் எல்லாவற்றையும் மறந்த நிலையில்,

“அம்மே!... அம்மே!...”

என்று உரத்துக் கூவினான்.... ஆவேசமாக ஒலித்த அவனுடைய குரலைக் கேட்டதும், வீட்டிற்குள் படுத்திருந்த கேமலதா, திடுக்கிட்டு எழுந்து ஒரு கையில் கைப்பொல்லைப் பிடித்தபடி, மறுகையில் அரிக்கன் விளக்கை ஏந்திக் கொண்டு தட்டுத் தடுமாறி நடந்து வந்து, படலையைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

"அனே!... மகே புத்தா!... சுனில்...!"

அரிக்கன் விளக்கை, அவனுடைய முகத்துக்கு நேரே நீட்டியபடி நின்ற கேமலதாவின் கண்கள் ஆச்சரியத்தால், அகலத் திறந்தன... ஆறு வருடங்களுக்குப் பிறகு எதிர்பாராத வகையில், மகனைக் கண்டதும் அவளுடைய கூனிப்போன முதுகு சிறிது நிமிர்ந்தது போல் இருந்தது.

"மகன்!... மகன்!... இப்பத்தான் வாறியா?..."

அவனை நோக்கித் தன் கையை நீட்டியபடி ஆவலுடன் ஒரு அடிதான் எடுத்து வைத்திருப்பாள்.

"டுமில்... டுமீல்...."

வானத்தை நோக்கித் தீர்க்கப்பட்ட றைபிள் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தங்களைக் கேட்டதும், அதிர்ந்துபோன சுனில் சடுதியாகப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

அங்கே குறிவைத்தபடி, நீட்டிய துப்பாக்கிகளுடன் இருளோடு இருளாக அவனைச் சூழ்ந்து நெருங்கிக் கொண்டிருந்த இராணுவ பொலிசாரின் உருவங்களைக் கண்டதும், விறைத்துப்போய் நின்றான்.

"அனே!... மகே புத்தா...!"

அந்தக் குடிசையைச் சுற்றிவரவும், துப்பாக்கிகளுடன் நின்ற நூற்றுக் கணக்கான படையினரைக் கண்டதும், அலறித் துடித்தபடியே மூர்ச்சையாகி விழுந்த கேமலதாவைக் குனிந்து கூடப் பார்க்க முடியாத அளவுக்கு அவன் சுற்றிவளைக்கப்பட்டிருந்தான்.

ஆம்...! அவனை ஏற்றிச் செல்வதற்காக அந்தப் பாதையில் காத்திருந்த, இராணுவ பொலிஸ் வானை நோக்கி அவன் இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தான்.

*(2000)*

*(அவுஸ்திரேலிய விக்ரோறியா தமிழ்ச் சங்கம் நடத்திய அனைத்துலக சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை.)*

# விலைபோகாத மனிதம்

அடர்ந்து செறிந்து ஓங்கி வளர்ந்திருந்த அந்தக் காட்டுப் பாதையினூடாகச் சென்று கொண்டிருக்கும் பொழுதே ஒரு புதுவித அனுபவமாகத் தான் இருந்தது..... இருள் மண்டிப்போய், பொட்டுப் பொட்டாகச் சூரிய ஒளி தடம் பதித்த அந்த நெடிய மரங்களையும் ஊடறுத்தபடி, செம்மண் கிரவல் பாதை சென்று கொண்டிருந்தது.

"பாதர்!... இப்படி ஒரு இயற்கை வனப்பும், எளிமையும், அமைதியும் நிறைந்த ஒரு இடத்தை நான் இதுக்கு முன்னர் பார்த்ததேயில்லை... ஷ... என்ன மனோரம்மியமான சூழல்..."

என்னுடன் கூடவே நடந்து வந்து கொண்டிருந்த வணக்கத்திற்குரிய அருட்தந்தை சேவியர் அடிகளார் சாந்தம் தவழும் புன்முறுவலுடன் எனது கருத்தை ஆமோதிப்பது போல் நடந்து கொண்டிருந்தார்.

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கத்தோலிக்கக் கிராமத்தில் பங்குத் தந்தையாக இருந்த பொழுதே அவருடன் அன்னியோன்னியமாகப் பழகியதால், அவரது நடை, உடை, பாவனைகள், விருப்பு, வெறுப்புக்களைக் கூட நன்கு அறிந்து வைத்திருந்தேன். அதனால், அவர் மீது எனக்கு ஒரு தனிப்பட்ட விருப்பம் ஏற்பட்டிருந்தது.

நாங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, தூரத்தில் இருந்து இடையிடையே விட்டுவிட்டு ஒலித்துக் கொண்டிருந்த துப்பாக்கிச் சத்தங்கள் எனக்கு ஒருவித அச்சத்தைக் கொடுத்தது.

நான் அருட்திருத்தந்தையைப் பார்த்தேன்... என்னுடைய பார்வையின் பொருளை அவர் புரிந்திருக்க வேண்டும்.

“இது தான் நாங்கள் தினமும் கேட்டுப் பழகிய இந்த மண்ணின் இயற்கை ஒலி.... மிஸ்டர் தேவராஜ்!... இது உங்களுக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால்... இதுவே, எங்களுடைய மக்களின் நித்திய கீதமாகிவிட்டது. எங்களுடைய வாழ்வே ஒரு போராகிவிட்டது.... போர் தான் வாழ்வாகியும் விட்டது... ஒன்றுக்கும் பயந்துவிடாதீர்கள், என்னுடன் கூடவே வாருங்கள்...”

நீண்டநேர மௌனத்தைக் கலைத்துக்கொண்டு அருட்தந்தை சேவியர் அடிகளார் கூறிய அந்த வாக்குகள், என்னைக் கடுமையாகச் சிந்திக்க வைத்துவிட்டன...!

நான் கொழும்பில் உள்ள பத்திரிகை நிறுவனம் ஒன்றில், அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றுவதால், அங்கே எங்களுக்கு வழங்கப்படுகின்ற தகவல்களை விட, இங்கே நடந்து கொண்டிருக்கின்ற விடயங்களை நேரில் பார்க்கும் பொழுதும், கேட்கும் பொழுதும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

கொழும்பில் இயந்திரங்களுடனும், நவீன தொழில்நுட்பச் சாதனங்களுடனும் போட்டி போட்டு எங்களையே அழித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இருந்தும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்ற இந்த மண்ணின் மகத்துவமும், பழக்க வழக்கங்களும் எனக்குப் புதுமையாக இருந்தன.

“மிஸ்டர் தேவராஜ்...! இப்ப நாங்கள் பார்க்கப் போகிற இடம், இன்னும் உங்களுக்கு வியப்பைத் தரும்... இங்கே, எப்பொழுதும் யுத்தமும், பயிற்சியும், பிரசாரமும் என்றுதான் அங்கே நீங்களும், உங்கடை ஆட்களும் கற்பனை பண்ணிப் பார்த்திருப்பீங்க, இல்லையா?...”

அடிகளார்,புதிர் போடுவது போல வார்த்தையை நீட்டி இழுத்துக் கொண்டே என்னைத் திரும்பிப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தார்.

“நிச்சயமாக... அதிலை என்ன சந்தேகம் பாதர்...? இங்கே, இப்போ பள்ளிக் கூடங்கள் இயங்குவதில்லையாம். பதினைந்து வயதுப் பையன்கள் கூட, இப்போ பயிற்சி எடுக்கிறார்களாம்... கல்விக்கே முழுக்குப் போட்டு விட்டதாகத் தானே நாங்களும், அங்கே எழுதுகின்றோம்...”

அவருடன் மிக நெருக்கமாகப் பழகியவன் என்ற காரணத்தால், நானும் மனந்திறந்து என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறியபடி நடந்து கொண்டிருந்தேன்.

செய்தியாளர்களுக்கெனக் கூட்டப்படும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வழங்கப்படும் பல தகவல்களை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டு பிரசுரிப்பதில்லை என்றாலும், இவ்வளவு தூரத்திற்கு இந்த மண்ணின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு எங்களுடைய நவீன தகவல், தொடர்பு பரிவர்த்தனைகள் மட்டமாக இருப்பதை நினைக்க எனக்கே வெட்கமாகத்தான் இருந்தது.

"போர் நடக்கும் பிரதேசங்களில் வாழும் சிறுவர்களின் உளவியல் பாதிப்பு" தொடர்பான ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதுவதற்காக, வவுனியாவில் இருந்து 'பாஸ்' எடுத்துக்கொண்டு, இங்கே வந்ததும் நான் சந்தித்துப் பேசிய முதல் மனிதர் அடிகளார் தான்.

காலையில் கூட அவருடைய ஆச்சிரமத்தில் ஒன்றாக இருந்து உணவு அருந்திக்கொண்டிருக்கும் பொழுது அவர் பல தகவல்களைக் கூறியிருந்தமை என்னுடைய உள்ளத்தை நன்றாகப் பாதித்திருந்தது.

கல்விச் செயற்பாடுகளுக்கும், கலை பண்பாட்டு அபிவிருத்திகளுக்கும் இங்கே கொடுக்கப்படுகின்ற ஊக்குவிப்புக்களை அடிகளார் மூலமே அறிந்ததும் பிரமிப்பு அடைந்தேன்.

"மிஸ்டர் தேவராஜ்! இங்கே ஒருபுறம் போர் நடந்து கொண்டிருக்கின்றது.. மறுபுறம் மனிதாபிமானப் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன...!

அடிகளாரின் பேச்சு, இன்னும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவே இருந்தது...

பெற்றோரை இழந்த பிள்ளைகள்... யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வாழவழியற்று விரக்தி அடைந்த பெற்றோரினால் கைவிடப்பட்ட குழந்தைகள்... ஷெல், குண்டுவீச்சுக்கள், மிதிவெடிகளினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்ற குழந்தைகள்... என்று இப்படி, ஆயிரக்கணக்கான அவலங்களை இந்த மண் தாங்கிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மைகளை எல்லாம் உங்கள் ஊடகவியலாளர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களா...?"

அமைதியின் பிரதிபிம்பமாக, என்னுடன் உரையாடிக் கொண்டுவந்த அடிகளாரின் தொனி, சற்று உறைப்பாகவே இருந்தது.

“ஆமாம் மிஸ்டர் தேவராஜ்!.. அப்படியான குழந்தைகளையும் இங்கே பராமரிக்கின்றார்கள்... அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, கல்வி, கவின்கலைப் பயிற்சிகள், பொழுது போக்கு எல்லாமே வழங்கப்படுகின்றன... அதனால், அந்தக் குழந்தைகள் சந்தோஷமாக ஒரு புதிய உலகத்தில் காலடி வைப்பதற்கான ஒரு சூழலில் வளர்க்கப்படுகின்றனர்... இந்தக் கரங்களிலும் தாய்மையுணர்வு எப்படித் ததும்புகின்றது என்பதை இங்கு வந்து நேரில் பார்த்தால் தெரிந்து கொள்வீர்கள்...”

அவர், சிறிது உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருந்ததால், நான் மேற்கொண்டு எதுவுமே பேசாது மௌனமாக நடந்துகொண்டிருந்தேன்.

“யாழ்ப்பாணத்தில் இருக்கும் போது கேள்விப்பட்டிருப்பீர்களே... அறிவுப்பூங்கா, மகளிர் இல்லம்... அங்கே தான் இப்போ போய்க் கொண்டிருக்கின்றோம்...”

மீண்டும், அந்த மௌனத்திற்குப் பிறகு,

அடிகளாரே இப்படிக்கூறியதும் எனக்கு அதிர்ச்சி ஒருபுறம், அப்படி ஒரு குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தைப் பார்க்கப் போகின்றோமே என்ற மகிழ்ச்சி இன்னொரு புறமாக இருந்தது.

‘அறிவுப் பூங்கா மகளிர் இல்லம்’ முழுக்க முழுக்க பெற்றோரை இழந்து அநாதைகளாகிக் கைவிடப்பட்ட குழந்தைகளை, அவர்கள் தாம் அநாதைகள் தானே என்ற தாழ்வு மனப்பான்மை ஏற்படாது அவர்களையும் இந்த மண்ணின் வளம் என்ற வகையில் உருவாக்கும் ஒரு குழந்தைகள் பராமரிப்பு நிலையமாகவும், அறிவூட்டும் கலையமாகவும் இயங்கி வருவது பற்றி அடிகள் கூறித்தான் எனக்குத் தெரிய வந்தது...!

கொழும்பில் இருந்து புறப்படுவதற்கு முன்னர், கதையோடு கதையாக எனது மனைவி கூறிய, வீட்டு வேலைக்காரி விடயம் அப்பொழுதுதான் என் நினைவுக்கு வந்தது,

“நல்ல ஒரு சான்ஸ்... ஆரும். ஒரு பத்துப்பதினொரு வயதிலே இருக்கின்ற பிள்ளைகள் கிடைத்தால் கூட்டிக்கொண்டு போகலாம்....”

என்னுடைய மனதில் இருக்கின்ற அந்த விருப்பத்தை அப்போது வெளிக்காட்டவில்லை.

அந்த நீண்ட பாதையூடாக நடந்து, களைத்துப் போய்த் தொடர்ந்தும் நடக்க முடியாது என்ற நிலையில் இடுப்பில் கைவைத்தபடி சோர்ந்து போய் அடிகளாரைப் பார்த்தேன்.

"கிட்ட வந்துட்டம்... அதோ!... அங்கே பாருங்கள்..."

அவர் காட்டிய திசையை நிமிர்ந்து பார்த்ததும் எனக்கு அப்பொழுது நெஞ்சில் சிறிது ஈரம் கசிந்தது.

ஆம்! .. சிறிது தூரத்தில் ஒரு கட்டிடத்தின் முன்னால், மஞ்சள் நிறப் பின்னணியில், சிவப்பு மையினால் "அறிவுப் பூங்கா மகளிர் இல்லம்" என்று அழகாக எழுதப்பட்டிருந்த பெயர்ப்பலகை தொங்கவிடப்பட்டிருந்தது.

நானும், அவரும் மெதுவாக நடந்து சென்று அந்த மகளிர் இல்லத்தின் வாசலை அடையவும், அந்த மூடப்பட்டிருந்த வாசல் கதவைத் திறந்து ஒருபெண், எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்...!

அந்தப் பெண்தான், அந்த மகளிர் இல்லத்தின் பொறுப்பாளராக இருந்து அதனை நிர்வகித்து வருகிறார்.

அழகான பரந்த சிரித்த முகத்துடன் எங்களைக் கூப்பிய கரங்களுடன் வரவேற்ற அந்தப் பெண்ணைக் கண்டதும், நானும் மரியாதைக்காகக் கைகளைக் குவித்து வணக்கம் செலுத்தினேன்...

"பாரதி!... இவர் உங்கடை மகளிர் இல்லத்தைப் பார்க்கிறதுக்காகக் கொழும்பில் இருந்து வருகிறார்..." அடிகளார் தொடர்ந்தும் சொல்வதற்கு வாய் எடுத்ததும் அந்தப் பெண் - பாரதி, சிரித்துக் கொண்டே,

"ஓம்... ஓம்... தெரியும் பாதர்...! இவர் மிஸ்டர் தேவராஜ் தானே?.. போர் நிலவும் இடங்களில் உள்ள குழந்தைகள் பற்றிய ஒரு ஆய்வுக்காக வந்திருக்கிறார்... நல்லது உள்ள வாங்க...."

பாரதி, மூச்சுவிடாமல், சிரித்துக்கொண்டே கூறியதும் எனக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது...!

அதற்கு மேல், அந்தப் பெண்ணிடம் என்னைப் பற்றிய எந்த அறிமுகமும் செய்ய வேண்டிய தேவையே ஏற்படவில்லை. நான் எப்பொழுது வந்தேன், எதற்காக வந்தேன், எனது அடையாள அட்டை விபரங்கள் போன்ற எல்லா விபரங்களையுமே தெரிந்து வைத்திருந்தாள்.

அந்தளவுக்கு அவர்களுடைய பரந்துபட்ட தொடர்பாடல் நுட்பத்தை அறிந்து ஆச்சரியப்பட்டேன்...!

“மிஸ்டர் தேவராஜ்!... வாருங்கள்... முதலில் குழந்தைகள் பராமரிப்பு கூடத்திற்குப் போய்ப் பார்த்துட்டு, அதற்கு அப்புறமாக மற்ற பிள்ளைகளைப் பார்க்கலாம்...”

அந்தப் பெண் - பாரதி, தானாகவே எங்களை உள்ளே அழைத்துச்சென்றார்... அவருடைய அனுமதி கிடைக்காவிட்டால், எப்படித்தான் தலைகீழாக நின்றாலும் உள்ளே விடமாட்டார்கள்...

“ஊடகவியலாளர்” என்பதற்கான அறிமுக அட்டை எனக்கு இங்கு நன்றாகக் கைகொடுத்தது.

“ஹாய்... அம்மா!... இங்கே வாங்க... எங்கம்மா இவ்வளவு நேரமாய் போயிருந்தீங்க...?”

எங்களைக் கண்டதும், சற்று தூரத்தில் நின்று விளையாடிக் கொண்டிருந்த சுமார் ஆறுவயது மதிக்கக் கூடிய ஒரு சிறுமி குதூகலத்துடன் துள்ளிக் குதித்து ஒடிவந்து பாரதியின் கைகளைப் பிடித்து முத்தமிட்டாள். இன்னுமொரு சிறுமி ஒடிவந்து கைப்பையினுள் கையைவிட்டுத் துளாவிக் கொண்டிருந்தாள்.

“பாரம்மா குஞ்சு...! தடிமனோடை வெயில்லை விளையாடக் கூடாது என்று எத்தனை தரம் சொல்லுறது...? இவ்வளவு நேரமா வெய்யிலிலை நின்று விளையாடுறீங்க என்ன குஞ்சு...?”

பாரதி, தன்னுடைய கைக்குட்டையை எடுத்து, அந்தச் சிறுமியின் மூக்கில் இருந்து வழிந்து கொண்டிருந்த சளியைத் துடைத்து விட்டார்...

அவர்கள் இருவரையும் அணைத்துப் பிடித்தபடியே கூட்டிச் சென்று ஓரமாக ஒரு மரநிழலின் கீழ் இருக்க வைத்தார்.

“குஞ்சு!...இனிமேல் வெயில்லை போனிங்க என்றால், இண்டைக்குப் பின்னேரம் சொக்கா தரமாட்டன்... இதிலை இருந்து விளையாடுங்க... நான் இந்த மாமாவோட கதைச்சிட்டு வாறன்...”

அவர்களை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு விட்டு, கைகளை விலக்கியபடியே, எங்களை அழைத்துச் சென்று மூாஞ்சோலைப் பகுதிக்குக் கூட்டிச் சென்றாள்.

அங்கே, பச்சைப்பசேலென்று செழித்து, அடர்ந்து வளர்ந்திருந்த மாமரங்களின் கீழ், அழகிய சித்திரவேலைப்பாட்டுடன் கூடிய கட்டிடம் ஒன்று இருந்தது...!

“சீமெந்து இல்லாத இந்த இடங்களில், இப்படி ஒரு நல்ல அழகான கட்டடத்தை உங்களால் எப்படிக் கட்ட முடிந்தது....?

நான் வியப்புடன், அந்தப் பெண்ணையே பார்த்துக் கேட்டேன்.

“மிஸ்டர் தேவராஜ்..! இரு வெறும் களிமண்ணும், சுண்ணாம்பும், கற்றாளைச் சாறும் சேர்த்துக் கட்டப்பட்ட கட்டிடம் தான்... உங்களுக்கெல்லாம் இவற்றைப் பார்க்க ஆச்சரியமாகத்தான் இருக்கும்... அடக்கு முறைக்கு மத்தியில் தான் நல்ல கலைகளும், இலக்கியங்களும், தொழில்நுட்பமும் தோன்றும்... அதுபோலத்தான் இங்கும்....”

எனது மனதில் எழுந்த அந்தச் சந்தேகத்திற்கான பதிலை அடிகளாரே பலமாக வாய்விட்டுச் சிரித்தபடி கூறியது, எனக்கு இன்னும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

உண்மைதான்...! வியட்நாமை அமெரிக்கர்கள் ஆக்கிரமித்தபோதும், பாலஸ்தீனியரை இஸ்ரேலியர்கள் கொடுமைப்படுத்தியபோதும், சீனாவில் மக்கள் புரட்சியின் போதும் தானே, மிக அற்புதமான இலக்கியங்களும், கலைவடிவங்களும் தோற்றம் பெற்றன.

அந்த அழகிய கட்டிடத்தினுள் மூன்று, மூன்றாக ஒன்பது தொட்டில்கள் வைக்கப்பட்டிருந்தன... அதற்குள் அழகழகான சின்னஞ்சிறு குழந்தைகள் கைகளை ஆட்டித் தங்களுடைய பொக்குவாய்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன.... அங்கே, நான்கு இளம்பெண்கள் கூட இருந்து அவர்களுடைய தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தி ஒரு குழந்தையை மடியில் வைத்து, போச்சியினூடாகப் பாலைப் பருக்கிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுதுதான் குளிக்க வார்த்து,பேபி பவுடரினால் உடல் முழுக்கப்பூசி, நெற்றியில் பெரியதொரு கறுத்தப் பொட்டு வைத்திருந்தது. நல்ல அழகாகத்தான் இருந்தது

அப்படியே இந்த இடத்தில் சிறிது நேரம் நின்று அந்தக் குழந்தையின் அழகையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அக்கா!... இந்தக் குழந்தைகள் கூட..."

நான் வார்த்தையை முடிக்கவில்லை.... பாரதியின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு நின்றேன்.

"ஓம்... ஓம்... இவர்கள் கூட பெற்றோரை இழந்து அநாதைகளாக்கப்பட்ட குழந்தைகள் தான். இவர்களில் பெரும்பாலானோர், ரிவிரெச இராணுவ நடவடிக்கைகளால் தமது தாய், தந்தையரை இழந்தவர்கள்..."

பாரதி இதனைத் தாழ்ந்த குரலில் கூறியபடியே எங்களை அழைத்துக்கொண்டு, இன்னும் சிறிது தூரத்தில் அமைந்திருந்த இன்னொரு மண்டபத்தை நோக்கி அழைத்துச் சென்றார்.

*"பிஞ்சுவயதிலே எங்கள் உள்ளம் அழுதது*
*வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது*
*துள்ளிஓடும் பருவத்திலே துவண்டிருந்தோம் நாம்*
*பள்ளிசெல்ல வசதியின்றி நொந்திருந்தோம்...."*

காற்றிலே கலந்து பரவிக்கொண்டிருந்த அந்தப் பாடல், என்னுடைய நெஞ்சை சுரீர் என்று தைப்பதுபோல் இருந்தது.

அங்கே, பரந்து வளர்ந்திருந்த ஆலமரநிழலின் கீழ் பத்துப் பன்னிரண்டு சிறுமிகள்வரை வட்டமாக நின்று நெஞ்சை உருக்கும் ராகத்துடன் அந்தப் பாடலைப் பாடிக்கொண்டிருந்தனர். ஒரு சிறுமி அவர்களுக்கு அருகில் நின்று சுருதிப் பெட்டியில் சுருதி சேர்த்துக் கொண்டு நின்றாள்.

பாரதியைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்த என்னால் அந்த இடத்தை விட்டு மேலும் ஒரு அடி கூட நகர முடியாதவாறு அந்த சிறுமிகளின் பாடல் ஒலி தடுத்து நிறுத்தியது.

அந்தப் பாடலின் வரிகளும், அவர்கள் பாடிய லாவண்யமும் என் நெஞ்சையே உலுப்பியெடுத்தது.

"மிஸ்டர் தேவராஜ்!... மாதாந்தக் கலை நிகழ்ச்சிகளுக்காக தங்களை ஆயத்தப்படுத்துகின்றனர்... இங்கே இதற்கென ஒரு மண்டபமே இருக்கிறது... மாதத்தில் ஒரு நாள் எல்லாப் பிள்ளைகளும், ஆசிரியர்களும், தாதிகளும் அங்கு ஒன்றாகச் சேர்ந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள்...!"

அந்த மகளிர் நிலையத்தில் நிகழும் ஒவ்வொரு செயற்பாடும் என்னை பிரமிப்பூட்டிக் கொண்டிருந்தன.

"அதுசரி! மிஸ் பாரதி!... இதுகளை வளர்த்து இப்படி ஆளாக்குவதற்கு எவ்வளவு செலவாகும்...! இதற்கு அரசாங்க உதவி அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி ஏதாவது கிடைக்கிறதா?..."

எனது மனதில் அடுத்தடுத்து எழுந்த சந்தேகங்களைத் தீர்க்கும் ஆவலில் பாரதியிடம் கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

"அரசாங்கமா?... உங்கடை பகுதியிலுள்ள சனங்களின்ரை தேவைகளையே நிறைவேற்றி வைக்க முடியாத அரசு, எங்கடை பகுதியிலை தங்களாலை அழிக்கப்பட்டு சிதைந்து போன குடும்பங்களின்ரை வாரிசுகளாக இருக்கின்ற இந்தப் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?..."

"அப்பிடியென்றால் ஒரு நாளைக்கே பத்தாயிரம் ரூபாவரைக்கும் செலவாகுமே...? எப்படி சமாளிக்கிறீங்க?"

அந்த மகளிர் நிலையம் எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை... இப்படி யொரு பெரிய சேவையை செய்கின்றதென்றால் எவ்வளவுக்கு நிதி, மனிதவலு... அதற்கும் மேலாக மனிதத் தன்மையும், மனோபலமும் அல்லவா இருக்கவேண்டும்...?"

"ஓம்... ஓம்... அதற்கும் மேலைதான் முடியும்... எல்லாமே எங்கள் மேல் அக்கறைக் கொண்டவர்களின் அன்பளிப்பில் இருந்துதான் செலவழிக்கிறம். இந்த மண்ணிலே பிறந்த எந்த ஒரு குழந்தையும் நாளைக்கு அநாதை என்ற பெயரோடை நடுத்தெருவில் நிற்கக் கூடாது என்பது தான் எங்கட குறிக்கோள்... அதனால தான் குறிப்பிட்ட வயது வந்ததும் அவரவர் திறமை, ஆர்வம் என்பவற்றிற்கு ஏற்ப நடனம், இசை, மற்றும் கல்வி சார்ந்த துறைகள், தொழில் திறன்கள் போன்றவற்றில் பயிற்சியை வழங்கி வருகின்றோம். பகலில் பாடசாலைக்குப் போய் வருவார்கள்..."

மிகப்பெரியதொரு தத்துவத்தை மிக எளிமையாகக் கூறியபடியே பாரதி எங்களை ஓரமாக இருந்த ஒரு வட்டக் கொட்டிலுக்குள் அழைத்துச் சென்றார்.

நாங்களும் அங்கே போடப்பட்டிருந்த கதிரைகளில் காலாறி யிருக்கவும், இரண்டு சிறுமிகள் தட்டுநிறைய பிஸ்கட், வாழைப்பழங்கள் என்பவற்றைக் கொண்டு வந்து எங்கள் முன்னால் வைத்தார்கள்.

"சாப்பிடுங்க... பாதர்!... நீங்களும் எடுங்க... நன்றாக களைத்துப் போய்விட்டீர்கள்... அதற்குப் பிறகு மற்றப் பகுதிகளைப் போய் பார்க்கலாம்..."

அந்தத் தட்டில் இருந்து ஒருபெரிய கோழிக்கூட்டு வாழைப் பழத்தையும், பிஸ்கட்டையும் எடுத்துக் கடித்துச் சாப்பிடத் தொடங்கினேன்.

சுற்றும் முற்றும் என்னுடைய பார்வையை சுழல விட்டபடியே மனதை அரித்துக் கொண்டிருந்த அந்த விருப்பத்தைக் கேட்டுவிட என் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

"மிஸ் பாரதி! இங்கே இருக்கிற பிள்ளைகளிலே பத்து அல்லது பன்னிரண்டு வயதினிலே ஒரு பெண் பிள்ளையை என்னோடு அனுப்புவீர்களா? நான் நன்றாகக் கவனிப்பன். அதற்குப் பணம் தாரன்... உங்களுக்கும் ஒரு சுமை குறையும்.... அந்தப் பிள்ளையின்ரை எல்லாத் தேவைகளையும் நான் நிறைவேற்றுவன். உங்களாலை ....."

நான் சொல்ல வந்த வார்த்தைகளை முழுமையாக முடிக்கவில்லை. கண்களில் அனல்தெறிக்க என்னை முறைத்து பார்த்தபடியே பாரதி விறுக்கென்று எழுந்து நின்றதும் எனக்கு உடல் எல்லாமே வியர்க்கத் தொடங்கி விட்டது.

"மிஸ்டர் தேவராஜ்!... என்ன கேட்டீங்க...? நாங்க இங்க பிள்ளைகளை வளர்த்து விற்கிற கசாப்புக் கடையா வைத்திருக்கிறம்... வட் ஏ நொன்சென்...?வட் ஆர் யூ ரோக்கிங்?"

அதுவரை சாந்தசொரூபியாக நின்ற அந்தப் பெண்-பாரதி முகத்தில் கோபம் கொப்பளிக்க நின்று கொண்டிருந்தாள்.

அவளுடைய அந்தத் தோற்றத்தைக் கண்டதும் என் கை, கால்கள் நடுங்கத் தொடங்கிவிட்டன.

"மிஸ்டர் தேவராஜ்! உங்கடை பகுதியிலை தான் இந்தச் சேட்டைகள் எல்லாம் நடக்குது...! பெண்களை அடிமையாக நினைக்கிறதும், பெண் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதும், சிறுமிகள் மீது பாலியல் வக்கிரங்களைக் காட்டுவதும் ஏன்... பெற்ற தகப்பனே தன் பெண் குழந்தை மீது பாலியல் இச்சையைத் திணிக்கின்ற கொடூரங்கள் எல்லாம் அங்கே தான்... உங்கடை பகுதிகளிலைதான் நடக்குது... அதுகளின்ரை ஒரு பிரதிநிதிதானே நீங்களும்...? எங்களுடைய இந்தக் குழந்தைகள், நாளைக்கு இந்தச் சமூகத்திலை நல்லதொரு பிரஜையாகத் தலைநிமிர்ந்து வாழ வேணும்... தங்கடை வாழ்க்கையில் பெறவேண்டிய அனைத்து வசதிகளையும், சுதந்திரங்களையும் பெற்று வாழவேண்டும் என்பதற்காகத் தானே இன்றைக்கு நாங்கள் இப்படிக் கஷ்டப்படுகிறம் ஐயா...! விருந்தாளியாக வந்ததாலை, உங்களை மரியாதையாக அனுப்பி வைக்கிறம். இந்த இடத்தைவிட்டு உடனே போங்கோ... சேக்... என்ன மனிதர்களோ... பாதர் என்னை மன்னிச்சிடுங்க..... இவரை உடனே போகச் சொல்லுங்க,,,,"

கண்கள் சிவந்த நிலையில், 'படபட' என்று பொரிந்து தள்ளியபடியே அந்த இடத்தில் இருந்து வெளியேறிய பாரதி, மாமரத்தின் கீழிருந்து விளையாடிக்கொண்டிருந்த இரண்டு சிறுமிகளையும் அணைத்துப் பிடித்தபடி போய்க் கொண்டிருந்தாள்...!

*(2000)*

# இரண்டாவது ஆசை!

உருகுணை இராஜதானியின் அந்தப் பிரமாண்டமான அரண்மனை வழமைபோல் மந்திரி பிரதானிகளாலும், காவலர்களாலும் நிறைந்து கலகலப்பாகக் காணப்பட்டது.

அங்கே மேல் உப்பரிகையில் அழகிய சிங்கள சிற்ப வேலைப்பாடு களினால் அமைக்கப்பட்ட பட்டத்து ராணியின் பள்ளியறையில் மட்டும் என்று மில்லாதவாறு மௌனம் குடிகொண்டிருந்தது.

பளபளக்கும் தங்கக் கட்டிலில், இலவம் பஞ்சு மெத்தையில் ஒய்யாரமாகச் சாய்ந்து சரிந்து சயனித்துக் கொண்டிருந்த மகாராணி விகாரை மகா தேவியின் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்த துயரம் இன்னும் பலமடங்கு அதிகரித்துக் கொண்டே சென்றது!

அவளுடைய அடிவயிற்றில் இருந்து எழுந்து கொண்டிருந்த பெருமூச்சு அனல்காற்றாக அந்தப் பள்ளியறையைச் சூடேற்றிக் கொண்டிருந்தது.

"தேவி!... ஏன் இந்த மௌனமும், துயரமும்? அதுவும் கருத்தரித்திருக்கும் போதுதானா இப்படி உனது உடலை வருத்திக் கொண்டிருக்க வேண்டும்?"

உருகுணை இராஜதானியின் பட்டத்து ராணி விகாரை மகா தேவியின் கால் மாட்டில் அமர்ந்து, அவள் விடுகின்ற பெருமூச்சுக்களையே பார்த்துக் கொண்டிருந்த மன்னன் காக்க வண்ண தீசனால், பொங்கி எழும் துயரத்தை அடக்க முடியவில்லை.

அவளது ஒவ்வொரு மூச்சுக்கும் தாளம் போடுவது போல், பரந்த மார்பகங்கள் முன்னோக்கி எழுவதும், தாழ்வதுமாகவே இருந்தன.

என்ன தான் நாடாளும் மன்னனாக இருந்து, நீதி வழுவாது செங்கோலோச்சி, பார்போற்ற அரசாண்ட போதும், பள்ளியறையில் பட்டத்து ராணியின் முன்னால் மன்னனும் கூட பணிந்து தான் போக வேண்டும் என்பதற்கு இலக்கணமாகவோ என்னவோ, மன்னனும் அவளருகில் சோகத்துடன் இருந்தான்.

சிங்கள மன்னர்களின் வரலாற்றில் காக்கவண்ணதீசனின் ஆட்சிக்காலம் ஒரு பொற்காலமாக இருந்தது. அவன் தனது அரசை வலிமையும், செல்வமும் மிக்கதொரு இராஜதானியாகப் பரிபாலித்து வந்ததுடன் தமிழர்களுடன் நல்லுறவையும் பேணி, அரச நிர்வாகத்தை நடத்தி வந்தது, உருகுணையின் சிறப்பான ஆட்சிக்கு வழிவகுத்தது.

"தேவி!..."

மெல்லிய முனகலுடன் மீண்டும் அழைத்த காக்கவண்ண தீசன் என்றுமே பொறுமையிழந்து விடக்கூடிய சாதாரண ஒரு மனிதனாக இருந்ததில்லை.

களனிதீசனின் மகளாக இருந்த விகாரமகாதேவியை காக்கவண்ண தீசன் திருமணம் புரிந்த வரலாறே ஒரு சுவையான சம்பவம் தான்!

கல்யாணி இராஜதானியின் மன்னனான களனிதீசனின் மனைவியுடன், அவனுடைய தம்பியான அய்ய உத்திகன் என்பவன் கள்ளத் தொடர்பை வைத்திருந்தான். இது அவனுக்குத் தெரிய வரவே, அய்ய உத்திகன் அரசனுக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடித் தலைமறைவாக வாழ்ந்து வந்தான். அங்கிருந்தபடியே அரசனின் மனைவிக்கு ஒரு காதல் கடிதத்தை எழுதி, புத்த பிக்கு வேடமணிந்த ஒருவனிடம் கொடுத்து மகாராணியிடம் இரகசியமாகச் சேர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

ஒவ்வொரு நாளும் அரண்மனைக்குப் பிச்சை எடுப்பதற்காகச் செல்லும் பிரதம பிக்குவின் பின்னால் செல்லும் ஏனைய பிக்குகளுடன் பிக்குவேடமணிந்த, அவனும் சென்று, கடிதத்தை இரகசியமாக அரசியிடம் சேர்ப்பிக்க முனைந்த போது, களனிதீசன் அதனைக் கண்டு, அந்தக் கடிதத்தைப் பிரித்து பார்த்ததும் அவன் கண்கள் கோபாக்கினியை வீசியது. அவனுடைய செய்கையால் ஆத்திரமடைந்த மன்னன் களனிதீசன், மாறுவேடமணிந்து வந்த பிக்குவையும், பிரதமபிக்குவையும் கொன்று, கடலில் போடுவித்தான். அதனால் கடல், பொங்கிப் பிரவாகித்ததுடன், களனிதீசனின் இராசதானியாகிய கல்யாணி மீதும் பாய்ந்தோடத் தொடங்கியது.

பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருக்கும் கடலை அமைதிப்படுத்துவதற்காகத் தனது மகள் மகாதேவியை ஒரு தெப்பத்தில் ஏற்றி கடலுக்குக் காணிக்கையாக்கினான். அவளை ஏற்றிச் சென்ற தெப்பம், மகாமகத்தின் கரையை அடைந்தது. மயங்கிய நிலையில் கரையொதுங்கிய இராஜகுமாரியை யாரென்று அடையாளங் கண்டு கொண்ட காக்கவண்ணதீசன், மகாதேவியை மணந்து, தனது பட்டத்து ராணியாக்கிக் கொண்டான்.

மகாமகத்தில் அவள் கரை ஒதுங்கிய இடம், விகாரை ஒன்றுக்கு அருகில் இருந்ததால், அவள் "விகாரை மகாதேவி" என அழைக்கப்பட்டாள்.

இராஜபரம்பரையைச் சேர்ந்த மகாராணியின் மகளாகப் பிறந்து வாழ்ந்த விகாரை மகாதேவியின் இறுமாப்பும், பிடிவாதமும் மட்டும் இன்னும் குறையவில்லை.

அந்தப் பள்ளியறையின் கட்டிலில் சாய்ந்தபடி படுத்திருந்த விகாரை மகாதேவியையே கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்த காக்கவண்ண தீசனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

"ஏன் தான் இவள் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறாள்...? இவளுக்கு என்ன குறையை நான் வைத்திருக்கிறேன்... உம்... எதற்கும் இன்னும் ஒரு தடவை கேட்டுப் பார்ப்போம்..."

மன்னன், மனதுக்குள் குமைந்தவாறே, அவளுடைய மென்மையான கரங்களைப் பற்றிக் கொண்டான்.

"மகாதேவி!... இந்த உருகுணை இராஜதானிக்கே வலிமைவாய்ந்த மன்னனாக இருக்கும் என்னால் உனது குறையைத் தீர்க்க முடியாதா? பகைவர்களே கண்டு நடுங்கும் படைவலிமையும், அதற்கும் மேலாக என் நாட்டு மக்களின் ஆதரவும் இருக்கும் போது, எனது பட்டத்து ராணியின் தேவைகளை நிறைவேற்ற முடியாத கையாலாகாத ஒரு மன்னன் என்று என்னை எண்ணுகிறாயா?..."

தனது கம்பீரம், ராஜமிடுக்கு எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு, அவள் முன்னால், ஒரு குழந்தை போல், குழைந்து குழைந்து பேசிக் கொண்டிருந்தான்.

தனது வலிமையான உரமேறிப்போன விரல்களால், விகாரை மகாதேவியின் மென்கரங்களை வருடிக்கொண்டே, அவளுடைய காந்தக் கண்களின் அழகை அணு அணுவாக இரசித்துக்கொண்டே இருந்தான்.

"ம்... கையை எடுங்கள்... உங்களால் எனக்கு என்னதான் செய்து தரமுடியும்? தமிழர்கள் என்றாலே உங்களது உடன் பிறப்பாகக் கருதுகின்றீர்கள். அவர்களால் எங்களுக்கு ஏற்படப்போகின்ற அழிவைப் பற்றி என்றைக்காவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா?... எங்களுக்குப் பிறக்கப் போகும் மகன், இந்த உருகுணையில் அச்சமின்றி அரசாளக் கூடிய ஒரு நிலையை உ.ருவாக்கியிருக்கின்றீர்களா?... எப்பொழுது பார்த்தாலும் தமிழர்களுடன் சமாதானம், சமாதானம் என்ற குரல்தான் உங்கள் வாயில் இருந்து ஒலிக்கின்றது. எங்களுடைய சிங்கள இனத்தின் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களா?..."

அவளுடைய ஒவ்வொரு சொற்களும் வில்லில் இருந்து புறப்பட்ட அம்புபோல், காக்கவண்ண தீசனைத் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தன. அவளுடைய கைகளை விலக்கிய காக்க வண்ணதீசன், அதிர்ச்சியடைந்து எழுந்து நின்றான்.

அவள் புதிர் போட்டுப் பேசிக் கொண்டே இருந்தது. காக்கவண்ண தீசனை, மேலும் குழப்பத்திற்கு ஆளாக்கிக் கொண்டிருந்தது.

"தேவி!... என்ன உளறுகின்றாய்? எங்கோ ஒரு கோடியில் தாமுண்டு, தம் கடமையுண்டு என்று இருக்கின்ற தமிழர்களுக்கும், உனது துயரத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது? ஏன் அவர்களை இழித்துப் பேசுகின்றாய்? உனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?..."

அவளுடைய செய்கைகள், காக்கவண்ண தீசனுக்குக் கோபத்தை ஏற்படுத்தினாலும், சற்று நிதானத்துடனேயே பேசிக்கொண்டிருந்தான்.

"ஆமாம்!... உருகுணையின் மகாராஜவுக்கு, கடலில் மிதந்து வந்த இந்த அனாதை பைத்தியமாகத்தான் தோன்றும்... ம்... போங்கள் வெளியே... உங்களுடன் என்னால் எதுவுமே பேச முடியாது..."

பட்டத்து ராணி என்ற நிலையை மறந்துவிட்ட விகாரைமகாதேவி குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள்.

"தேவி!... இந்த நேரம் உணர்ச்சி வசப்படுவது, உன் வயிற்றில் வளரும் குழந்தைக்குத்தான் பாதிப்பு ஏற்படும். நாளை இந்த நாட்டை ஆளப்போகும் எங்கள் மகன் அல்லவா? அவன் நல்ல பண்புள்ள, குணமுள்ள மைந்தனாகப் பிறந்து வர ஏதாவது நல்லவற்றை நினைப்பதை விட்டு..."

“ஆமாம்!... அதனால் தான், அவனுடைய எதிர்காலத்தைப் பற்றி இப்பொழுதே சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்... என்னுடைய கர்ப்பகால ஆசைகளை நிச்சயமாக உங்களால் நிறைவேற்றி வைக்க முடியாது... என் முன்னால் நிற்காதீர்கள்... நான் சிறிது ஓய்வெடுக்க வேண்டும்... வெளியே போய்விடுங்கள்...”

விகாரை மகாதேவியின் கோபம் தலைக்கேறிக் கொண்டிருந்தது. அழுது, அழுது அவளுடைய இரண்டு கண்களும் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

“தேவி!... கோபம், உன் நிதானத்தை மறைக்கின்றது. உனது ஆசைகளைத் தயங்காமல் கூறு... நிச்சயமாக நான் நிறைவேற்றி வைப்பேன்.”

“அப்படியா மகாராஜா!... வார்த்தை தவறமாட்டீர்கள் தானே? மகாராஜா!... மூன்றே மூன்று ஆசைகள் தான், என்னை நெருட வைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை உங்களால் நிறைவேற்றித்தர முடியுமா?”

பவளம் போன்று சிவந்த அவளுடைய சின்னஞ்சிறிய உதடுகளையும், பூரித்து பருத்த கன்னங்களையும், உள்ளத்து உணர்வின் வெப்பத்தினால் விம்மிப் புடைத்து ஒடுங்கும் மார்பையும் கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான்.

“ஆஹா... கர்ப்பகாலத்தில் தான் பெண்கள் மிகவும் அழகாக இருப்பார்களோ?”

அவளது அழகை ஆழமாக ரசித்துக்கொண்டே இருந்த காக்கவண்ண தீசன், அவள் என்ன சொல்லப்போகிறாள் என்பதைக் கேட்கும் பாவனையில் இருந்தான்.

“மகாராஜா!... எனது குழந்தை பிறந்து, இந்தப் பூமியில் கால் வைப்பதற்கு முன், நிறைவேற்றி வைக்கவேண்டிய முதலாவது ஆசை, இந்த உருகுணையில் வாழுகின்ற பெருந்தொகையான பிக்குகளுக்கு வழங்கி, நானும் பருகக்கூடிய பெரியதொரு தேன் அடையை எடுத்துத் தரவேண்டும்!...” அவளை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்த மன்னனுக்கு, அவளுடைய அற்பமான ஆசையை நினைத்துப் பார்த்தும் சிரிப்புத்தான் வந்தது.

“ம்... அடுத்து என்ன, உன் ஆசை... கூறு மகாதேவி!...”

மன்னன், ஆவலுடன் அவளுடைய அடுத்த இரு ஆசைகளையும் கூறும்படி பணித்தான்.

" மகாராஜா!... எனது, இரண்டாவது ஆசை... சிங்கள தேசத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் தமிழ் மன்னன் எல்லாளனின் முதலாவது படைத் தளபதி ஒருவனின் தலையைச் சீவிய இரத்தம் தோய்ந்த வாளைக் கழுவிய நீரை, ஆசை தீரக் குடிக்கவேண்டும். அதன் மூலம் கருவிலே வளரும் எனது மகனின் உதிரத்தில் வீரம் வளரவேண்டும். சிங்கள தேசிய உணர்வு ஊற்றெடுக்கவேண்டும். மூன்றாவதாக அனுராதபுரத்தின் வாடாத தாமரை மலர்களைக் கொய்து, மாலை கட்டி, அதனை நாள் முழுக்க அணிந்து மகிழவேண்டும்..."

அவள் மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டே, மன்னனைப் பார்த்தபடி படுத்திருந்தாள்.

"மகாதேவி!... என்ன இது?... இப்படியொரு விபரீதமான ஆசையை உன் மனதில் தேக்கி வைத்திருக்கின்றாய்! பஞ்சசீலத்தை தாரகமாகக் கொண்ட, உன்னதமான பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நீயா, இப்படி ஒரு குரூரமான எண்ணத்தை வளர்த்து வருகின்றாய்! மகாதேவி!... உனது முதலாவது ஆசையையும், மூன்றாவது ஆசையையும் இப்பொழுதே, இந்தக் கணமே என்னால் நிறைவேற்றி வைக்க முடியும்... ஆனால் தேவி!... உன்னை சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன்... உனது இரண்டாவது ஆசையை மட்டும் மறந்துவிடு... எல்லாளன்!... நீதியும், நேர்மையும் வழுவாது ஆட்சிபுரியும் ஒரு மறத்தமிழன்... அவன் தனது இனத்தைக் காத்து நல்ல முறையில் ஆட்சி செய்து வருகின்றான்... அவனைப் போன்றுதான் அவனுடைய படைத்தளபதிகளும் நீதிக்குப் புறம்பாக எதையும் செய்யமாட்டார்கள்... அவர்களைப் போய்..."

அதற்கு மேல், அவனால் எதுவுமே கூற முடியவில்லை... சோகம் கவிந்த நிலையில் தன் தலையைத் தொங்கப் போட்டபடி அரண்மனையை விட்டே வெளியேறினான்.

காக்கவண்ண தீசன் வெளியேறிய சில நாழிகைகளுள், அரண்மனை வாசலில் குதிரைகளின் குளம்பொலி கேட்டு ஓய்ந்தது.

குதிரையில் இருந்து இறங்கிய காக்கவண்ண தீசனின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதிகளில் ஒருவனான வேலுசுமண, அரண்மனையை நோக்கி விரைந்து வந்தான்.

"மகாராஜா!..... மகாராஜா!....."

மிக அவசரமாக அழைத்துக்கொண்டே வந்த தளபதி வேலுசுமண வின் குரலைக் கேட்டதும், விகாரை மகாதேவி, பள்ளியறையை விட்டு வெளியே வந்தாள்.

"வேலுசுமண!... மகாராஜா அவசர அலுவல் காரணமாக வெளியே சென்றுவிட்டார்... உன்னிடம் இருந்துதான் ஒரு உதவியை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்... நல்ல சமயத்தில் நீயே வந்துவிட்டாய்.... வா உள்ளே!..."

வியப்புடன் அவளையே பார்த்துக்கொண்டு நின்ற வேலுசுமண, மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பு போன்று, அந்தப் பட்டத்து ராணியைப் பின் தொடர்ந்து சென்றான்.

"தளபதியாரே! நான் கருவுற்றிருக்கும் நிலையில், கருவில் வளரும் எனது மகனின் உள்ளத்தில் வீரத்தையும், நாட்டுப்பற்றையும் உருவாக்க ஆசைப்படுகின்றேன்."

பெரிய பீடிகையுடன் ஆரம்பித்த மகாராணி, தன்னுடைய ஆசையை நிறைவேற்றும் பொறுப்பை தளபதி வேலுசுமணவிடம் கையளித்தாள்.

ஆம்!... பட்டத்து ராணி விகாரை மகாதேவியின் மசக்கை கால இரண்டாவது ஆசையை நிறைவேற்றுவதற்காக மன்னனுக்குத் தெரியாமலேயே எல்லாள மாமன்னனின் தலைநகரான அனுராதபுரத்திற்கு, தளபதி வேலுசுமண அனுப்பி வைக்கப்பட்டான்.

குதிரை வேலையாள் போன்று, மாறுவேடத்தில் அனுராதபுரத்திற்குச் சென்ற வேலுசுமண, தான்கொண்டு சென்ற வாளினைக் கதம்ப நதிக்கரையில் ஒழித்து வைத்துவிட்டு அரண்மனை லாயத்தில் குதிரைகளைப் பராமரிக்கும் பணியில் சேர்ந்து கொண்டான்.

அவன் அங்கிருந்தபடியே, எல்லாளனின் முதல்தர படைத் தளபதிகளில் ஒருவனான நந்த சாரதியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்துக் கொண்டு வந்தான்.

"ம்... எப்படியும், இவனைக் கதம்ப நதிக்கரைக்கு வரச் செய்ய வேண்டும். அங்கே வைத்து இந்த நந்த சாரதியின் தலையைச் சீவி இரத்தம் தோய்ந்த வாளைக் கொண்டுபோய் மகாராணியின் பாதங்களில் காணிக்கையாக்க வேண்டும்..."

அவனை ஏமாற்றி அழைத்துச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த வேலுசுமண, ஒரு நாள், 'வாகா' என்ற அரச குதிரையை எல்லோருமே, அறியக் கூடிய வகையில் கடத்திக் கொண்டு போய் கதம்ப நதிக்கரையில் கட்டி வைத்துவிட்டுக் காட்டிற்குள் உருவிய வாளுடன் மறைந்து நின்றான்.

வேலுசுமண, ராஜ குதிரையை கடத்திச் சென்று விட்டான் என்பதை அறிந்த தளபதி, நந்த சாரதி வெகுண்டெழுந்து அவனைப் பிடித்து இழுத்து வருவதற்காகத் தனது குதிரையில் காற்றாய்ப் பறந்து சென்றான்.

காற்றையும் கிழித்துக் கொண்டு புயலெனப் பாய்ந்து வந்த நந்த சாரதியைத் தூரத்தில் கண்டுவிட்ட வேலுசுமண அப்படியே மலைத்துப் போய் நின்றான்...!

"அடேயப்பா!... எல்லாளனின் படைத்தளபதிக்கே இவ்வளவு வீரமா?...."

காட்டிற்குள் மறைந்து நின்று, அவன் வருவதையே பார்த்துக் கொண்டு நின்ற வேலுசுமண, குதிரையில் வேகமாக நெருங்கி வந்த நந்த சாரதியின் தலையை கண்கள் இமைக்கும் முன்னே, தன் கூரிய வாளினால் சீவினான்.

அவன் வந்த வேகத்தில் வேலுசுமணவின் கூரிய வாள் வீச்சில், நந்த சாரதியின் தலை துண்டாடப்பட்டு, உருண்டு சென்று கதம்ப நதிக்கரையில் விழுந்தது.

நதிக்கரையில் இருந்த நந்த●சாரதியின் தலையைக் கைப்பற்றிய வேலுசுமண, இரத்தம் தோய்ந்த வாளுடன் உருகுணைக்கு வந்து, விகாரை மகாதேவியை வணங்கி, அவளிடம் அந்த வாளைக் கையளித்தான்.

"ஆஹா.... சபாஷ்!... தளபதியாரே!... எனது ஆசையை நிறைவேற்றி வீரமுள்ள ஆண்மகன் என்பதை நிரூபித்து விட்டீர்கள்... இதனூடாக வயிற்றில் வளரும் எனது மகனுக்கு தமிழர்களுக்கு எதிராக உணர்வை ஊட்டுவேன்..."

அவள், ஆர்ப்பரித்து சிரித்துக் கொண்டே, வாளில் தோய்ந்திருந்த தளபதி நந்த சாரதியின் இரத்தத்தை நீரில் கழுவிக் குடித்தாள்!

ஆம்!... அவள் குடித்த தமிழ் மன்னன் எல்லாளனின் தளபதியின் குருதி, அவளது கருவில் உருவாகி வளர்ந்து கொண்டிருந்த 'கைமுனு அபயன்' என்ற துட்டகைமுனுவின் குருதியினூடாகப் பரவி, விகாரை மகாதேவியின் ஆசையைச் செயற்படுத்தும் சக்தியாக மாற்றியது!

*(2003)*

## இந் நூலாசிரியரின் பிறநூல்கள்.....

1. *அன்னபூரணியின் அமெரிக்கப்பயணம்* *(1974)*

2. *வல்வைப் படுகொலை* *(1989)*

3. *அறிவியல் உண்மைகள்* *(1992)*

4. *உதிரம் உறைந்த மண்* *(1997)*

5. *முகாமைத்துவ நுட்பங்கள்* *(1998)*

6. *சந்நிதிச் செல்வம்* *(2000)*

7. *வட புல நாட்டார் வழக்கு* *(2002)*


8. *நீரலை (நாவல்)* *(2003)*

9. *ஈழத்துத் தமிழிலக்கியத்தில் அறிவியல் நூல்கள்* *(2003)*

# ந. அனந்தராஜ் B.A.(Hons.),M.A.

Dip-In-Education,Dip-In-Journalism,SLPS,SLEAS

(முன்னாள் அதிபர்,உதவிக் கல்விப் பணிப்பாளர், உலக வங்கியின்
வடமாகாண நிபுணத்துவ ஆலோசகர், கிழக்குப் பல்கலைக்கழக
வருகை விரிவுரையாளர், பிரபல எழுத்தாளர்)



# சிறுகதை ....!

காலத்தின் கண்ணாடி என்றும்
யதார்த்தத்தின் வெளிப்பாடு என்றும்
கூறப்படும் ஒரு புனைகதை வடிவம்!


புனை கதைகள் நடைமுறை
வாழ்வின் மனிதஅவலங்களையும்
வாழ்வியல் கோட்பாடுகளையும்
பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகத்
திகழ வேண்டும். அப்பொழுதுதான்
ஒரு காலத்தின் பதிவுகள் இன்னொரு
காலத்தின் தலை முறையினருக்குரிய
ஆவணமாகவும், வரலாற்றுப்
போதனைகளாகவும் விளங்கும்.

மனித நுண்ணுணர்வுகளின்
வெளிப்பாடுகளோ, பாலியல் உணர்வுச்
சிந்தனைகளை விதைக்கும்
சிறுகதைகளோ அந்தக் காலத்துடன்
மடிந்து விடும். அவை ஒரு போதும்
காலத்தின் கண்ணாடிகளாக
விளங்க முடியாது!

மனித அவலங்களும்,
ஒடுக்கு முறைகளும், அவனது
வாழ்வியல் தத்துவங்களும்
சிறுகதைகளாகும் பொழுது
அவை காலத்தையும் வென்று நிற்கும்!
அந்த வகையில் யதார்த்த நிலையைப்
பிரதிபலிக்கும் '**பாதசரம்**' வெறும்
கற்பனைகள் அல்ல!

**வல்லை ந. அனந்தராஜ்**

N.Ananatharaj
B.A (Hons), M.A.
Dip-in-Edu, Dip-in-Journalism
SLPS, SLEAS



ISBN 955-96845-4-X

9 789559 684541

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.